நிலா காமிக்ஸ்

# கல்கியின் பொன்னியின் செல்வன் காமிக்ஸ்



கல்கியின்

# பொன்னியின் செல்வன்

காமிக்ஸ்

நிலா காமிக்ஸ்

www.nilacomics.com


வணக்கம்... நான் கிருஷ்ணமூர்த்தி. பொன்னியின் செல்வனின் வாசகர்களுக்கு என் வணக்கம். உங்களை ஆயிரம் ஆண்டுகள் பின்னுக்கு அழைத்துச் செல்லப்போகிறேன். அது எப்படி சாத்தியம் என்று நீங்கள் எண்ணலாம். என்னுடன் சில ஓவியர்களின் துணை கொண்டு, அது சாத்தியப்படுமா என முயற்சித்துப் பார்க்க போகிறேன்....


சுந்தர சோழருக்கும், வானமா தேவிக்கும் மூன்று குழந்தைகள் பிறக்கின்றன. சுந்தர சோழரின் மீதும் அவரின் வாரிசுகளின் மீதும் மக்கள் அபரிமிதமான நம்பிக்கையும், அன்பையும் வைத்திருக்கின்றார்கள். ஒரு நாள் திடீரென்று சுந்தர சோழ மகாராஜாவுக்கு உடல் நலக்குறைவு ஏற்படுகிறது. இவ்வேளையில் பகைவர்களின் படையெடுப்பை தடுக்கவும், சோழ நாட்டின் எல்லையை விரிவுபடுத்தவும், எண்ணி மூத்த புதல்வன் ஆதித்த கரிகாலனை வட திசையின் மாதண்ட நாயகராக்கி அவனை காஞ்சிக்கும், இளைய புதல்வன் அருள்மொழி வர்மனை தென் திசையின் மாதண்ட நாயகராக்கி இலங்கைக்கும் அனுப்பி வைக்கிறார். இளவரசி குந்தவை சோழ நாட்டிலேயே இருந்து சோழ நாட்டின் நிர்வாகத்தை மந்திரி அநிருத்த பிரம்மராயருடன் இணைந்து கவனித்து வருகிறார்.
காஞ்சியிலிருக்கும் பட்டத்து இளவரசர் ஆதித்த கரிகாலருக்கு, தனது தந்தையான சுந்தர சோழ மகாராஜாவை, தனாதிகாரியாக விளங்கும் பெரிய பழுவேட்டரையர் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக செய்தி எட்டுகிறது. இதை கேட்ட இளவரசர் கொதித்தெழுகிறார். தன் பாட்டன் மலையமானின் வழிகாட்டுதலின் பேரில் தனது நண்பன் வந்தியத்தேவனை ஒற்றனாக தேர்வு செய்து தலைநகரான தஞ்சைக்கு அனுப்புகிறான். நமது நாயகனான வந்தியத்தேவன் வீராண ஏரிக்கரை வழியாக வந்து கொண்டிருக்கிறான். வாருங்கள் வீராண ஏரிக்கரையில் அவனை வரவேற்போம்.



வாசகர்களே, கொஞ்சம் நில்லுங்கள், உங்களுக்கு ஒரு முக்கிய செய்தியை சொல்லியாக வேண்டும். இன்று தண்ணீரை நீல தங்கம் என்று வர்ணிக்கிறார்கள் பொருளாதார நிபுணர்கள். அதை அன்றே உணர்ந்தவர்கள் நமது சோழர்கள். அதற்கு மிகச் சிறந்த சான்று கரிகாலனின் கல்லணையும், இராஜாதித்தனின் வீராணமும். இப்போது நாம் வீராணம் ஏரி பிறந்த வரலாற்றை கொஞ்சம் தெரிந்து கொள்வோம்.

பராந்தக சக்கரவர்த்தியின் மூத்த புதல்வர் இராஜாதித்தர் வட நாட்டின் மீது படையெடுத்து செல்ல ஒரு பெரும் படை திரட்டுகிறார். வீரர்களுக்கான பயிற்சி திருமுனைப்பாடி நாட்டில் நடைபெற்றது. அப்பகுதி மக்களின் விவசாயம் பாதிக்கப்படுகிறது. ஆனால், அதையெல்லாம் அப்பகுதி மக்கள் பொருட்படுத்தவில்லை. இவர்களின் போர் பயிற்சிக்கு மக்கள் உறுதுணையாக இருக்கிறார்கள். இத்தகைய மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு காலத்தால் மக்களுக்கு பயன்படும் வகையில் போர் பயிற்சியின் இடைப்பட்ட நேரத்தில் தன் வீரர்களைக் கொண்டு இந்த கடல் போன்ற வீராண ஏரியை உருவாக்கினார்கள் சோழர்கள். நீர் மேலாண்மையை நன்கு உணர்ந்திருந்தார்கள் என்பதற்கு இவ்வீராணம் ஏரியே சான்று...






வீராணம் ஏரி பராந்தக சோழரின் ஆட்சி காலத்தில் (907 - 950) உருவாக்கப்பட்டது. இது தமிழ் நாட்டின் கடலூர் மாவட்டத்தில் உள்ளது. இதன் நீளம் 11.2 கி.மீ, அகலம் 14 கி.மீ உள்ளது. இதன் கொள்ளளவு 1,445 மில்லியன் கன அடி நீர் ஆகும்.


வீராணம் ஏரி.


அன்று ஆடி பதினெட்டு. மக்கள் கூட்டம், கூட்டமாக விழாவை கொண்டாட ஏரிக்கரைக்கு வருகிறார்கள்.
ஏய்ய்...
ஏய்ய்...
ஜல்... ஜல்... ஜல்...


மேளதாளங்களுடன், வாழை மட்டையால் செய்த சப்பரங்களை இழுத்து கொண்டு வருகிறார்கள்.


வீராணம் ஏரியின் புது வெள்ளத்தில்,
சிறுவர்கள் குளித்து மகிழ்கிறார்கள்.


சோழ நாட்டில் மண் வளமும், நீர் வளமும் சிறப்பாக இருந்ததால் மக்கள் விவசாயத்தில் முன்னோடியாக திகழ்கிறார்கள்.


உழவன் விதை நெல் தெளிக்கிறான். பெண்கள் புல் கட்டு சுமந்து செல்கிறார்கள்.


நமது நாயகன் வந்தியத்தேவன் சோழ நாட்டு வளங்களை ரசித்துக்கொண்டு வருகிறான்.
இங்கு பாருங்கள், ஒரு உழவன் வாய்க்காலில் வரும் நீரை அப்படியே வாரி பருகுகிறான். இது இன்றைய மக்களாகிய நமக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணலாம். ஆனால், அன்று மக்கள் நீர் நிலைகளை சுத்தமாக பராமரித்தார்கள் என்பதை நாம் உணர வேண்டும்.


விவசாயிகள் உழவு பாட்டு பாடுகிறார்கள்.


பெண்கள் நடவு பாட்டு பாடுகிறார்கள்.


நமது நாயகன் வந்தியத்தேவன் இதையெல்லாம் பார்த்தும், கேட்டும்,
ரசித்துக்கொண்டும் வருகிறான்.


ஆகா... எத்தனை பெரிய ஏரி! கடல் போல் அல்லவா பரந்து விரிந்திருக்கிறது, இராஜாதித்தருக்கு இணை இராஜாதித்தர் தான்.
இந்த சோழ மன்னர்களே வித்தியாசமானவர்கள் தான். அவர்கள் வீரத்தில் எப்படியோ அப்படியே அறத்திலும், அறத்தில் எப்படியோ அப்படியே தெய்வ பக்தியிலும் சிறந்தவர்கள்.


கைய நீட்டு...


சிந்தாம சாப்பிடுங்க...
தம்பி...


ஆகா! சோழநாட்டு பெண்கள் அழகானவர்கள் என்று கேள்விப்பட்டதுண்டு. ஆனால், இங்கு இருக்கும் ஒவ்வொரு பெண்ணும் தேவதை போல் அல்லவா காட்சி அளிக்கிறார்கள்! நம் கூடாரத்தை இங்கேயே அடித்து விட வேண்டியது தான்.
என்னடி, எல்லோரும் அந்த குதிரை மேல் இருக்கும் வீரனையே பாக்குறீங்க! அவன் என்ன மன்மதனா? இல்ல சுந்தர சோழனா...?
ஏய்.... கொஞ்சம் சும்மா இருடி அப்புறம் பேசலாம்.


தம்பி... நான் கூப்பிடுவது காதுல விழலயா...? இந்த பாட்டி கையால கொஞ்சம் சக்கரை பொங்கல் சாப்பிடு.
இருக்கட்டும் பாட்டி... பக்கத்தில தான் என் நண்பன் வீடு...
அப்போது தூரத்தில் படகுகள் வருவதை வந்தியத்தேவன் பார்க்கிறான்.
என்ன இவ்வளவு படகுகள் வருகின்றன?


ஐயா, அந்த படகுல யார் வருகிறார்கள்?
என்ன தம்பி இது கூட தெரியாதா... ? அந்த படகுல என்ன சின்னம் போட்டிருக்கு பாரு...
பனை மரச் சின்னம் !
இவனைப் பார்த்ததும் வெளியூர் என்று யூகித்த பெரியவர்.
தம்பி வெளியூரா ? அதான்... அதுல பெரிய பழுவேட்டரையர் வராரு, இந்த அறுபது பிராயத்துக்கு பின்னும் எவ்வளவு துடிப்பா இருப்பாரு பாரு... அவரை பார்த்தா கோழையும் வீரனாயிருவான்ல...


ஆகா... என்ன என் அதிர்ஷ்டம்! அந்த மகா வீரரை சந்திக்க வேண்டும் என்று வெகு காலமாக எண்ணி இருந்தேன். நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இல்லை, இல்லை, இளவரசர் கரிகாலர் கூறியதை மறந்துவிட்டோமே... பழுவேட்டரையர்களின் கண்ணில் அகப்படாமல் அல்லவா நான் இந்த ஓலையை எடுத்துச்செல்ல வேண்டும்.


ஆம், நாம் அவரை சந்திக்காமல் இருப்பது தான் நல்லது. அவர்கள் செல்லும் வரை இந்த மரத்தின் மறைவில் நிற்போம். என்ன இது, நம்ம குணத்திற்கு மாறாக கோழையைப் போல் மறைந்து செல்ல வேண்டியிருக்கிறதே...!
என்று மனம் வருந்துகிறான் நம் நாயகன். வீரன் அல்லவா அவன்.


ஏன்னா, பார்த்தேளா ? பெரிய பழுவேட்டரையர் புதுசா கலியாணம் ஆன மாப்பிள்ளை மாதிரி இல்ல இருக்காரு!
ஏண்டி வாய மூடிண்டு இருக்கியா... அவா சங்கதியெல்லாம் நமக்கு எதுக்கு?


இவர் தான் பெரிய பழுவேட்டரையரா?
ஆமா... இவர் தான்.
பெரிய பழுவேட்டரையர் சமீபத்துல நந்தினி என்ற இளம் வயதுப் பெண்ணை திருமணம் செய்து கொண்டார். அதை மக்கள் அரசல் புரசலாக பேசிக்கொள்கிறார்கள்.


பழுவேட்டரையருக்காக காத்திருக்கும்
பரிவாரங்களைக் கண்ட வந்தியத்தேவன்,
ஆகா.. இது அல்லவோ வரவேற்பு !
பழுவேட்டரையர் யானையின் மேல் அமர்ந்து செல்கிறார்.


என் வெகுநாள் ஆசைகள் கூடிய விரைவில் நிறை
வேற போகுது. சுந்தர சோழ மகாராஜாவையும்,
இளவரசி குந்தவையையும் சந்திக்க போகிறேன்.
வழியில் தடை நேராமல் இருக்க வேண்டும்...
எந்த தடை நேர்ந்தால் என்ன! கையில் வாள்
இருக்கிறது, நெஞ்சில் துணிவு இருக்கிறது,
பிறகு நமக்கு என்ன கவலை.
ம்... இவைகள் எல்லாம் இருந்தும்
என்ன பலன். இளவரசர் கரிகாலர்
நம் கையை கட்டிப்போட்டுவிட்டாரே...
ஒப்புவித்த காரியம் முடியும் வரை
யாரிடமும் சண்டை பிடிக்க கூடாது
என்று கூறிவிட்டாரே... எப்படியோ
இதுவரை நாம் அதை கடைபிடித்து
விட்டோம்.
நண்பா, தலைநகர் தஞ்சைக்கு
எப்போதாவது நீ வருவதாக
இருந்தால் அவசியம் கடம்பூரில்
உள்ள என் வீட்டுக்கு வர வேண்டும்.
(கந்தமாறன்)
இன்று ஆதவன் மறைவதற்
குள் எப்படியும் கடம்பூர்
சென்று விட வேண்டும்.




வந்தியத்தேவன் வீராணத்திலிருந்து கடம்பூருக்கு விண்ணகரக் கோயில் வழியாக செல்கிறான். அப்பொழுது அங்கு விவாதம் நடைபெறுகிறது. அதை அவன் கவனிக்கிறான். அக்காலத்தில் சமய சண்டைகள் ஆங்காங்கு நடைபெறுவது வழக்கம். விவாதம் எங்கெல்லாம் நடைபெறுகிறதோ, அங்கெல்லாம் நம் ஆழ்வார்க்கடியான் இருப்பான். அவன் ஒரு விஷ்ணு பக்தன். இந்த விவாதத்திலேயும் இருப்பான். வாருங்கள் அருகே சென்று பார்க்கலாம்...





ஓய் நம்பி...
என்ன? சொல்லுங்காணும்...
சிவபெருமானுடைய முடியைக் காண்பதற்கு பிரம்மாவும், அடியை காண்பதற்கு திருமாலும் முயன்றார்களா இல்லையா? முடியும், அடியும் காணாமல் இருவரும் வந்து சிவபெருமானுடைய பாதங்களில் சரணாகதி அடைந்தார்களா இல்லையா..?


சரிதாங்காணும், நிறுத்தும் உம் பேச்சை! இராவணனுக்கு உம்முடைய சிவன் வரம் கொடுத்தாரே... அந்த வரங்கள் எல்லாம் எங்கள் திருமாலின் அவதாரமாகிய இராம பிரானின் முன்னால் தவிடுபொடியாகப் போகவில்லையா?


வேதாந்தி அவர்களை இடைமறித்து...
நீங்கள் இருவரும் எதற்காக வீணில் வாதம் இடுகிறீர்கள். சிவன் பெரிய தெய்வமா? விஷ்ணு பெரிய தெய்வமா? என்று எத்தனை நேரம் நீங்கள் வாதித்தாலும் விவகாரம் தீராது.


இந்தக் கேள்விக்கு பதில் வேதாந்தம் சொல்கிறது. நீங்கள் கீழான பக்தி மார்க்கத்தில் இருக்கின்ற வரையில் தான் சிவன், விஷ்ணு என்று சண்டையிடுவீர்கள். பக்திக்கு மேலே ஞானமார்க்கம் இருக்கிறது, ஞானத்துக்கு மேலே ஞாஸம் என்று ஒன்று இருக்கிறது. அந்த நிலையை அடைந்து விட்டால் சிவனும் இல்லை... விஷ்ணுவும் இல்லை....


ஓய் சன்யாசி, நிறுத்தும்! உம்முடைய சங்கராச்சாரியார் அவ்வளவு உபநிஷதங்களுக்கும், பகவத்கீதைக்கும், பிரம்ம சூத்திரத்துக்கும் பாஷ்யம் எழுதிவிட்டு கடைசியில் என்ன சொன்னார் தெரியுமா?
"பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம்
பஜ கோவிந்தம் மூடமதே"
என்று உம்மைப் போன்ற மௌடீகர்களைப்
பார்த்துத்தான் மூடமதே என்று சொன்னார்.
அடே, முன் தருமி நம்பி.



என்னை மூடமதி என்று சொன்னது சரி தான். ஏனென்றால், உன் கையில் வெறுந்தடியை வைத்துக் கொண்டிருக்கும் நீ, வெறுந்தடியன் ஆகிறாய். உன்னை போன்ற வெறுந்தடியனோடு பேச வந்தது என்னுடைய மூடமதியினால் தானே?
கோவமாக! ஆழ்வார்க்கடியான் தடியை சுற்றிக்கொண்டு,
ஓய் சுவாமிகளே! என் கையில் வைத்திருப்பது வெறுந்தடியல்ல உம் மொட்டை மண்டையை உடைக்கும் சக்தி உடையதுங்காணும்.
மக்கள்...
அந்த வைஷ்ணவன பார்த்திங்களா! எப்படி முரட்டுத்தனமா பேசுறான். அரசாங்கத்தில் ஏதோ முக்கிய பதவியில் இருப்பான் போல் இருக்கிறது.
இருக்கும்... இருக்கும்...


அப்பனே நிறுத்திக்கொள், தடி உன்னுடைய கையிலேயே இருக்கட்டும். அப்படியே நீ உன் கைத்தடியால் என்னை அடித்தாலும், அதற்காக நான் கோபங் கொள்ளமாட்டேன். உன்னுடன் சண்டைக்கு வரவும் மாட்டேன். அடிப்பதும் பிரம்மம், அடிபடுவதும் பிரம்மம். என்னை நீ அடித்தால் உன்னையே அடித்துக் கொள்கிறவனாவாய்.
ஆழ்வார்க்கடியானுக்கு கோவம் வருகிறது.


ஆழ்வார்க்கடியான் பொது மக்களைப் பார்த்து...
இதோ! எல்லோரும் பாருங்கள், பிரம்மத்தை பரப்பிரம்மம் திருச்சாத்துச் சாத்தப் போகிறது. என்னை நானே தடி கொண்டு தாக்கப் போகிறேன்.
ஆழ்வார்க்கடியான் தன்னை அடிக்க தயாராவதை அறிந்த வேதாந்தி, அவ்விடத்தை விட்டு பக்குவமாக வெளியேறுகிறார்.


தடியை சுழற்றியவாறு...
எங்கே அந்த வேதாந்தி, ஓடி விட்டானா?


எதிரில் இருக்கும் சிவனடியாரை பார்த்து...
ஓய் பாததூளி பட்டரே! நீர் என்ன சொல்லுகிறீர்? மேலும் வாதம் செய்ய விரும்புகிறீரா? அல்லது சுவாமியாரைப் போல் நீரும் ஓட்டம் எடுக்கிறீரா?


(சிவனடியார் நையாண்டியாக...) நானா? ஒரு நாளும் அந்த வேதாந்தியைப் போல் ஓட்டம் எடுக்க மாட்டேன். என்னையும் கண்ணன் என்று நினைத்தீரா? கோபியர் வீட்டில் வெண்ணெய் திருடி உண்டு, மத்தால் அடிபட்டவன் தானே உம்முடைய கண்ணன்!
ஏன் காணும்? உம்முடைய பரமசிவன் பிட்டுக்கு மண் சுமந்து முதுகில் அடிபட்டதை மறந்துவிட்டீரா?


ஆழ்வார்க்கடியான் விவாதம் செய்யும் போது மற்றவர்களை தன் தடியை வைத்து மிரட்டுவதை கண்ட வந்தியத்தேவனுக்கு கோபம் வருகிறது.
அவன் தடியை பிடுங்கி, அவனை நாலு சாத்து சாத்தலாமா...!
இந்த மூட சண்டையை எப்படியும் தடுத்து நிறுத்த வேண்டும்!


வந்தியத்தேவன் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் விதமாக,
அனைவரும் கொஞ்சம் அமைதியாக இருங்கள்.


வந்தியத்தேவன் மிரட்டும் விதமாக,
ஐயா, எதற்காக நீங்கள் சண்டை போடுகிறீர்கள்? வேறு வேலை ஒன்றும் உங்களுக்கு இல்லையா? சண்டைக்கு தினவு எடுத்தால் ஈழ நாட்டுக்கு போவது தானே...


அதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக...
இவன் யாரடா நியாயம் சொல்ல வந்தவன்?
ம்... இவன் தான் இந்த முரட்டு வைஷ்ணவனுக்கு சரியான ஆளு!


பொதுவானவர்கள்.
தம்பி நீ சொல்லு.. தம்பி நீ சொல்லு...
சொல்லு...
சொல்லு...


வந்தியத்தேவன் அனைவரையும் பார்த்து...
எனக்கு தெரிந்த நியாயத்தைச் சொல்லுகிறேன். சிவபெருமானும், நாராயண மூர்த்தியும் சண்டை போட்டுகொள்வதாகத் தெரியவில்லை. அவர்கள் சினேகமாகவும், சுமுகமாகவும் இருந்து வருகிறார்கள். அப்படி இருக்க இந்த நம்பியும் பட்டரும் எதற்காக சண்டை போட வேண்டும்.


இந்த பிள்ளை அறிவாளியாகவே தோன்றுகிறான். ஆனால், வேடிக்கை பேச்சினால் விவாதம் தீர்ந்துவிடுமா? சிவபெருமான் திருமாலை விட பெரிய தெய்வமா? இல்லையா? என்ற கேள்விக்கு இவன் விடை சொல்லட்டும்.
சிவனும் பெரிய தெய்வந்தான், திருமாலும் பெரிய தெய்வந்தான். இருவரும் சமமான தெய்வங்கள். யாரை வேண்டுமானாலும் தொழுது கொள்ளுங்கள், சண்டை எதற்கு?
ஆழ்வார்க்கடியான் இடைமறித்து...
அது எப்படி சொல்லலாம்? சிவனும், விஷ்ணுவும் சமமான தெய்வங்கள் என்று! சொல்வதற்கு ஆதாரம் என்ன?



வந்தியத்தேவன் யோசனை செய்கிறான்...
ம்... ம்...
வந்தியத்தேவனின் யோசனையை கண்ட வைஷ்ணவன்,
தம்பி வசமா மாட்டிகிட்டான்...
ஆங்.... ஆதாரமா?


இதோ சொல்லுகிறேன், நேற்று மாலை
வைகுண்டத்துக்கு போயிருந்தேன்.


அதே சமயத்தில் பரமசிவனும் அங்கே வந்திருந்தார்.
இருவரும் சம ஆசனத்தில் அமர்ந்திருந்தார்கள்.
அவர்களுடைய உயரம் ஒன்றாகவே இருந்தது.


ஆயினும், ஐய்யத்துக்கு இடமின்றி என் கையினால் இருவர் உயரத்தையும் முழம் போட்டு அளந்து பார்த்தேன்.
க்ர்...
...க்ர்
அளந்து பார்த்ததில், இருவரும் சமமான உயரமே இருந்தார்கள்.


ஆஹா... ஆஹா...
ஆஹா... ஆஹா...
ஆஹா... ஆஹா...


என்ன தம்பி, பரிகாசமா செய்கிறாய்...?
...க்ர்
...க்ர்


சொல்லு...
தம்பி நீ சொல்லு...
உனக்கு பக்கபலமாக
நாங்கள் இருக்கோம்.
சொல்லு...
சொல்லு...
ம்...
அவர்கள் என்ன
சொன்னார்கள்
தெரியுமா?


அரியும் சிவனும் ஒண்ணு,
அறியாதவன் வாயில...?
இவன் என்ன சொல்லப் போறான்...!
???...
?
?


மண்ணு...


அங்கு விவாதம் செய்தவர்கள் மேல் மண்ணை வாரி தூத்துகிறார்கள்...
வீக்க்...
வீக்க்...
வீக்க்...
விடாதே அடி
டம்...
நிறுத்துங்கள்,
இல்லையென்றால்
சபித்துவிடுவேன்
டம்...
டம்ம்...
விடாதே அடி
டம்ம்...


அடே... தூர்த்தர்களா!
என் மீதா மண்ணை
வாரி தூத்துகிறீங்க?
இதோ வரேன், என்று தடியை சுற்றிக்கொண்டே கூட்டத்தினரை விரட்டுகிறான்.
கட்டியம் கூறுதல்
டம்...
... டம்
சூராதி சூரர், வீரப்பிரதாபர், மாற பாண்டியன்
படையை வீறுகொண்டு தாக்கி வேரோடு அறுத்த
வெற்றி வேல் உடையார், இருபத்து நாலு போர்
களில் சண்டையிட்டு அறுபத்து நான்கு விழுப்
புண்களைப் பெற்ற திருமேனியர்.


சூராதி சூரர்! வீரப்பிரதாபர்! மாறபாண்டியன் படையை வீறு கொண்டு தாக்கி வேரோடு அறுத்த வெற்றிவேல் உடையார்!
இருபத்து நான்கு போர்களில் சண்டையிட்டு, அறுபத்து நான்கு விழுப்புண்களை பெற்ற திருமேனியர்!
சோழ நாட்டு தனாதிகாரி, தான்யபண்டார நாயகர், இறைவிதிக்கும் தேவர், பெரிய பழுவேட்டரையர் விஜயம் செய்கிறார்.... பராக்... பராக்...


பழுவேட்டரையரே நேரடியாக கடம்பூருக்கு வருகிறார் என்றால், நிச்சயம் ஏதோ முக்கியமான விஷயமாக தான் இருக்கனும்!
உனக்கு தெரியாதா அந்த விஷயம்? நம்ம இளவரசி மணிமேகலையை கண்டராதித்தரின் மகன் மதுராந்தகருக்கு மணம் முடிக்க போறதா ஊர்ல பேசிக்கிறாங்க...
அவருக்கு தான் ஏற்கனவே திருமணம் ஆயிருச்சே!
நம்ம மாதிரி சம்சாரிக்குத்தான் ஒரு திருமணம், அவங்க எல்லாம் அரசியல் காரணத்துக்காக பல திருமணங்கள் செஞ்சுக்குவாங்க.
ஆமா... அந்த மூடு பல்லக்குல போறது யாரு?
பழுவூர் ராணியாகத்தான் இருக்கமுடியும்.
ஏந்த பழுவூர் ராணிய சொல்ற?
வேற யாரு? பாண்டிய நாட்டு யுத்தத்துக்கு போயிட்டு வரும் போது... ஒரு பெண்ணை கூட்டிட்டு வந்தாரே, அவங்களாகத் தான் இருக்கும்.
அவங்க பேரழகியாமே...!
அதான் பழுவேட்டரையர் மூடுபல்லக்கில் கூட்டிட்டு போறாரு...
ஆழ்வார்க்கடியான் எப்படியாவது அந்த மூடுபல்லக்கில் செல்லும் நபரிடம் ஒரு ஓலையை கொடுக்க எண்ணுகிறான்.


பெரிய பழுவேட்டரையர் பாண்டிய நாட்டு வெற்றிக்கு பிறகு, தான் வரும் வழியில் ஒரு அழகிய பெண்ணை சந்திக்கிறார். அவள் பெயர் நந்தினி. அவள் அழகில் மயங்கி அவளை தனது ஆசை நாயகியாக்கிக்கொள்கிறார். அது குறித்து மக்கள் பலரும் பலவாறு பேசிக்கொள்கிறார்கள்.
ஆழ்வார்க்கடியான் பல்லக்கில் இருக்கும் உருவத்தை கூர்ந்து கவனிக்கிறான்.
பல்லக்கிலிருந்த உருவம் திரையை விலக்கி வெளியே எட்டி பார்க்கிறது.
ஆழ்வார்க்கடியானை கண்டதும் சட்டென்று திரையை மூடிக்கொள்கிறது.


ஆழ்வார்க்கடியான் சோழநாட்டின் முதன்மை மந்திரியான அநிருத்தபிரம்மராயரின் சீடன்.


குருநாதர் கொடுத்த ஓலையை எப்படியாவது கொடுத்துவிடலாம் என்றால், அதற்கான சந்தர்ப்பம் கிடைக்காமல் போயிற்றே... அப்படியென்றால், கடம்பூர் சென்றுதான் முயற்சித்து பார்க்க வேண்டும். ஆனால், கடம்பூர் அரண்மனைக்கு உள்ளே நம்மை அனுமதிக்க மாட்டார்களே... ம்...



பல்லக்கில் செல்லும் பெண்ணை நினைத்து.
ஆஹா எத்தனை அழகு! அவளின் கையே இத்தனை அழகு என்றால், அவளின் முகம்...
டேய் இந்த குருதைய பாருடா...
இது குருதை இல்லைடா, குதிரை....
இவ்வாறு வந்தியத்தேவன் ரசித்துக் கொண்டிருக்கையில், பழுவேட்டரையரின் ஆட்கள் குதிரையிடம் வம்பு செய்கிறார்கள்.
டேய்... உங்க இலக்கோண ஆராய்ச்சி இருக்கட்டும், அது குதிரையா இல்ல கழுதையான்னு பாருங்கடா....?
பழுவேட்டரையரின் ஆட்கள் தன் குதிரையிடம் செய்யும் சேட்டையை, தூரத்திலிருந்து கோபத்துடன் பார்த்துக் கொண்டிருக்கின்றான்.
இவனெல்லாம் ஒரு ஆளு... இவன் நம்ம மேல ஏற பார்க்கிறான், விடக்கூடாது.


குதிரை அவனை ஏறவிடாமல் திமிறுகிறது.
இது பொல்லாத குதிரைடா இதன் மேல நான் ஏறக் கூடாதாம்...
பரம்பரையான அரசகுலத்துல வந்தவன் தான் ஏறணுமா...ம்மா? ம்... அதையும் தான் சோதித்து பார்த்துவிடலாம்.


ஆனால் குதிரை அவனை தன் மீது ஏறவிடாமல் தள்ளிவிடுகிறது.
நான் அப்போதே சொல்லல அது குதிரை இல்லடா, கழுதேன்னு...
ஆ ஆ ஆ....


இந்த குதிரை யாருடையதாக இருக்கும்? ஒரு வேளை நம்மிடம் துருக்கா பேசினானே அவனுடையதாக இருக்குமோ? நிச்சயம் அந்த வாலிபனுடையதாகத் தான் இருக்கும். சரி... அவனிடம் ஏதாவது பேச்சு கொடுத்தால் நமக்கு கடம்பூர் செல்ல வழி கிடைத்தாலும் கிடைக்கும்.


டேய்... அந்த கழுதையை பிடிச்சு கட்டுங்கடா...
பழுவேட்டரையரின் ஆட்கள் தன் குதிரையிடம் செய்யும் சேட்டையை கண்டு, வந்தியத்தேவனின் கை தானாகவே தன் உறைவாளுக்கு செல்கிறது. அவர்களை ஒரு கை பார்த்துவிடலாம் என்று எண்ணுகிறான். அப்போது தனது நண்பனும், எஜமானும் ஆன கரிகாலன் கூறியது நினைவுக்கு வருகிறது.


காஞ்சி அரண்மனை.
வந்தியத்தேவா நீ சிறந்த அறிவாளி என்று நம்பி, இந்த ஓலையை உன்னிடம் ஒப்படைக்கின்றேன். ஒன்று சக்கரவர்த்தியிடமும், மற்றொன்று என் சகோதரி குந்தவையிடமும் சேர்க்க வேண்டும். நீ என்னிடம் இருந்து ஓலை கொண்டு செல்வது யாருக்கும் தெரியக்கூடாது. முக்கியமாக பழுவேட்டரையரிடமும், எனது சிறிய தந்தை மதுராந்தகரிடமும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்!


மீண்டும் ஒரு முறை எச்சரித்து...
வந்தியத்தேவா! நீ மாவீரன் என்பதை நான் நன்கறிவேன். நீ அதை நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. ஆகையால், வலிய வரும் சண்டையிலிருந்து விலகிக் கொள்வதால் உனக்கு கௌரவக் குறைச்சல் ஒன்றும் வந்துவிடாது. இதை நீ நமது நட்பிற்காக செய்ய வேண்டும்.


என்று கூறியது அவன் நினைவுக்கு வருகிறது.
ஆகையால், பழுவேட்டரையரின் ஆட்களுக்கு வேறு ஒரு நல்ல சந்தர்ப்பத்தில் பாடம் புகட்டலாம் என்று தனக்கு தானே சமாதானப்படுத்திக் கொள்கிறான்.


பழுவேட்டரையரின் வீரர்களில் ஒருவன் குதிரையின் வாலை பிடித்து முறுக்கிவிடுகிறான். குதிரை கூட்டத்தினுள் சீறிப்பாய்ந்து ஓடுகிறது.



ஆ...ஆ...ஆ
ஹா..ஹா...
ஹா..ஹா...
ஹா..ஹா
என்ன தம்பி! உன் வீர தீரத்தை அவர்களிடம் காட்ட வேண்டியது தானே?
ஆழ்வார்க்கடியான் கூறியதை கேட்டு வந்தியத்தேவனுக்கு ஆத்திரம் வருகிறது. ஆனா லும் தன் உறைவாளை வேக மாக உள்ளே தள்ளுகிறான்.


இவன் நம்மை விடமாட்டான் போலிருக்கிறதே...
சரி... சரி... அதை விடு... நீ கடம்பூர் தானே போற...
இந்த வைஷ்ணவனுக்கு இதெல்லாம் எப்படி தெரியுது!
என்ன தம்பி யோசிக்கிறாய்?
உனக்கு மந்திரம் தந்திரம் தெரியுமா என்ன? நான் கடம்பூர் போவது உனக்கு எப்படி தெரியும்?
இதில் என்ன அதிசயம் தம்பி, இன்றைக்கு பல ஊர்களிலிருந்து விருந்தாளிகள் கடம்பூருக்கு வருகிறார்கள். உன்னை பார்த்தாலும் பெரிய இடத்து பிள்ளையை போல் இருப்பதால் கேட்டேன்.
உண்மையாகவா சொல்கிறீர்?
இதை கேட்ட வந்தியத்தேவனுக்கு மனதிற்குள் மகிழ்ச்சி ஏற்படுகிறது. இது அனைவருக்கும் இயல்பானது தானே.


இந்த வைஷ்ணவன் நம்மிடம் ஏதோ விஷயத்தை கறக்க பார்க்கிறான்... அவனா, நானா என்று பார்த்துவிடுவோம்.
தம்பி, எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா?
இந்த பகுதிக்கு நானே புதியவன். என்னால் என்ன உதவி செய்ய முடியும் ?
இன்றிரவு என்னை கடம்பூர் அரண்மனைக்கு அழைத்துச் செல்ல முடியுமா ?
எதற்காக? அங்கே யாராவது வீரசைவர் வருகிறாரா? அவரிடம் சிவன் பெரிய தெய்வமா இல்லை விஷ்ணு பெரிய தெய்வமா? என்று விவாதிப்பதற்கா?
இல்லை... இல்லை, சண்டை பிடிப்பதே என் வேலை என்று நினைக்க வேண்டாம். இன்றிரவு அங்கு பெரிய விருந்தும், விருந்துக்கு பின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற போகிறது. எனக்கு குரவைக் கூத்து பார்க்க வேண்டும் என்று ஆசை...
அப்படி இருந்தாலும் நான் எப்படி உன்னை அழைத்து போக முடியும்?
என்னை உன் பணியாளன் என்று சொன்னால் போகிறது...


அந்த மாதிரி ஏமாற்று மோசடிக்கெல்லாம் நீ வேறு யாரையாவது பார்க்க வேண்டும். உன்னை போன்ற பணியாளன் எனக்கு தேவையில்லை. சொன்னால் யாரும் நம்பவும் மாட்டார்கள்.
நீ சொல்வதையெல்லாம் பார்த்தால் என்னையே இன்று கோட்டைக்குள் விடுவார்களா? என்று சந்தேகம் உண்டாகிறது.
என்று கூறிவிட்டு வந்தியத்தேவன் கோபமாக அங்கிருந்து செல்கிறான். அவனை விடாமல் பின் தொடர்ந்து ஆழ்வார்க்கடியானும் செல்கிறான்.


ஆழ்வாக்கடியான் தன்னை பின் தொடர்வதை கண்ட வந்தியத்தேவன்,
என்னை ஏன் இன்னும் நீ பின் தொடர்ந்து வருகிறாய் ?
அந்த கேள்வியை நானும் திருப்பிக் கேட்கலாமா ?
வழி தெரியாத குற்றத்தினால் தான். ஆமா, அப்போ நீர் எங்கு போகிறீர்? கடம்பூருக்குத் தானே?
நீ தான் என்னை அழைத்து செல்லமாட்டேன் என்று கூறி விட்டாயே, நான் விண்ணகரக் கோவிலுக்குப் போகிறேன்.
வீரநாராயணப் பெருமாள் சன்னிதிக்குத் தானே?
ஆமாம்.
அப்படியென்றால் நானும் உன்னுடன் வருகிறேன்.
ஒரு வேளை, நீ விஷ்ணு ஆலயத்திற்கு வரமாட்டாய் என்று பார்த்தேன்.


தம்பி... இங்கே ஈஸ்வர முனிகள் என்ற பட்டர், பெருமாளுக்கு கைங்கரியம் செய்து கொண்டிருக்கிறார். அவர் ஒரு பெரிய மகான்.
நானும் கேள்விப் பட்டிருக்கின்றேன்.
ஆமாம்... இங்கே ஒரே கொண்டாட் டமாக இருக்கிறதே. இன்று ஏதா வது முக்கிய திருநாளா?
திருநாளே... தான். இன்று ஆடி பதினெட்டு. அதோடு, ஆண்டாளின் திருநட்சத்தி ரமும் சேர்ந்து கொண்டது.
அம்பி நமஸ்காரம், விவாதம் முடிந்துடுத்தா? பிள்ளையாண் டான் யாரு, நோக்கு வேண்டிய பட்டவனா?
ஆமாம்
ஆழ்வார்க்கடியானும், வந்தியத்தேவனும் பேசிக்கொண்டே வீரநாராயணப் பெருமாள் கோயிலுக்கு செல்கின்றனர்.


விஜயாலய சோழனின் பேரன் முதற் பராந்தகசோழன். அவனே
மதுரையும், ஈழமும் கொண்ட கோப்பரகேசரி என்ற பட்டம் பெற்றவன்.
சோழப் பேரரசுக்கு அஸ்திவாரம் அமைத்தவன் அவனே. தில்லைச்
சிற்றம்பலத்துக்கு பொன் கூரை வேய்ந்து சரித்திரப் புகழ்
பெற்றவன். சோழ சிகாமணி, சூரசிகாமணி முதலிய பல விருது
பெயர்களோடு, வீரநாராயணன் எனும் சிறப்பு பெயரையும் அவன்
கொண்டிருந்தான். அவனின் மகன் இராஜாதித்தன், தனது தந்தையின்
பெயரால், மக்களுக்கு பயன் பெற உருவாக்கியதே வீரநாராயண ஏரி.
அதன் கரையை காப்பதற்கு, ஸ்ரீமத் நாராயணமூர்த்திக்கு ஆலயம்
எழுப்பியிருந்தார்கள். நீர் நிலையங்களை காப்பதற்கு ஸ்ரீமத்
நாராயணமூர்த்திக்கு ஆலயம் எழுப்புவது அக்கால வழக்கம். அந்த
ஆலயத்திற்குத்தான் ஆழ்வார்க்கடியானும், வந்தியத்தேவனும்
செல்கின்றனர். நாமும் அவர்களுடன் செல்வோம்.


"பொலிக பொலிக பொலிக
போயிற்று வல்லுயிர்ச்சாபம்
நலியும் நரகமும் நைந்த
நமனுக் கிங்கு யாதொன்றுமில்லை
கலியும் கெடும் கண்டு கொள்மின்
கடல் வண்ணன் பூதங்கள் மண்மேல்
மலியப் புகுந்து இசைபாடி
ஆடி உழி தரக் கண்டோம்!
கண்டோம் கண்டோம் கண்டோம்
கண்ணுக் கினியன கண்டோம்!
தொண்டீர் எல்லீரும் வாரீர்!
தொழுது தொழுது நின்றார்த்தும்!
வண்டார் தண்ணந் துழாயான்
மாதவன் பூதங்கள் மண்மேல்
பண்டான் பாடி நின்றாடிப்
பரந்து திரிகின்றனவே!"
(ஆழ்வார்க்கடியான் மனமுருகி பாடு வதை கண்ட வந்தியத்தேவன்.) ஆஹா, அற்புதமாக பாடுகிறானே! இவனை ஒரு முரட்டு வைஷ்ணவன் என்றல்லவா நினைத்தேன்.
ஆழ்வார்க்கடியானுடன் சேர்ந்து, ஒரு சிறுவனும் மழலைக் குரலில் பாடுகிறான். அதை அங்கிருப்பவர்கள் அனைவரும் கேட்டு மகிழ்கின்றனர்.


வாசகர்களே...
நன்னா பெருமாளை சேவிச்சிக்கோங்கோ.
ஆழ்வார்க்கடியான் மனமுருகி பாசுரத்தை பாடி முடிக்கிறான்.


ஆழ்வார்க்கடியான் பாடி முடித்தவுடன் பட்டரின் மகன் தன் தந்தையிடம், ஆழ்வார்க்கடியானிடமிருந்து மேலும் பல பாசுரங்களை கற்க விரும்புவதாக கூறுகிறான்.


ஐயா, நம்மாழ்வார் மொத்தம் ஆயிரம் பாசுரங்கள் பாடியிருப்பதாகத் தெரிகிறதே, அவ்வளவும் உமக்கு தெரியுமா?
அடியேன் அவ்வளவு பாக்கியம் செய்யவில்லை. சில பத்துக்கள் தான் எனக்கு தெரியும்.
தெரிந்தவரை என் பிள்ளைக்கு சொல்லிக்கொடுக்க வேண்டும்.


பால் வடியும் முகம் கொண்ட இந்த சிறுவன், பின்னாளில் நாதமுனிகள் என்ற பெயருடன் ஆச்சாரிய பரம்பரையில் முதல் ஆச்சாரியர் ஆகப்போகிறான்.


வந்தியத்தேவனும், ஆழ்வார்க்கடியானும் பேசிக் கொண்டே, பெருமாள் கோயில் பிரகாரத்தில் பிரசாதம் சாப்பிடுகிறார்கள். பின் அங்கிருந்து புறப்படுகிறார்கள்.
நம்பிகளே... தாங்கள் இத்தகைய பரம பக்தர் என்று எனக்கு தெரியாமல் போயிற்று. ஏதாவது தவறாக பேசியிருந்தால் மன்னிக்க வேண்டும்.
மன்னித்துவிடுகிறேன் தம்பி. ஆனால், இப்போது நீ எனக்கு ஒரு உதவி செய்வாயா சொல்லு?
தாங்கள் கேட்கும் உதவியைதான் என்னால் முடியாது என்று சொன்னேனே? நீங்களும் ஒப்புக்கொண்டீர்களே?
இது வேறு விஷயம் தம்பி. நான் ஒரு ஓலையை கொடுக்கிறேன். நீ கடம்பூர் அரண்மனையில் தங்கினால் தக்க சமயம் பார்த்து ஒருவரிடம் அதைக் கொடுக்க வேண்டும்.
யாரிடம் ?
பழுவேட்டரையரின் மூடு பல்லக்கில் சென்றாளே அந்தப் பெண்ணிடம்.
வைஷ்ணவரே என்னை யார் என்று நினைத்தீர்கள்?
தம்பி படபடப்பு வேண்டாம். உன்னால் முடியாது என்றால் மகராஜனாய் போய் வா.


குதிரையை நாம் மறந்துவிட்டோமே, குதிரைக்கு ஏற்பட்ட அவமானத்திற்கு குதிரை ஒரு உயர்ந்த பாறையின் உச்சிக்கு சென்று அதிலிருந்து குதித்துவிடலாமா? என்ற யோசனையுடன் நின்று கொண்டிருக்கிறது.
வந்தியத்தேவனுக்கு கோபம் வந்ததால் அந்த இடத்தை விட்டு செல்ல குதிரையை அழைக்கிறான்.
தன் எஜமான் எழுப்பிய ஒலி குதிரைக்கு கேட்கிறது.
தன் எஜமானின் உத்தரவை புரிந்து கொண்டு குதிரை விரைந்து வருகிறது.
தம்பி, நீ மட்டும் இப்போது இந்த உதவி செய்வாயானால் பின்னாளில் தக்க சமயத்தில் நான் உதவி செய்வேன்.
வந்தியத்தேவன் ஆழ்வார்க்கடியான் கூறுவதை காதில் வாங்காமல் இருக்கிறான்.
தம்பி பின்னாளில் என் உதவி உனக்கு தேவைப்படும்.


மீண்டும் ஒரு முறை ஆழ்வார்க்கடியான் முயற்சித்து பார்க்கிறான்.
தம்பி என்ன சொல்கிறாய்?


தம்பி....
தம்பி....
தம்பி....


தம்பி... தம்பி... என்று ஆழ்வார்க்கடியான் அழைக்க, அதை பொருட்படுத்தாமல் வந்தியத்தேவன் சென்று விடுகிறான்.
என்னை அழைத்து செல்லமாட்டேன் என்றா சொல்கிறாய்... உனக்கு முன் நான் கடம்பூர் செல்கிறேன் பார்.
அட, யார் இது? அந்த வைஷ்ணவனா! குதிரையை விட வேகமாக ஓடுகிறானே!
ஓடட்டும்... ஓடட்டும், எங்கே ஓடி விட போகிறான்.


கடம்பூர் கோட்டை
மேலக்கடம்பூர் அரண்மனை வீரநாராயண ஏரியிலிருந்து 12. கி.மீ. தொலைவில் உள்ளது. இப்பகுதியை செங்கண்ணர் சம்புவரையர் என்பவர், சோழ பேரரசுக்கு உட்பட்டு ஆட்சி செய்து வருகிறார். சம்புவரையர்கள் வல்வில் ஓரியின் வம்சாவழி வந்தவர்கள் என்று தங்களை கூறிக்கொள்கிறார்கள்.


கடம்பூர் அரண்மனை ஒரே விழாக்கோலம் பூண்டிருக்கிறது.
கோட்டைக்குள் செல்பவர்கள், கோட்டை காவலர்களிடம் ஆதார அட்டை காண்பித்து செல்கின்றனர்.
ஐயா, என்னை தெரியாதவர் போல் சோதனை செய்கிறீர்களே... நான் வழக்கமாக அரண்மனைக்கு நெய் எடுத்து செல்பவன் தானே...
அதெல்லாம் சரிதான். இன்று வேறு விஷயம், இன்று ஆதார அட்டை இல்லாமல் யாரையும் உள்ளே விட வேண்டாம் என்பது எஜமானின் உத்தரவு.


காவலர்கள், சம்புவரையர்களின் முத்திரை பதித்த, செப்பு தகட்டி னாலான ஆதார அட்டையை பரிசோதி த்து, உள்ளே அனுமதிக்கின்றனர்.
நமது நாயகன் தூரத்திலிருந்து இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருக்கிறான்.
ஆதார அட்டையை காண்பிக் காமல் ஒரு செல்வந்தன் உள்ளே செல்கிறான்.
ஐயா, ஐயா...
தம்பி, நீ கொஞ்சம் சும்மாயிரு...
அவர் ஆதார அட்டையை காண்பிக்கவில்லையே...
தம்பி, நீ என்ன விவரம் இல்லாத ஆளாயிருக்கே! ஆளப்பார்த்தா தெரியாதா உனக்கு, அவர்கள் எல்லாம் சமூகத்துல பெரிய அந் தஸ்து உள்ளவங்க.


இதையெல்லாம் தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த வந்தியத்தேவன், ஒரு முடிவுக்கு வருகிறான். கோட்டைக்குள் செல்ல வேண்டும் என்றால் தன்னை ஒரு பெரிய ஆள் போல் காட்டிக்கொள்ள வேண்டும் என்று எண்ணி, உடனே செயலில் இறங்குகிறான்.


ஆனால், அவன் எதிர்பார்ப்புக்கு மாறாக கோட்டை காவலர்கள் அவனை தடுத்துவிடுகின்றனர்.
நில்ல்ல்ல்.... யார் நீ ?
ஆஹா...! இப்படி நேர்ந்துவிட்டதே. சரி சமாளிப்போம்.
என்னையா யார் என்று கேட்கிறாய்?
ஆமாம் உன்னைத்தான்...



வாணர்குலத்தை சார்ந்தவன். வந்தியத்தேவன்.
ஓஹோ! வாணர்குலத்தைச் சேர்ந்தவனா நீ?
பின்னாலிருந்து ஒருவன் குரங்கு போல் பாவனை செய்து...
என்னது... வானரகுலமா ?
வந்தியத்தேவன் அவனை திரும்பி பார்க்கிறான்.
நம்ம எஜமான் கிட்டேயும் சேட்டையை காட்ட ஆரம்பிச் சிட்டாங்களா, இனி இவர் களை சும்மா விடக்கூடாது.
ஷ்...
ஷ்...
டிஷ்...
குதிரை தன் பின்னங் காலால் காவலனை எட்டி உதைக்கிறது.
டிங் ங் ங்.....



எட்டி உதைத்த குதிரை கோப மாக அவனை பார்க்கிறது.
க்ர்...
க்ர்...
நான் அப்போதே சொன்னேன்ல அது குதிரையில்லடா... கழுதைன்னு...
ஹா..ஹா..
ஹா..ஹா...
குதிரையின் சுபாவத்தை அறிந்த வந்தியத்தேவன்.
இவன் தேவையில்லாமல் நம் குதிரையிடம் உதை வாங்க போகிறான்.
ஹா..ஹா..
குதிரை கோபத்துடன் அவனை மிரட்டும் விதமாக திரும்பி பார்க்கிறது.
ஹா..ஹா...
ஹா..ஹா...
ஹா..ஹா...
க்ர்...
க்ர்...


குதிரையின் கோபத்தை கண்ட காவலன், உதைக்கு பயந்து தன் வாயை பொத்திக் கொள்கிறான்.
தலைமை காவலன்.
அந்த குதிரையை பிடித்து கட்டுங்கடா.
அடக்கடவுளே! நம்ம எஜமான் எவ்வளவு அடிச்சாலும் தாங்குவான் போல, இவனை நம்பினால் அவ்வளவு தான்.
(வந்தியத்தேவன் கம்பீரமான குரலில்) ம்... என் குதிரையை விடுங்கள்.
இப்பதான் நம் எஜமானுக்கு சூடு பிடிக்கிறது... ம்... பார்க்கலாம்.
இவன் நடை, உடை, பாவனை எல்லாம் பார்த்தால் பெரிய இடத்து பிள்ளை போல் தான் தெரிகிறது.


குதிரையை விடச்சொல்லுங்கள். நான் போகிறேன், உங்கள் நாட்டில் விருந்தாளிகளை இப்படித்தான் நடத்துவீர்களா?
இன்று வந்த விருந்தாளிகளிலே... கழுதை மேல் வந்தவன் இவன் ஒருவனாகத்தான் இருப்பான்.
குதிரையை விடுங்கள். (தலைமை காவலன் உத்தரவு.)
காவலன் குதிரையின் கடிவாளத்தை வேண்டுமென்றே இழுத்து விடுகிறான்.
வந்தியத்தேவன் நிலை தடுமாறுகிறான்.
ஹா..ஹா...
ஹா..ஹா
அனைவரும் அவனைப் பார்த்து கேலியாக சிரிக்கின்றனர்.


வந்தியத்தேவனுக்கு அடக்க முடியாத கோபம் வருகிறது. தன் நண்பன் கரிகாலனுக்காக அதை வெளிக்காட்டாமல் அங்கிருந்து செல்கிறான்.
காவலர்கள், வந்தியத்தேவன் திரும்பி செல்வதை குறித்து கேலி பேசுகின்றனர்.
நண்பனுக்காக எவ்வளவோ பொறுத்துக் கொண்டோம், இனியும் நாம் சும்மாயிருந்தோமானால் நம் குலத்துக்கு அல்லவா இழுக்கு ஏற்படும். வருவது வரட்டும், இந்த மடையர்களுக்கு சரியான பாடம் புகட்டத் தான் வேண்டும்.
வந்தியத்தேவன் கோபத்தோடு குதிரையை கோட்டையை நோக்கி திருப்பி நிறுத்துகிறான்.


தன்மானத்தை நாம் தான் காத்துக்கொள்ள வேண்டும்.
வந்தியத்தேவன் எண்ணத்தை புரிந்துகொண்ட குதிரை, தான் தயார் என்பதை வந்தியத்தேவனுக்கு உணர்த்துகிறது.
தன் உறைவாளை உருவிக் கொண்டு, கோட்டையை நோக்கி சீறிப்பாய்கின்றான் வந்தியத்தேவன்.


கோட்டை காவலர்கள் அவனை தாக்க தயாராக இருக்கிறார்கள்.


அவனை உள்ளே விடக்கூடாது, ஜாக்கிரதை.
(கோட்டை தலைமை காவலன்)


பிடியுங்கள் அவனை...
விடாதே... பிடி...
விடாதே... பிடி...
ஆனால், அத்தனை தடைகளையும் மீறி வந்தியத்தேவன் கடம்பூர் கோட்டைக்குள் நுழைகிறான்.


கடம்பூர் வீரர்கள் வந்தியத்தேவனை தாக்குகிறார்கள்.


வந்தியத்தேவனின் வாள் சுழல்கிறது. அவனை எதிர் கொள்ள முடியாமல் கடம்பூர் வீரர்கள் திணறுகிறார்கள்.


ஆனால், மேன்மேலும் கடம்பூர் வீரர்கள் புற்றிலிருந்து ஈசல் புறப்பட்டு வருவதைப் போல், வந்து கொண்டே இருக்கிறார்கள்...


அபிமன்யுவை எதிரிகள் சூழ்ந்து கொண்டது போல், வந்தியத்தேவனை பலர் சூழ்ந்து கொண்டார்கள்.


இந்நேரத்தில் குதிரை ஒரு யுக்தியை மேற்கொண்டது. வேண்டுமென்றே தன் கால்களை மண்ணில் உதைத்து புழுதியை கிளப்பியது.


எழுந்த புழுதியில் கடம்பூர் வீரர்கள் திணறுகிறார்கள்.


...ஆஅச்
இச்சந்தர்ப்பத்தில் வந்தியத்தேவன்.
கந்தமாறா... கந்தமாறா...
என்று முழக்கமிட்டான்...
கந்தமாறா....
கடம்பூர் அரசர் செங்கண்ணர் சம்புவரையர் தன் மகனிடம்...
கந்தமாறா....
கந்தமாறா! அங்கு என்ன ஆர்ப்பாட்டம் என்று பார்த்துவிட்டு வா.


கந்தமாறன் வெளியே வந்து எட்டிப்பார்க்கிறான். இருட்டும், புழுதியும் சேர்ந்து கொண்டதால் கீழே என்ன நடக்கிறது என்று அவனால் அறிந்து கொள்ள முடியவில்லை.
கந்தமாறன் தன்னை அடையாளம் காணாததை கண்ட வந்தியத்தேவன்.
இவன் ஏன் திரு திருவென்று முழிக்கிறான், வேண்டுமென்றே என்னை தெரியாதது போல் பாவனை செய்கிறானா? ஒரு வேளை துரோனாச்சாரி, துருபதனின் நட்பை போல் ஆகி விட்டதா எங்கள் நட்பு. அவன் பல முறை அழைத்ததால் தானே கட்டுக்காவலையும் மீறி உள்ளே வந்தேன்.


கடம்பூர் அரண்மனை
நண்பனை அவ்வாறு விட்டுவிடுவானா கந்தமாறன்.....
கந்தமாறா, இன்றைக்கு என்ன இங்கே ஏக தட புடலாய் இருக்கிறதே? இவ்வளவு கட்டுக்காவல் எல்லாம் எதற்காக?


அதை பிறகு விவரமாக சொல்கிறேன்.
நீ பழுவேட்டரையரை பார்க்க வேண்டும், மழவரையரை பார்க்க வேண்டும், அவரைப் பார்க்க வேண்டும், இவரைப் பார்க்க வேண்டும் என்று சொல்வாயே...
அந்த அவர், இவர் எல்லோரையும் இன்றைக்கே பார்த்துவிடலாம், வா.


சம்புவரையர் மற்றும் சிற்றரசர்கள் கூடி, பேசிக் கொண்டிருக்கும் இடத்திற்கு வந்தியத்தேவனும், கந்தமாறனும் வருகின்றனர்.


இவர்களை கண்ட சம்புவரையர்.
யார் இவன்?
இன்றைய தினம் பார்த்து வந்திருக்கிறானே.
அப்பா, என் தோழன் வந்தியத் தேவன், அடிக்கடி தாங்களிடம் சொல்லிக்கொண்டிருப்பேனே... அவன் தான் இவன்.
வந்தியத்தேவனை அவர் வெறுப்புடன் பார்க்கிறார்.


அப்படியா, கீழே அரண்மனை வாசலில் அவ்வளவு கலவரம் செய்தவன் இவன் தானா?
வந்தியத்தேவனின் நிலையை புரிந்து கொண்ட கந்தமாறன்.
அழைப்பில்லாமல் வந்தது எவ்வளவு பெரிய தவறாகி விட்டது!
கலவரத்திற்கு காரணம் என் தோழன் அல்ல. வாசல் காப்பதற்கு நாம் அமர்த்தி இருக்கும் மூடர்கள் தான்.
இருந்தாலும் இன்றைய தினம் பார்த்து இவ்வளவு ஆர்பாட்டத்துடன் வந்திருக்க வேண்டியதில்லை.


அப்போது, தோழிப்பெண் வந்திருக்கும் விருந்தாளிகளுக்கு பழரசம் கொண்டு வருகிறாள்.
அய்யா, பழரசம்.
தந்தை ஏன் இன்று இவ்வாறு நடந்து கொள்கிறார்.
இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கந்தமாறன் தன் நண்பனை...


நண்பா வா... உனக்கு பிடித்த மாவீரர் பழுவேட்டரையரை நான் அறிமுகம் செய்து வைக்கிறேன்.
நண்பனை சமாதானம் செய்து அழைத்துச் செல்கின்றான்.
பழுவேட்டரையர், நடு நாயகமாக ஒரு உயரமான பீடத்தில் அமர்ந்திருக்கிறார். சுற்றிலும் பல சிற்றரசர்கள் இருக்கிறார்கள்.
மாவீரர் பழுவேட்டரையரிடம் வந்தியத்தேவனை அழைத்து வந்து...


மாமா, இவன் என் ஆருயிர் நண்பன். வாணர் குலத்தைச் சார்ந்த வந்தியத்தேவன்.
பழுவேட்டரையர் அவனை உற்றுப்பார்க்கிறார்.
காஞ்சியிலிருந்து வந்திருக்கிறான். இவனும் நானும் வடபெண்ணைக்கரை பாசறையில் எல்லைக் காவல் புரிந்து கொண்டிருந்தோம்.
அப்போதெல்லாம் வீராதிவீரர் பெரிய பழுவேட்டரையரை பார்க்க வேண்டும் என்று ஓயாது சொல்லிக் கொண்டிருப்பான்...


"பழுவேட்டரையர் திருமேனியில் அறுபத்து நாலு போர் காயங்கள் இருப்பது உண்மைதானா?" என்று கேட்டுக் கொண்டிருப்பான். ஒரு நாள் நீயே எண்ணிப்பார்த்துக் கொள் என்று நான் சொல்லுவேன்.
என்ன தம்பி? நீயே எண்ணிப் பார்த்தால் ஒழிய நம்ப மாட்டாயோ? அவ்வளவு அவநம்பிக்கையா உனக்கு? வாணர் குலத்தை காட்டிலும் வேறு குலத்தில் வீரம் இருக்க முடியாது என்ற எண்ணமோ ?
பழுவேட்டரையர் வந்தியத்தேவனை பார்த்து நய்யாண்டி செய்து சிரிக்கிறார்...


அனைவரும் சிரிக்கின்றனர்...
தோத்திரமாக சொன்னதை இப்படி
குதர்க்கமாக எடுத்துக் கொண்டாரே!
ஏந்த ஒரு சூழ்நிலையையும், தனக்கு சாதகமாக்கும் நமது நாயகன் சமயோஜிதமாக...
அய்யா, தங்கள் வீரத்தின் புகழ் குமரி முனையில்
இருந்து இமயம் வரையில் பரவியிருக்கிறது.
அதைப்பற்றி சந்தேகிப்பதற்கு நான் யார்?


வந்தியத்தேவன் பேசியதைக் கேட்ட பழுவேட்டரையர்...
நல்ல மறுமொழி! கெட்டிக்கார பிள்ளை.
பழுவேட்டரையர் கூறியதைக் கேட்டு,
மாமா, என் நண்பனுக்கு அரண்மனையை சுற்றி காட்டிவிட்டு அழைத்து வருகிறேன்.
ஆகட்டும்.
அந்த மட்டில் பிழைத்தோம்.
என்று, அடுத்த கணமே தன் நண்பனுடன் அங்கிருந்து வெளியேறினான் கந்தமாறன்.
இந்த பிள்ளை மிகவும் அறிவாளியாக இருக்கிறான். அவனிடம் கொஞ்சம் எச்சரிக்கையாகத்தான் இருக்க வேண்டும்.


கடம்பூர் அரண்மனையின் அந்தப்புரம்.
அந்தப்புரத்துக்கு வந்தியத்தேவனும், கந்தமாறனும் வருகிறார்கள்.


அம்மா, இவன்தான் என்
நண்பன் வந்தியத்தேவன்.
மகனே எழுந்திரு.
மருமகனே எழுந்திரு என்று
சொல்லுங்கள் தாயே.


கந்தமாறனின் அன்னையின் பின்னாலிருந்து ஒரு பெண் வெட்கத்துடன் எட்டிப்பார்த்து மறைந்து கொள்கிறாள்.
அவள் கந்தமாறனின் தங்கை மணிமேகலை.
கந்தமாறன் தன் சகோதரியைப் பற்றி ஆஹா ஓஹோ என்று வர்ணித்தானே! அப்படி ஒரு பெண் இங்கு எங்கும் காணவில்லையே...
பழுவேட்டரையருடன் ஒரு பல்லக்கில் வந்த அப்பெண் இவர்களில் யாராக இருக்கலாம்!
ம்... அவளின் கையே அத்தனை அழகு! நிச்சயம் இவர்களில் யாராகவும் இருக்க முடியாது.


வந்தியத்தேவனும், கந்தமாறனும் அந்தப்புரத்தை விட்டு வெளியே வருகிறார்கள். அப்போது கந்தமாறனை அவனது தாய் அழைக்கிறார்.
கந்தமாறா... கந்தமாறா...


நண்பா... அம்மா என்னை அழைக்கிறார்கள். நீ இங்கேயே இரு, நான் இதோ வந்து விடுகிறேன்...
வந்தியத்தேவன் கந்தமாறனுக்காக காத்திருக்கிறான்.
அப்பொழுது அந்தப்புரத்திலிருந்து பெண்களின் சிரிப்பொலி கேட்கிறது.
அந்தப்புர பெண்கள் அவர்களுக்குள் ஏதோ பேசி சிரிக்கிறார்கள்.



நம்மை பற்றிதான் அந்தப் பெண்கள் ஏதோ பேசி சிரிக் கிறார்களோ! இந்த பகுதி மக்களின் வழக்கமே விருந் தாளிகளை அவமதிப்பது தானா ?
இவ்வாறு நினைத்துக் கொண்டிருக்கையில் அங்கு வந்த கந்தமாறன் நண்பனின் தோளில் கை வைத்து...
என்ன நண்பா, அதிக நேரம் காத்திருக்க வைத்துவிட்டேனா?
அதெல்லாம் ஒன்றுமில்லை.
வா நண்பா, எங்கள் மாளிகையை சுற்றிப் பார்த்துவிட்டு வரலாம்.


அது ஆடல் பாடல் அரங்கம்.
இது நிலாமுற்றம்.
இது ஆயுத கிடங்கு.


இது பளிங்கு மாளிகை.


இது பண்டக சாலை.


இது குதிரை லாயம்.
கந்தமாறா என்னை அந்தப்புரவாசலில் நிறுத்திவிட்டு நீ மறுபடியும் உள்ளே சென்றாயே, அப்போது அந்தப்புரத்தில் இருந்து சிரிப்பும், குதூகலமுமாய் இருந்ததே என்ன விசேஷம்?


என்னை கண்டதில் அவர்களுக்கு அவ்வளவு மகிழ்ச்சியா ?
உன்னைப் பார்த்ததில் அவர்களுக்கு சந்தோஷம்தான். ஆனால், அவர்கள் உன்னைக் குறித்து சிரிக்கவில்லை.
பின்னே எதற்காக சிரித்தார்கள்?


ரகசியமாக வந்தியத்தேவன் காதில்.
பழுவேட்டரையர் இத்தனை வயதுக்குப் பிறகும், ஒரு இளம் வயது பெண்ணை கல்யாணம் செய்து கொண்டார் அல்லவா...
ஆமாம், அது தான் ஊர் அறிந்த செய்தியாச்சே.


அது சரிதான், மூடு பல்லக்கில் அழைத்து வந்த தன் மனைவியை, அந்தப்புரத்துக்கு அனுப்பாமல், அவருடைய விடுதியிலேயே பூட்டி அடைத்து வைத்திருக்கிறார்.


அந்தப் பெண்ணை சாளரம் (ஜன்னல்) வழியாக எட்டிப் பார்த்துவிட்டு வந்த தாதிப்பெண், அவள் கலிங்கத்து அழகியோ! சிங்களத்து அழகியோ! அல்லது சேர நாட்டு அழகியோ! என்று வர்ணித்தாளாம். அதைக் குறித்துத்தான் சிரிப்பு.
அப்படியா?
நண்பா, பழுவேட்டரையரின் முன்னோர்கள் சேர நாட்டிலிருந்து தமிழகத்துக்கு வந்தவர்கள் என்று உனக்கு தெரியும் தானே? (சேர நாடு என்பது இன்றைய கேரளம்.)
கேள்விப்பட்டிருக்கிறேன்.


கந்தமாறா, பழுவேட்டரையர் அந்த மர்ம சுந்தரியை மணந்து எவ்வளவு காலம் இருக்கும்?
இரண்டு ஆண்டுக்குள்ளேதான் இருக்கும். மணம் செய்து கொண்டதிலிருந்து அவளை தனியாகச் சிறிது நேரம் கூட அவர் விட்டு வைப்பதில்லையாம், எங்கே போனாலும் கூடவே ஆசை நாயகியை மூடு பல்லக்கில் அழைத்துப் போகிறாராம். நண்பா, ஒரு பிராயத்தை தாண்டியவருக்கு இம்மாதிரி சபலம் ஏற்பட்டால், எல்லோருக்கும் இது சிறிது இளக்காரமாகத்தானே இருக்கும்?
காரணம் அது ஒன்றும் இல்லை... உண்மை காரணத்தை நான் சொல்லட்டுமா? உன் குடும்பத்துப் பெண்கள் கருநிறத்து அழகிகள். பழுவேட்டரையரின் ஆசை நாயகியோ, செக்கச் செவேலென்று பொன் நிறமாயிருக்கிறாள்.


அடடே, இது என்ன விந்தை! உனக்கு எப்படி அவளுடைய நிறத்தைப் பற்றி தெரியும்.



அவளை பார்த்திருக்கிறாயா என்ன? எங்கே, எப்படி பார்த்தாய்?
சில மணி நேரங்களுக்கு முன் வீராண ஏரிக்கரையில் நான் வரும் பொழுது.
அப்படியா...! பழுவேட்டரையரின் ஆசை நாயகி நல்ல சிவப்பு நிறமாமே....


நண்பா! நீ பார்த்தது மட்டும் பழுவேட்டரையருக்கு தெரிந்தால் உன் உயிர் உன்னுடையது அல்ல!
பழுவேட்டரையரின் சுபாவத்தை அறிந்த கந்தமாறன் இவ்வாறு கூறினான்.


கந்தமாறா... இதற்கெல்லாம் நான் பயந்தவன் என்றா எண்ணுகிறாய்...? அப்படியிருந்தாலும், நான் தவறு ஒன்றும் செய்துவிடவில்லையே? பின் நாம் எதற்கு பயப்பட வேண்டும்?
அப்போது தூரத்தில் கூத்தின் இசை கேட்கிறது.


நண்பா, அங்கு என்ன மேளதாள இசை கேட்கிறதே, துரவைக் கூத்து ஆரம்பித்து விட்டதா?
ஆமாம், வா போகலாம்.
இருவரும் கூத்து மேடையை நோக்கி விரைந்து செல்கின்றனர்.


ஆடல் பாடல் அரங்கம்.


அழகிய பெண்களின் நடனம்.


தமிழ்நாட்டின் பாரம்பரிய இசைக் கருவிகள் வாசிக்கப்படுகின்றன.
இசைக்கேற்றவாறு அழகிகள் நடனம் ஆடுகிறார்கள்.
நாட்டியம் முடிந்து சூரசம்ஹார நாடகம் துவங்குகிறது.


முருகனுக்கும், அசுரனுக்கும் கடும் போர் நடைபெறுகிறது.
இறுதியில் முருகன் சூரனை வதம் செய்கிறான்.


இதை மக்களுடன் மக்களாக முன் வரிசையில் அமர்ந்து வந்தியத்தேவனும், கந்தமாறனும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.
அதே வேளையில், கந்தமாறனின் தங்கை மணிமேகலை அவளுடைய தோழிகளுடன் சேர்ந்து நாடகத்தை ரசித்துக் கொண்டிருக்கிறாள்.
அடுத்து நடைபெறவிருக்கும் முக்கிய நிகழ்ச்சியான வள்ளி திருமண நாடகத்தைப் பார்க்க சம்புவரையரும், பெரிய பழுவேட்டரையரும், சிற்றரசர்களுடன் காத்திருக்கிறார்கள்.


வள்ளி திருமண நாடகம் துவங்குகிறது.
கூத்து மேடையில் திரை பிடிக்கப்பட்டிருக்கிறது.
அனைவரும் உள்ளேயிருந்து எந்த கதாபாத்திரம் வெளியே வரும் என்று ஆவலுடன் காத்திருக்கிறார்கள்.
திரை விலகியதும் வள்ளி என்ற குறத்தி கதாபாத்திரம் தோன்றுகிறது.
ஆணே பெண் வேடம் போட்டு நடிப்பது கூத்தின் வழக்கம்.


வள்ளி வேடமிட்ட பெண்ணை கண்ட மக்கள் ஆரவாரம் செய்கிறார்கள்.
வயோதிக வேடமிட்ட முருகன் வள்ளியிடம் தன்னை திருமணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்துகிறான்.
ஆனால், வள்ளியோ அதை விரும்பவில்லை.
வயோதிக முருகனோ அவளை விடுவதாக இல்லை.


வயோதிகரை கண்டு வள்ளி விலகி ஓடுகிறாள்.
திடீரென்று, யானை உருவம் வள்ளியின் எதிரே வருகிறது.
யானையை கண்ட வள்ளி பயந்து ஓடி வந்து வயோதிக முருகனை கட்டிக் கொள்கிறாள்.


வயோதிக வேடத்தில் வந்திருப்பது முருகன் என்று தெரிந்த மக்கள் கரகோஷம் செய்கிறார்கள்.
இதை கண்ட மணிமேகலை, காதல் வயப்பட்டு, நாடகத்தை ரசித்துக் கொண்டிருக்கும் நாயகன் வந்தியத்தேவனை திரும்பிப் பார்க்கிறாள்.
அவனோ கொட்டாவி விட்டுக் கொண்டு நாடகத்தை பார்த்துக் கொண்டிருக்கிறான்.
வாசகர்களே, அவன் பயண களைப்பில் இருக்கிறான் என்பது உங்களுக்கு தெரியும் தானே...


இந்த கலை நிகழ்ச்சிகள் விருந்தினர்களை மகிழ்விப்பதற்காக நடத்தப்படுகிறது என்று நாம் எண்ணலாம். ஆனால், நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளும் காரண காரியத்துடனே நடைபெறுகிறது. மணிமேகலையை இரண்டாம் தாரமாக மதுராந்தகனுக்கு மணம் முடிக்க எண்ணி சம்புவரையர் இந்த வள்ளி திருமண நாடகத்தை ஏற்பாடு செய்திருக்கிறார்.


வள்ளி திருமணம் முடியும் தருவாயில் ஒரு பெண்ணுக்கும் ஆணுக்கும் திடீரென்று சந்நதம் வருகிறது. அவர்கள் இருவரும் மேடையை ஆக்கிரமித்துக்கொண்டு ஆவேசமாக ஆடுகிறார்கள்.
தேவராட்டி கையில் வேலுடன் ஆவேசமாக சுழன்று சுழன்று ஆடுகிறாள்.
உடுக்கை வாசிக்கப்படுகிறது...
ஆடும் பெண்ணிடமிருந்து வேலை தேவராளன் பிடுங்கிக்கொள்கிறான்.


தேவராளனின் ஆவேசத்தைக் கண்ட தேவராட்டி பயந்து மேடையை விட்டு இறங்குகிறாள்.
வேலை தலைக்கு மேலே தூக்கி, தேவராளன் ஆவேசமாக ஆடுகிறான்.


பூசாரியும் ஆவேசமாக உடுக்கை வாசிக்கிறார்.
ஆமா... வந்திருக்கிறது யாரு?
ஆத்தா... வந்திருக்கேன்பா...
ஆத்தானா யாரு? அதை விளக்கமா சொல்லு....
டே... துர்க்கை வந்திருக்கேன்டா.


தாயே... நீ தான் எங்களுக்கு அருள்வாக்கு சொல்ல வேண்டும். சொல்லுவியா....?
கேளுடா... சொல்றேன்.
இந்த வருடம் மழை பொழியுமா?
பொழியும்.


நாடு செழிக்குமா?
செழிக்கும்.
நோய், நொடி ஏதாவது வருமா?
சும்மா கேள்வியே கேட்காதடா... முதல்ல என் குறையை கேளுடா.


உனக்கு என்ன குறை தாயே...?
கேட்டா கொடுப்பியா?
கொடுக்கிறேன் தாயே,
என்ன வேணும்? ஆடு வேணுமா? கோழி வேணுமா? என்ன வேணும்?
ஆடு, கோழியெல்லாம் வேணாம் பா....
அப்போ என்ன தான் வேணும் தாயே.....?


மக்கள் அனைவரும் சாமி என்ன கேட்கப் போகிறது என்ற பதட்டத்துடன் பார்க்கிறார்கள்.
மன்னர் குலத்து இரத்தம் வேணும்...
ஆயிரம் காலத்து அரச குல இரத்தம்.
தேவராளன் கூறியதைக் கேட்ட அனைவரும் அதிர்ச்சி அடைகின்றனர்.


பழுவேட்டரையர் கூர்ந்து, சாமி ஆடும் தேவராளனை பார்க்கிறார்.
அவரைக் கண்ட தேவராளன்,
பழுவேட்டரையரிடம் மாட்டிக் கொண்டால் அவ்வளவுதான்...
தேவராளன் பூசாரியிடம் தன் கையை நீட்டி...
ம்ம்ம்... ஆத்தா மலை யேறப் போறேன்டா...
தேவராளன் கையில் சூடம் ஏற்றப்படுகிறது.
அதை தேவராளன் சட்டென்று தனது வாயில் போட்டுக் கொள்கிறான்.


கூத்து முடிந்து அனைவரும் பேசிக்கொண்டே நடந்து செல்கிறார்கள்.
நண்பா, நாளை நான் தஞ்சைக்கு செல்லலாம் என்று இருக்கிறேன்...
என்ன நண்பா இங்கு இரண்டு மூன்று நாட்கள் இருப்பாய் என்றல்லவா நினைத்தேன்...
இல்லை நண்பா, அங்கு என் மாமா சிறிது காலமாக உடல் நிலை சரியில்லாமல் இருக்கிறார். அதான் சென்று பார்த்து விட்டு வரலாம் என்று... (வந்தியத்தேவன்).
அப்படியா.., எனக்கும் தஞ்சையில் ஒரு சின்ன வேலை இருக்கிறது. ஆனால் உன்னுடன் வர முடியுமா என்று தெரியவில்லை... சரி நண்பா, நீ சென்று ஓய்வெடு.
அப்போது நீ?
நான் விருந்தினர்களை உபசரித்து விட்டு வருகிறேன்.
ஒரு மர்மமான இரவை நோக்கி செல்கிறான் என்பதை உணராமல் செல்கிறான் நம் நாயகன் என்ன நடக்குமோ...


நரி எதையோ உற்றுப்பார்க்கிறது.
இன்னும் பல நரிகள் வருகின்றன.


நரிக்கூட்டம் ஒரு மனிதனை சுற்றி வளைக்கின்றது.
ஆ! அது... அது வந்தியத்தேவன் ஆயிற்றே!


அய்யோ! அவனிடம் எந்த ஆயுதமும் இல்லை.


நரிகள் அவனிடம் கொஞ்சம் கொஞ்சமாக நெருங்குகின்றன.
ஒவ்வொரு நரியும் நாக்கை சுழற்றிக் கொண்டு அவனை ருசி பார்க்க தயாராகின்றன.


ஆஹா... எத்தனையோ போர் களங்கள் கண்டிருக்கிறோம், அன்றைக்கெல்லாம் வீரமரணம் அடையாமல், இன்றைக்கு இந்த நரி கூட்டத்திடம் அகப்பட்டுவிட்டோமே...!
அக்கூட்டத்திலிருந்து தப்பிக்க வந்தியத்தேவன் ஓடுகிறான்...


நரிகளும் அவனை விடாமல் துரத்துகின்றன.


அவன் கரடு முரடான பாதையில் ஓடுகிறான்.


நரிகள் தன் கோர பற்களை காட்டி அவனை பின் தொடர்கின்றன.


பலகாத தூரம் அவன் ஓடுகிறான்.
இறுதியில் ஒரு பாறையின் உச்சியை அடைகிறான்.
அதற்கு மேல் அவன் ஓடுவதற்கு வழியில்லை.. என்ன செய்வது?


வேறு வழியின்றி பாறையின் உச்சியிலிருந்து தாவி குதிக்கிறான்.


அப்போதும் நரிக்கூட்டம் அவனை விடுவதாக இல்லை.


அவன் மூச்சிறைக்க ஓடிக் கொண்டேயிருக்கிறான்.
ஆஹா... என்ன இது! நம் விதி இப்படி ஆகிவிட்டதே...
அவன் சற்றும் எதிர்பாராத வகையில், எதிர்திசையில் இருந்து நாய்களும் அவனை துரத்துகின்றன.


வந்தியத்தேவன் ஓடுவதை சட்டென்று நிறுத்தி.,
தன் பாதையை மாற்றி வேறு திசையில் ஓடுகிறான். நரியுடன்
சேர்ந்து நாய்களும் அவனை விடாமல் துரத்துகின்றன.


அப்போது தூரத்தில் ஒரு காளி கோயில் தெரிகிறது. அக்கோயிலுக்குள் சென்று கதவை மூடிக்கொள்கிறான்.
நாம் எங்கு இருக்கிறோம்?! எதற்காக இங்கு வந்தோம்?!
நரிகளும், நாய்களும் கோயிலின் கதவை பிராண்டுகின்றன. அந்த ஓசை அவன் காதில் விழுகிறது.
தாயே, நீ தான் என்னை காத்தருள வேண்டும்!


காளி சிலையின் பின்னாலிருந்து ஒரு குரல்
வந்தாயா? வா...
உண்மையைச் சொல்.
நீ பிறந்த அரசகுலத்தின் வரலாறு என்ன? எத்தனை ஆண்டுகள் உன் குலத்தினர் அரசு புரிந்தனர்?


வாணர் குலத்து வல்லவரையர், மூந்நூறு ஆண்டுகள் அரசு புரிந்தவர்கள். என் தந்தையின் காலத்தில் வைதும்பரையர்களால் அரசை இழந்தோம்.
அப்படியானால் நீ தகுந்த பலி அல்ல ஓடிப்போ.
திடீரென்று காளிமாதேவியின் இடத்திலிருந்து கண்ணபெருமான் காட்சி அளிக்கிறார். அவன் முன்னால் இரண்டு பெண்கள் ஆண்டாள் பாசுரம் பாடிக்கொண்டு, கையில் பூ மாலையுடன் ஆடி வருகிறார்கள். அதை பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது... அவன் பின்னாலிருந்து ஒரு குரல்.
கண்டோம்.. கண்டோம்.. கண்டோம்... கண்ணுக்கினியன கண்டோம்....
இந்த குரலை எங்கோ கேட்டது போல் இருக்கிறதே!


வந்தியத்தேவன் திரும்பி பார்க்கிறான்.
அங்கே ஒரு பலி பீடம். உயரத்தில் வெட்டுண்ட ஆழ்வார்க்கடியானின் தலை காளியைப்போல் நாக்கை நீட்டிக் கொண்டிருக்கிறது.
அதைக் கண்டு சகிக்காமல் வந்தியத்தேவன், தன் தலையை வேறு பக்கம் திருப்புகிறான்...


அப்போது வந்தியத்தேவன் படுக்கையிலிருந்து விழுகிறான்.
விழுந்தவன் தன் தலையை மேலெழுப்பிப் பார்க்கிறான்.
அப்படியென்றால் நாம் கண்டது கனவா...? நல்லவேளை அற்ப நரிகளுக்கும், நாய்களுக்கும் நாம் பலி ஆகவில்லை!
அப்போது தூரத்தில் ஏதோ பேச்சுக் குரல் கேட்கிறது.
இந்நேரத்தில் யார் பேசுகிறார்கள்....?


ஆழ்வார்க்கடியான் கடம்பூர் கோட்டையின் பின்புற மதில் சுவற்றின் கீழே நின்றுகொண்டு மேலே பார்க்கிறான். ஏதோ திட்டத்தோடு...


கோட்டையின் மேல் ஏறி உட் பகுதியை நோட்டமிடுகிறான்.
கடவுள் நம்மை கை விடவில்லை சரியான நேரத்தில் சரியான இடத்திற்கு வந்துவிட்டோம்.
அதே நேரத்தில், நமது நாயகன் வந்தியத்தேவன் பேச்சுகுரல் கேட்கும் திசையை நோக்கி பதுங்கி, பதுங்கி வருகிறான்.
கடம்பூர் அரண்மனையின் அந்தரங்கமான இடத்தில் பல சிற்றரசர்கள் ஒன்று கூடி இருக்கிறார்கள். அவர்களுடன் பழுவேட்டரையரும், சம்புவரையரும் இருக்கின்றனர். வந்தியத்தேவன், பேச்சுகுரல் கேட்ட இடத்தை கண்டுபிடித்துவிட்டு யாரும் பார்க்க முடியாத இடத்தை தேர்வு செய்து அமர்ந்துவிட்டான்.
இவர்கள் இங்கு ஏன் கூடி இருக்கிறார்கள்? அரண்மனையில் சபா மண்டபங்கள் பல இருக்க இந்த ஒதுக்குப்புறமான இடத்தில், அதுவும் இந்த அர்த்த ராத்திரியில் கூடி பேச வேண்டிய அவசியம் என்ன?


பழுவேட்டரையரின் பின்னால் சற்று தூரத்தில் ஒரு பல்லக்கு இருக்கிறது. அதில் பனைமரச் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கிறது.
ஆஹா... இன்று மாலை பழுவேட்டரையரின் பரிவாரங்களுடன் வந்த பல்லக்கு அல்லவா இது? இந்த கிழவர் அந்தப்புரத்துக்கு கூட அவளை அனுப்பாமல் இந்த நடுநிசிக் கூட்டத்திற்கு அழைத்து வந்திருக்கிறாரே? வயதானவர்கள் இளம் பெண்ணை மணந்து கொண்டால் இந்த நிலைதான். பெரிய பழுவேட்டரையர் எப்பேர்பட்ட வீரர்... ம்ம்ம்.........
(என்று பெருமூச்சு விடுகிறான்...)
சம்புவரையர் பேசத் தொடங்குகிறார்...
இங்கு வந்திருக்கும் அனைத்து அரசர்களையும் நான் வரவேற்கிறேன். இந்த இரவு ரகசிய கூட்டம் ஒரு வரலாற்று திருப்பு முனையாக அமையப்போகிறது.


நமது பெருமதிப்பிற்குரிய தனாதிகாரியான பெரிய பழுவேட்டரையரே நேராக வந்திருக்கிறார் என்றால் அதன் முக்கியத்துவத்தை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். அவருக்கு முழு ஆதரவையும் உங்கள் சார்பாக நான் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது பழுவேட்டரையரே நேராக உங்களிடம் அதைப்பற்றி பேசுவார்.


பெரிய பழுவேட்டரையர் தொண்டையை கனைத்துக் கொண்டு.
இங்கு கூடியிருக்கும் அனைத்து அரசர்களுக்கும் முதலில் ஒன்றை கூறிக்கொள்ள விரும்புகிறேன். உங்களிடம் அதிக இறை விதிப்பதற்காக நான் இங்கு வரவில்லை. அச்சூழ்நிலை வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் இக்கூட்டம்.


பழுவேட்டரையர் சட்டென்று பேசுவதை நிறுத்தி கந்தமாறனிடம்,
கந்தமாறா... காஞ்சியிலிருந்து உன் நண்பன் என்று கூறிக்கொண்டு வந்தானே அவன் எங்கே? நாம் பேசுவது ஏதும் அவன் காதில் விழுந்துவிடக் கூடாது.
மாமா, நாம் பேசுவது ஏதும் அவன் காதில் விழாது. அவன் மேல்மாட மண்டபத்தில் நன்றாக தூங்கிக் கொண்டிருக்கிறான்.


நாம் பேசுவது அந்த பிள்ளைக்கு ஏதாவது தெரிந்துவிட்டது என்ற சந்தேகமிருந்தால் கூட அவனை இந்தக் கோட்டையை விட்டு தாண்ட விடக்கூடாது. ஒரேயடியாக அவனைத் தீர்த்து விட வேண்டியதுதான்.
ஐயோ! இவருக்கு நான் என்ன தீங்கு செய்தேன்? எத்தனை நாள் இவரை பார்க்க வேண்டும் என்ற ஆவலுடன் இருந்தேன்.
மாமா, அவனை குறித்து நாம் கவலைகொள்ள தேவை இல்லை. இந்த கூட்டத்தின் பேச்சு அவன் காதில் விழப் போவதில்லை. அப்படியே அவன் ஏதாவது தெரிந்து கொண்டாலும், தனக்கு சம்பந்தமில்லாத காரியத்தில் தலையிடுகிறவனும் அல்லன். தாங்கள் யோசனைக்கு ஏந்த பாதகமும் வராது. அதற்கு நான் பொறுப்பு.
கந்தமாறன் தன் நண்பனை காப்பாற்ற எண்ணி இவ்வாறு கூறினான்.


உனக்கு அவனிடம் அவ்வளவு நம்பிக்கை இருப்பது குறித்து எனக்கும் மகிழ்ச்சிதான். ஆனால், எங்களில் யாருக்கும் அவனை முன் பின் தெரியாது. நாம் இப்போது பேசப்போகிறதோ, ஒரு பெரிய சாம்ராஜ்யத்தின் உரிமை பற்றிய விஷயம். அஜாக்கிரதை காரணமாக ஒரு வார்த்தை வெளியில் போனாலும், அதனால் பயங்கரமான விபரீதங்கள் ஏற்படலாம் நினைவு இருக்கட்டும்.
அரசுரிமையை பற்றியா! அதைப் பற்றி பேச இவர்கள் யார்? இவர்கள் என்ன பேசப் போகிறார்கள்? இந்த கூட்டத்தில் நடக்கப் போவதை தெரிந்துகொண்டே தீரவேண்டும்.
இப்போது நாம் முக்கிய விஷயத்துக்கு வருவோம். சுந்தரசோழ மகாராஜாவுக்கு உடல்நிலை சரியில்லை என்பது தாங்கள் அறிந்த செய்திதான். ஆகவே, இனிமேல் நடக்க வேண்டிய காரியங்களைப் பற்றி நாம் யோசித்தாக வேண்டும்.
ஜோதிடர்கள் என்ன சொல்கிறார்கள்?
ஜோதிடர்களை போய் கேட்பானேன்? சில நாட்களாக பின் மாலை நேரத்தில் வானத்தில் வால் நட்சத்திரம் தெரிகிறதே அதுபோதாதா?


அரண்மனை வைத்தியர்கள் என்னதான் கூறுகிறார்கள்?
இனிமேல் நம்பிக்கைக்கு இடமில்லை. அவர்கள் சில காலம் தள்ளிப்போடுகிறார்கள் அவ்வளவுதான். எப்படி இருந்தாலும், அடுத்தாற்போல் பட்டத்துக்கு உரியவர் யார் என்பதை நாம் தான் யோசிக்கவேண்டும்.
அதைப்பற்றி இனி யோசித்து என்ன ஆவது? ஆதித்த கரிகாலருக்குத்தான் இளவரசப் பட்டம் இரண்டு வருடத்துக்கு முன்னமே கட்டியாகிவிட்டதே.
உண்மைதான். ஆனால், அப்படி இளவரசுப் பட்டம் கட்டுவதற்கு முன்னால் நம்மில் யாருடைய யோசனையாவது கேட்கப்பட்டதா? என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.
அனைவரும் மவுனமாக இருக்கிறார்கள்...


இங்கே கூடியுள்ள நாம் ஒவ்வொருவரும் நூறு ஆண்டுளுக்கு மேலாக, நாலு தலைமுறையாக, சோழ ராஜ்யத்தின் மேன்மைக்காக பாடுபட்டவர்கள். என் பாட்டனாருக்கு தந்தை திருப்புறம்பியம் போரில் இறந்தார், என் பாட்டனார் வெள்ளூரில் நடந்த போரில் உயிர் விட்டார், என் தந்தை தக்கோலத்தில் உயிர்த்தியாகம் செய்தார். அம்மாதிரியே உங்கள் ஒவ்வொருவரின் மூதாதையரும், இந்த சோழநாட்டின் மேன்மைக்காக உயிரை கொடுத்திருக்கிறார்கள்.


நம் ஒவ்வொருவருடைய குடும்பத்திலும் இளம் பிள்ளைகள் யுத்த களத்தில் உயிர்த்தியாகம் செய்திருக்கிறர்கள். இன்றைக்கும் ஈழநாட்டில் நம் குடும்பத்தை சேர்ந்த பிள்ளைகள் போர் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படி இருக்கையில் அடுத்தபடியாக பட்டத்துக்கு வர வேண்டியவர் யார் என்பது பற்றி தீர்மானிப்பதில் நம்முடைய அபிப்ராயத்தை மகாராஜா கேட்கவில்லை. தசரதர் கூட ராமருக்கு பட்டம் கட்டுவது பற்றி மந்திராலோசனை சபையை கூட்டி யோசனை கேட்டார். ஆனால் சுந்தரசோழ மகாராஜா யாருடைய யோசனையும் கேட்கவில்லை.


நம்மை யோசனை கேட்கவில்லையென்பது சரிதான். ஆனால், யாரையும் யோசனை கேட்கவில்லையென்று இறைவிதிக்கும் தேவர் கூறுவது சரியன்று.


பெரிய பிராட்டியான செம்பியன் மாதேவியின் யோசனையும், இளைய பிராட்டியான குந்தவை தேவியின் யோசனையும் கேட்கப்பட்டன. இல்லை என்று பழுவேட்டரையர் கூற முடியுமா?
(என்று கேட்டுவிட்டு சிரிக்கிறார்.)
ஹா..ஹா...
ஹா..ஹா...


அவர் கூறியதை கேட்டு அனைவரும் சிரிக்கின்றனர்...
ஹா..ஹா...
ஹா..ஹா...
ஹா..ஹா...


பழுவேட்டரையர் கோபத்துடன்...
ஆகா, எப்படித்தான் உங்களுக்கு சிரிக்கத் தோன்றுகிறதோ? நான் அறியேன்.
நினைக்க, நினைக்க எனக்கு வயிறு பற்றி எரிகிறது. என் இரத்தம் கொதிக்கிறது.
எதற்காக இந்த உயிரை வைத்துக் கொண்டு வெட்கங்கெட்டு வாழ வேண்டும்?
துர்க்கை பலி கேட்கிறாள்,
வேண்டுமானால் என்னை பலி கொடுத்து விடுங்கள். என்னுடைய தலமும் ஆயிரம் ஆண்டுகள் தொன்மையானதுதான்.


நீங்கள் அனைவரும் உங்கள் கத்தியினால் என் கழுத்தில் ஒரு போடு போட்டு பலி கொடுத்து விடுங்கள்.
என்று கூறிவிட்டு, மிகுந்த கோபத்துடன் அமர்ந்தார் பழுவேட்டரையர்.
இதையெல்லாம் ஆழ்வார்க்கடியான் கோட்டையின் மதில் சுவற்றின் மேலிருந்து ரகசியமாக பார்த்துக் கொண்டிருக்கிறான்.


இவ்வாறு பழுவேட்டரையர் ஆவேசமாக பேசியதை கேட்டு அனைவரும் அச்சத்துடன் அமைதியாக இருக்கின்றனர்.
பழுவேட்டரையரை சமாதானப்படுத்தும் விதமாக சம்புவரையர்,
ஏதோ தெரியாதனமாக பேசிவிட்ட பரிகாச பேச்சையும், அதனால் விளைந்த சிரிப்பையும் பழுவூர் மன்னர் பொறுத்தருள வேண்டும்... தாங்கள் எங்களுடைய இணையில்லா தலைவர்.
கோபத்தை குறைக்க பழுவேட்டரையர் நீர் அருந்துகிறார்.
தாங்கள் இடும் கட்டளையை நிறைவேற்ற இங்கு உள்ளவர்கள் சித்தமாயிருக்கிறோம். தாங்கள் காட்டிய வழியில் நடக்கிறோம். தயவு செய்து மன்னித்துக் கொள்ள வேண்டும்.


நானும் கொஞ்சம் பொறுமை இழந்துவிட்டேன். அதற்காக என்னை மன்னிக்க வேண்டும். ஒரு விஷயத்தை எண்ணிப் பாருங்கள். சரியாக இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னால் விஜயாலய சோழர், முத்தரையர்களை முறியடித்து தஞ்சையை கைப்பற்றினார். திருப்புறம்பியம் போரில் பல்லவ சைன்யத்துக்கு துணையாக நின்று பாண்டியரின் படையை நிர்மூலமாக்கினார். அன்று முதல் சோழராஜ்யம் நாளுக்கு நாள் பெருகி வந்திருக்கிறது. இன்றைக்கு தெற்கே குமரி முனையிலிருந்து, வடக்கே துங்கபத்திரை - கிருஷ்ணா நதி வரையில் சோழ சாம்ராஜ்யம் பரந்து விரிந்து கிடக்கிறது. தெற்கே ஈழமும், வடக்கே இரட்டை மண்டலமும், வேங்கியும் கூட இதற்குள் நமக்குப் பணிந்திருக்க வேண்டும். அப்படி பணியாததற்கு காரணங்களை நான் சொல்ல வேண்டியதில்லை.
ஆம்! எல்லோருக்கும் தெரியும்.


ஈழமும், இரட்டைப்பாடியும் பணியாத தற்கு காரணம், ஒருவர் வடதிசை மாதண்ட நாயகராகிய இளவரசர் ஆதித்த கரிகாலர், இன்னொருவர் அவருடைய தம்பி அருள்மொழிவர்மர்.
மழவரையர் மிக சரியாகச் சொன்னார். சென்ற நூற்றாண்டு காலமாக இந்த சோழ நாட்டில் சேனாதிபதியை நியமிக்கும் மரபு எவ்வாறு இருந்தது?
பல யுத்தங்களில் ஈடுபட்டு அனுபவம் பெற்ற வீராதி வீரர்களையே படை தலைவர்களாக நியமிப்பார்கள். இப்போது நடந்திருப்பது என்ன? மூத்த இளவரசர் வடதிசை சேனையின் சேனாதிபதி, இளையவர் தென்திசை சேனையின் சேனாதிபதி. அது போகட்டும், மூத்த இளவரசர் என்ன செய்திருக்க வேண்டும்?


வடதிசை மீது படையெடுத்து இருக்க வேண்டும், சென்றாரா? இல்லையே!
காஞ்சியில் பொன்னாலான மாளிகை கட்டிக் கொண்டிருக் கிறார். நீங்கள் யாராவது கேள்விப்பட்டதுண்டா?
ஏந்த சோழர் குல மன்னனாவது, தான் வசிப்பதற்கு பொன்னாலான மாளிகை கட்டினான் என்று கூறுங்கள்?


பல்லவ பேரரசர்கள் வாழ்ந்த அரண்
மனைகள் இவருடைய அந்தஸ்துக்கு
போதவில்லையாம்.
ம்...
என்று கூறிவிட்டு, அனைவரையும்
உற்று கவனிக்கிறார்.
பொன்மாளிகை கட்டி
முடிந்தாகிவிட்டதா?
ஆம் முடிந்துவிட்டது. அத்துடன் தான்
புதிதாக நிர்மாணித்திருக்கும் பொன்
மாளிகையில் சுந்தரசோழ மகாராஜா,
வந்து சிலகாலம் தங்கியிருக்க
வேண்டுமாம். இவ்வாறு கடிதம்
எழுதி இருக்கிறார் கரிகாலர்.


மகாராஜா காஞ்சிக்கு போகப்போகிறாரா?
அத்தகைய கவலை உங்களுக்கு வேண்டாம். என் அனுமதியோ அல்லது என் சகோதரன் அனுமதியோ இல்லாமல் தஞ்சை கோட்டைக்குள் ஒரு ஈ, காக்காவும் நுழைய முடியாது. இதுவரை இரண்டு மூன்று தடவை வந்த ஓலைகளை நிறுத்திவிட்டோம்.
என்று கூறிவிட்டு மீசையை முறுக்குகிறார்.
வாழ்க பழுவேட்டரையர் !
வாழ்க பழுவூர் மன்னனின் சாணக்ய தந்திரம் ! !
வாழ்க அவர் வீரம் ! ! !


அவர்கள் எழுப்பிய வாழ்த்தொலியின் உற்சாகத்தில் மீண்டும் பேச்சை தொடங்குகிறார் பழுவேட்டரையர்.
இன்னும் கேளுங்கள், மூத்த இளவரசர் இப்படியென்றால் இளையவர் ஒரு படி மேலே போய் ஈழத்திலிருக்கும் நம் சோழநாட்டு போர் வீரர்களுக்கு, தேவையான உணவுப் பண்டங்களை நாம் இங்கிருந்து அனுப்பி வைக்க வேண்டுமாம். படையெடுத்து சென்ற நாட்டு மக்களை நாம் துன்புறுத்தக் கூடாதாம். அவர்களின் காலில் விழுந்து வணங்க வேண்டுமாம். என்னவென்று கேட்டால் அந்த நாட்டு மன்னனுக்கும் நமக்கும் தான் யுத்தமாம், மக்களிடம் கிடையாதாம். எப்படி இருக்கிறது கதை?


உண்மையை சொல்ல வேண்டுமானால் இரண்டு இளவரசர்களும் அடிக்கும் கூத்தினால் சோழ நாட்டின் பொக்கிஷங்கள் தான் கரைகின்றன. சோழநாடு எந்தவிதமான முன்னேற்றமும் அடைந்த பாடில்லை. ஒரு விஷயத்தை நீங்கள் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும், இப்படியே போனால் உங்களிடம் அதிக வரி வசூலிப்பதைக் காட்டிலும் எனக்கு வேறு வழியில்லை.
என்று கூறிவிட்டு அனைவரையும் உற்றுப் பார்க்கிறார்.
தாங்கள் மகாராஜா விடம் இதைப்பற்றி சொல்லவில்லையா?
சொல்லாமல் என்ன? பல தடவை சொல்லி ஆகிவிட்டது. அவருக்கு அவருடைய பெரிய அன்னையான செம்பியன் மாதேவியின் வாக்குதான் வேதவாக்கு.


அடுத்த படியாக அவருடைய செல்வ புதல்வி குந்தவை பிராட்டியிடம் ஆலோசனை கேட்கச் சொல்கிறார்.
இராஜ்ய சேவையில் தலை நரைத்துப் போன நானும், மற்ற அமைச்சர்களும் அந்த சின்னஞ்சிறு பெண்ணிடம் யோசனை கேட்பதற்கு போய் நிற்க வேண்டுமாம்! ம்......
அல்லி ராஜ்யத்தைவிட கேவலாமாகிவிட்டது! இத்தகைய அவமானத்தை எத்தனை நாள் நாம் பொறுத்திருக்க முடியும்? நம் சக்கரவர்த்திக்கு சுயமாக சிந்திக்கும் சக்தியே இப்போது இல்லாமல் போய்விட்டது! நான் இந்த ராஜாங்கப் பொறுப்பையும், வரி விதித்து பொக்கிஷத்தை நிரப்பும் தொல்லையையும் விட்டுவிட்டு என் சொந்த ஊரோடு போய்விடப் போகிறேன். (என்று கோபப்படுகிறார்).
கூடாது! கூடாது! பழுவூர் தேவர் அப்படி எங்களை கைவிட்டுவிடக் கூடாது. ஒரு நொடியில் சோழ சாம்ராஜ்யம் சின்னா பின்னமாய் போய்விடும்.


அப்படியென்றால் இந்த நிலைமையில் என்ன தான் செய்வது? நீங்கள் தான் எனக்கு யோசனை சொல்ல வேண்டும்.
அங்கு இருப்பவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள் என்று, ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருந்தான் ஆழ்வார்க்கடியான். அப்போது அங்கு ஒரு பூனை வந்து.,
மியாவ்... மியாவ்...
என்று கத்துகிறது.
இந்த பூனை வேறு நேரங்காலம் தெரியாமல் நம் அருகில் வந்து கத்துகிறதே! யாராவது நம்மை கவனித்து விட்டால், நம் கதி அதோ கதிதான்.
உஷ்...


மீண்டும் பூனை இவனைப் பார்த்து, மியாவ் என்று கத்துகிறது.
கோபம் அடைந்த ஆழ்வார்க்கடியான், தடியைக் கொண்டு விரட்டுகிறான்.
மியாவ்...
பதிலுக்கு பூனையும் அவனிடம் சண்டைக்கு வருகிறது.
டண்ண்ண்.......
ஆழ்வார்க்கடியான், தன் தடியினால் பூனையை தாக்கினான்.


பூனை கத்திக்கொண்டே கோட்டை மதில் சுவற்றிலிருந்து தாவி குதித்தோடியது.
அங்கு என்ன சத்தம்?
ஐயோ! நான் வசமா மாட்டி கிட்டேன். அந்த நாராயணன் தான் என்ன காப்பாத்தனும்.
அது ஒன்றுமில்லை ஏதாவது காட்டுப் பூனையாக இருக்கும்.


சம்புவரையர் கூறியதை கேட்ட ஆழ்வார்க்கடியான், அச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பூனை போல் அமர்ந்து கொண்டான்.
சம்புவரையர் வாழ்க!! சம்புவரையர் குலம் வாழ்க!!!
மதில்மேல் இருக்கும் ஆழ்வார்க்கடியானை பார்த்த வந்தியத்தேவன்,
அட பாதகா! ஒரு பல்லக்கை தொடர்ந்து இவ்வளவு தூரம் வந்து விட்டாயே!
சரியான பெண்பித்து பிடித்தவன்!
அதே சமயத்தில் கீழிருந்து ஒரு காவலனும் ஆழ்வார்க் கடியானை கவனிக்கிறான்.
நல்ல நடிகனாய் இருக்கிறானே!
இவன் பெயர் இடும்பன்காரி, பாண்டியநாட்டு ஆபத்துதவிகளில் ஒருவன்.
இவன் நிச்சயம் நம்மாளாகத் தான் இருக்கும், ரவிதாஸர் தான் இவனை அனுப்பியிருப்பார்!


இரவு மூன்றாம் ஜாமம்.
இடம்: கடம்பூர் கோட்டை
பழுவேட்டரையர், சிற்றரசர்களின் பதிலுக்காக காத்திருக்கிறார்.
கூட்டத்தில் ஒவ்வொருவரும் அவர்களுக்குள்ளேயே பேசிக்கொள்கிறார்கள். ஆனால், யாருக்கும் பழுவேட்டரையரிடம் நேரடியாக பேச துணிவில்லை.


அப்போது சம்புவரையர்.
இப்படி தலைக்கு தலை பேசிக் கொண்டிருந்தால் என்னாவது? இரவு மூன்றாம் ஜாமம் ஆரம்பமாகிவிட்டது. பழுவேட்டரையருக்கு நாம் ஏதாவது பதில் சொல்ல வேண்டாமா?
எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. என்னை போல் இன்னும் சிலருடைய மனதிலும் சந்தேகம் இருக்கலாம், பழுவூர்தேவர் கோபித்துக் கொள்வதில்லை என்றால், இங்கு அதைப்பற்றி கேட்க விரும்புகிறேன்.
என்னுடைய கோபத்தையெல்லாம் போர்க்களத்தில் காட்டுவதுதான் வழக்கம். என் சிநேகிதர்களிடம் காட்டமாட்டேன். ஆகையால், எது வேண்டுமானாலும் மனம் விட்டு தாராளமாகக் கேட்கலாம்.


அப்படியென்றால் நான் கேட்கிறேன்.
சுந்தரசோழ மகாராஜாவின் பேரில் பழுவேட்டரையர் என்ன குற்றம் சொல்கிறாரோ, அதே குற்றத்தை பழுவேட்டரையர் மீதும் சிலர் சுமத்துகிறார்கள். அதை நான் நம்பாவிட்டாலும், இந்த சமயத்தில் கேட்டு தெளிய விரும்புகிறேன்.
வணங்காமுடியார் கேட்க நினைப்பதை நேரடியாகவே கேட்கலாம்.
பழுவூர் தேவர் சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பெண்ணை மணம் புரிந்து கொண்டது....


நம் எல்லோருக்கும் தெரியும்.
இந்த விஷயத்தைப் பற்றி வணங்காமுடியார் இங்கு பேசுவதை நான் ஆட்சேபிக்கிறேன்.
நம் மாபெரும் தலைவரை, நமது பிரதம விருந்தாளியை இவ்விதம் அசந்தர்ப்பமான நேரத்தில் கேள்வி கேட்பது தகாத காரியம்.
கடம்பூர் அரசர் பொறுமையாக இருக்கும்படி நான் கேட்டுக் கொள்கிறேன். வணங்காமுடியார் கேட்க விரும்புவதை தாராளமாக கேட்கட்டும்.
மனதில் ஒன்றை வைத்துக் கொண்டிருப்பதைவிட கீறிக் கேட்டு விடுவதே நல்லது.
என்னை நான் கலியுக ராமன் என்று சொல்லிக் கொள்ளவில்லை. அந்த பெண்ணை நான் காதலித்தேன், அவளும் என்னை காதலித்தாள், பழந்தமிழ் நாட்டு முறைப்படி இஷ்டப் பட்டு மணந்து கொண்டோம். இதில் என்ன தவறு?
ஒரு தவறும் இல்லை...


மணம் புரிந்து கொண்டது தவறு என்று நானும் சொல்லவில்லை, நம்மில் யார் தான் ஒருதார விரதம் கொண்டவர்கள். ஆனால்....
ஆனால் என்ன? தயங்காமல் மனதை திறந்து கேட்டு விடுங்கள்.
தாங்கள், புதுமணம் புரிந்து கொண்ட இளைய ராணியின் சொல்லை எல்லா காரியங்களிலும் கேட்டு நடப்பதாக சிலர் சொல்கிறார்கள். இராஜீக காரியங்களிலும் கூட இளைய ராணியின் யோசனையை கேட்பதாகச் சொல்கிறார்கள். தாங்கள் போதும் இடங்களுக்கெல்லாம் இளைய ராணியையும் அழைத்துப் போவதாக சொல்லுகிறார்கள்.
ஹாஹா... ஹாஹா...


கூட்டத்திலிருந்து ஒரு சிரிப்பு சப்தம்.
சிரித்தது யார்? உடனே முன்வந்து சிரித்ததற்கு காரணத்தை கூறுங்கள். (என்று கர்ஜித்து, கத்தியை உறையிலிருந்து உருவினார்).


நான்தான் சிரித்தேன், பதற வேண்டாம் சம்புவரையரே! நான் உங்களை எல்லாம் ஒன்று கேட்கிறேன். தாலி கட்டி மணந்த மனைவியை நான் போகும் இடம் எல்லாம் அழைத்து போவது ஒரு குற்றமா? அவ்விதம் நான் பல இடங்களுக்கு அழைத்து போவது உண்மை தான். ஆனால் இராஜாங்க காரியங்களில் இளைய ராணியின் யோசனையை கேட்கிறேன் என்று சொல்வது மட்டும் தவறு.


அப்படியானால், அந்தப்புரத்தில் இருந்திருக்க வேண்டிய பல்லக்கு இங்கே நாம் அந்தரங்க யோசனை செய்யும் இடத்திற்கு ஏன் வந்திருக்கிறது?
சரியான கேள்வி, மறுமொழி கூற நான் கடமைப்பட்டவன். இந்த கூட்டம் கலைவதற்கு முன்னால் உங்கள் சந்தேகத்தை நான் தீர்த்து வைக்கிறேன்.
இன்னும் அரை நாழிகை (முப்பது விநாடி) பொறுத்திருக்கலாம் அல்லவா? அவ்வளவு நம்பிக்கை என்னிடம் உங்களுக்கு இருக்கிறதல்லவா?
இருக்கிறது...
இருக்கிறது...


நாம் பேசியதை பழுவேட்டரையர் தவறாக நினைத்துக் கொண்டாரோ.
வணங்காமுடியார் மனதை நான் நன்கு அறிவேன்.
நீங்கள் எல்லாம் என்னிடம் வைத்துள்ள நம்பிக்கையையும் நான் அறிவேன். ஆகையால் இன்று எதற்காக கூடினோமோ அதைப்பற்றி முதலில் முடிவு செய்வோம்...
தங்களுடைய கருத்துக்கு மாறாக சொல்லக் கூடியவர் இந்த கூட்டத்தில் யாரும் இல்லை.
சம்புவரையரே, அப்படி செய்வது முறையன்று.

குறிப்பு:

வாசகர்களே... இந்த குறுநாவல் கூட்டத்திற்கான காரணத்தை முழுவதுமாக புரிந்து கொள்ள வேண்டுமானால், சோழர் குல வரலாற்றை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

பிற்கால சோழ பேரரசுக்கு அஸ்திவாரம் அமைத்தவர் விஜயாலய சோழரின் பேரன் முதல் பராந்தகன் ஆவார். இவர் மதுரையும், ஈழமும் கொண்ட கோப்பரகேசரி என்ற பட்டம் பெற்று சரித்திரத்தில் புகழ் பெற்று விளங்கினார். இவருக்கு மூன்று புதல்வர்கள். அவர்களில் மூத்தவர் இராஜாதித்தர். அவர் தக்கோலப் போரில் ராஷ்ட்டிரகூட படைகளை நிர்மூலம் ஆக்கியவர். அப்போரில் வெற்றி பெறும் தருவாயில் வஞ்சகன் பூதுகனின் சூழ்ச்சியால் கொல்லப்படுகிறார். இப்போரில் இராஜாதித்தர் யானையின் மீதிருந்து போர் செய்து வீரமரணம் அடைந்ததால், யானை மேல் துஞ்சிய தேவர் என்று வரலாற்றில் புகழப்படுகிறார். அடுத்து பராந்தக சக்ரவர்த்தி தனது இரண்டாவது மகன் கண்டராதித்தரை ஆட்சியில் அமர்த்துகிறார். ஆனால், கண்டராதித்தரின் மனம் ஆட்சி அதிகாரத்தில் செல்லவில்லை, மாறாக சிவபக்தியில் செல்கிறது.

இச்சந்தர்பத்தில் எதிரிகளின் பலம் கூடுகிறது. அச்சமயம் அவருடைய புதல்வர் ஒரு வயது குழந்தை. கண்டராதித்தர் சோழ நாட்டின் பாதுகாப்பு கருதி தனது தம்பி அரிஞ்சய தேவரே பட்டத்துக்கு வர வேண்டும் என்று கூறிவிட்டு இறைவனடி சேர்கிறார். ஆனால், அரிஞ்சயரும் விதி வசத்தால் அதிக நாள் சோழ சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கவில்லை. அப்போது அரிஞ்சயருடைய புதல்வர் சுந்தர சோழர், இருபது வயது இளம் காளை. அனைவரும் அவரை ஒரு மனதாக ஆட்சி பீடத்தில் அமர வைத்தார்கள். அவரும் சோழ நாட்டை மிக சீரும், சிறப்புமாக ஆட்சி செய்து வந்தார். ஆனால் கடந்த சில வருடங்களாக, சுந்தர சோழரின் உடல்நிலை சீர் கெட்டிருப்பதால், அடுத்து பட்டத்துக்குரியவர் யார்?

கண்டராதித்தரின் மகன், மதுராந்தகன் பட்டத்துக்கு வருவது முறையா? இல்லை அரிஞ்சயரின் பேரன், சுந்தர சோழரின் மகன், ஆதித்த கரிகாலன் பட்டத்துக்கு வருவது முறையா? என்ற கேள்வியை பழுவேட்டரையர் எழுப்புகிறார். மதுராந்தகன் சின்ன பழுவேட்டரையரின் மருமக பிள்ளை என்பது குறிப்பிடத்தக்கது.


மூத்தவராகிய கண்டராதித்ததேவரின் புதல்வர் மதுராந்தகர்தான் பட்டத்துக்கு உரியவர். அது தான் நியாயம், அதுதான் தர்மம்.
என் அபிப்பிராயமும் அதுவே...
எங்களுடைய அபிப்பிராயமும் அதுவே...


அப்படியானால் அந்த உரிமையை நிலை நாட்டுவதற்கு நாம் ஒவ்வொருவரும் உடல், பொருள், ஆவியை தத்தம் செய்து போராட சித்தமாய் இருக்கிறோமா?
அவ்விதமே தெய்வ சாட்சியாக, சபதம் கூற நாங்கள் சித்தமாய் இருக்கிறோம். ஆனால்...


சபதம் எடுத்துக் கொள்வதற்கு முன்னால் ஒரு விஷயத்தை தாங்கள் தெளிவுபடுத்த வேண்டும்.
பழுவேட்டரையர் கூர்ந்து கவனிக்கிறார்.
இளவரசர் மதுராந்தகரின் கருத்து என்ன?
இராஜ்யம் ஆள்வதில் அவருக்கு விருப்பமில்லை என்றும், அவருடைய தாயாரே தமது புதல்வர் பட்டத்துக்கு வருவதற்கு முற்றிலும் விரோதமாயிருக்கிறார் என்றும் கேள்விப்பட்டிருக்கிறோம். அப்படியிருக்கையில் தாங்கள் கூறுவது.....?


சரியான கேள்வி! தக்க சமயத்தில் கேட்டீர்கள். முன்னமே நான் சொல்லி இருக்க வேண்டும். சொல்ல தவறியதற்காக மன்னியுங்கள். தன் அன்னை செம்பியன் மாதேவியின் வாக்கே தெய்வத்தின் வாக்கு என்று மதித்து சிவபக்தியிலே முழுவதுமாக இக்காலம் வரை ஈடுபட்டிருந்தார். அது உண்மை!
ஆனால், சில காலமாக அவருடைய மனது, சிறிது சிறிதாக மாறி வந்திருக்கிறது. இந்த சோழ சாம்ராஜ்யம் தமக்கு உரியது, அதை பராமரிப்பது தம்முடைய கடமை என்ற எண்ணம் அவருடைய மனதில் வேரூன்றி வளர்ந்திருக்கிறது.
அதற்கு அத்தாட்சி என்ன?
உங்களுக்கெல்லாம் திருப்தி தரக்கூடிய அத்தாட்சியை நான் இப்போதே அளிக்கிறேன்.


அத்தாட்சி அளித்தால் அனைவரும் சத்தியப் பிரமாணம் செய்ய சித்தமாய் இருக்கிறீர்களா?
இருக்கிறோம்...
இருக்கிறோம்..
ஐயோ! என்ன இது? பட்டத்து இளவரசர் ஆதித்த கரிகாலருக்கு உகந்தபடி நடந்து கொண்டால் சோழப் பேரரசில் பெரிய பதவியை அடையலாம் என்றல்லவா ஆசைபட்டோம். உண்மையில் பட்டத்துக்கு உரியவர் யார்? மதுராந்தகரா? கரிகாலரா?
கண்டராதித்தரின் புதல்வரே! சிவபக்த சிரோன்மணியே!


வருங்கால சக்ரவர்த்தியே!
வர வேண்டும், வர வேண்டும்.
மதுராந்தக தேவரைப் பார்த்து அனைவரும்,
மதுராந்தக தேவர் வாழ்க!
பட்டத்து இளவரசர் வாழ்க!
வெற்றி வேல்! வீர வேல்!
என்று ஆவேசமாக முழங்கினார்கள்.
ம்... நந்தினியின் மந்திரம் இவனிடம் நன்றாகவே வேலை செய்திருக்கிறது.
உங்கள் அனைவரையும் சந்தித்ததில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.


பரவாயில் லையே, நம்ம மருமகபிள்ளை தேறிவிட்டாரே!
இச்சந்தர்ப்பத்தை நழுவ விடக் கூடாது. இப்போதே உறுதி மொழி எடுத்துவிட வேண்டியதுதான்.
தாங்கள் அளித்த வாக்கின்படி அனைவரும் உறுதிமொழி எடுக்க தயாராக இருக்கிறீர்கள் அல்லவா?
அதைகேட்ட அனைத்து சிற்றரசர்களும் தங்களுடைய வாளை உறையிலிருந்து வெளியே எடுக்கின்றனர் சபதம் செய்வதற்கு.


அனைவரும் தங்களுடைய உறைவாளை உயர்த்தி சபதம் செய்கின்றனர்.
வருங்கால சக்ரவர்த்தி மதுராந்தக தேவருக்கு உடல், பொருள், ஆவி அனைத்தும் தத்தம் செய்து நியாயத்தை நிலை நாட்டுவோம்!


நியாயத்தை நிலை நாட்டுவோம்!
நீதியை நிலை நாட்டுவோம்!


மதுராந்தக தேவர் வாழ்க!
கண்டராதித்தரின் புதல்வர் வாழ்க!
வருங்கால சக்ரவர்த்தி வாழ்க!
வெற்றி வேல்!
வீர வேல்!


இனியும் நாம் இங்கிருப்பது நமக்கு நல்லதல்ல.
என்று எண்ணிய வந்தியத்தேவன் உடனே தன் இருப்பிடத்திற்கு சென்று படுத்துக்கொண்டான்.
ஆனால் அவனுக்கு உறக்கம் வரவில்லை. சற்று நேரத்திற்கு முன் நடந்த அரசியல் சம்பவங்கள் அவன் மனதை பாடாய் படுத்துகிறது.


இப்போது நடப்பது யாருடைய ஆட்சி? சுந்தரசோழர் ஆட்சி தானே! சுந்தரசோழர் ஆட்சியின் கீழ் உள்ளவர்களே அவருடைய வாரிசுகளுக்கு எதிராக சதி செய்கிறார்களே, இதுதான் அரசியலோ?! ஆஹா இந்த அரசியலில் நான் வேறு வந்து அகப்பட்டுக் கொண்டேனே!
இவ்வாறு நினைத்துக் கொண்டிருக்கையிலேயே நித்திராதேவி அவனை ஆட்கொண்டுவிடுகிறாள்.


வந்தியத்தேவன் குளிக்க ஆற்றில் இறங்குகிறான்.
அப்போது திடீரென்று ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து நீர் சுழல் உருவாகி, அது அவன் அருகில் வருகிறது .
அதை கண்ட வந்தியத்தேவன்...
ஆஹா... அகப்பட்டுக் கொண்டோமே! நமக்கு நீச்சல் வேறு சரியாக தெரியாதே!


என்று நினைப்பதற்குள்ளாகவே அந்த சுழல் அவனை இழுத்துச் செல்கிறது.
அய்யோ... கடவுளே! என் விதி இப்படியா முடிய வேண்டும்.
அந்த சுழல் இன்னும் ஆழத்திற்கு அவனை இழுத்துச் செல்கிறது. நம் வந்தியத்தேவன் எப்பேர்பட்ட வீரன்! ஆனால், அவனால் கூட ஒன்றும் செய்ய முடியவில்லை, இயற்கை சீற்றத்திற்கு முன்னால் யார்தான் என்ன செய்ய முடியும்.


வாசகர்களே! பதற வேண்டாம், நம் வந்தியத்தேவன் இதைவிட ஆபத்தான அரசியல் சுழலில் மாட்டிக்கொண்டிருக்கிறான்! கடவுள்தான் அவனை காப்பாற்ற வேண்டும்.


அவன் சற்றும் எதிர்பாராத வகையில் ஆற்று வெள்ளம்
அவனை வெளிக்கொண்டு வந்து கரை சேர்க்கிறது.
நண்பா... வந்தியத்தேவா...


காலை சூரிய உதயம். கடம்பூர் அரண்மனை.


நான் எங்கிருக்கிறேன்?


நன்றாக உறங்கினாயா? ஏன் தரையில் படுத்திருக்கிறாய்?
நண்பா! இரவு நீ என்னுடன் வந்து உறங்கவில்லையா?
நேற்றிரவு உன்னுடன்தான் படுத்து உறங்கினேன். அது கூட உனக்கு தெரியவில்லையா?
ம்... இவன் எப்போது வந்து நம்முடன் படுத்தான்! மேலும் நாம் கேள்வி கேட்காமல் இருப்பதுதான் நல்லது. நாம் ஏன் நம் நண்பனை தர்மசங்கடத்திற்கு ஆளாக்க வேண்டும்.


நண்பர்கள் இருவரும் காலை விருந்தை முடித்துக்கொண்டு கொள்ளிடக் கரைக்கு வருகிறார்கள். (வந்தியத்தேவனை வழியனுப்ப...)
உன் சகோதரியை பற்றி வடபெண்ணை நதிக்கரையில் என்னவெல்லாமோ வர்ணனை செய்தாய்...
உன் வீட்டில் நான் அவளை நன்றாக கூட பார்க்க முடியவில்லை.
உன் அன்னையின் பின்னால் ஒளிந்து கொண்டு அவள் எட்டிப் பார்த்த போது, அவள் முகத்தில் எட்டில் ஒரு பகுதிதான் தெரிந்தது.


ஆமாம்...
உன் சகோதரியின் பெயர் என்னவென்று சொன்னாய்?
மணிமேகலை.
ஆஹா! என்ன இனிமையான பெயர். பெயரை போலவே அழகும் குணமும் இருந்து விட்டால்...
நண்பா உன்னை நான் வேண்டி கேட்டுக் கொள்கிறேன். என் தங்கையை மறந்து விடு.
இது என்ன கந்தமாறா... நேற்று இரவு கூட உன் வீட்டுக்கு நான் மருமகனாக வரப்போவதை பற்றி ஜாடை மாடையாக சொன்னாயே?
அவ்விதம் நான் சொன்னது உண்மைதான். ஆனால், பிறகு வேறு நிலைமை ஏற்பட்டுவிட்டது.



அது என்ன ?
என் பெற்றோர் வேறு இடத்தில் மணிமேகலையை மணம் முடிக்க முடிவு செய்துவிட்டார்கள். அதற்கு அவளும் சம்மதித்து விட்டாள்.
நண்பா, இதில் எனக்கு எந்த ஒரு வியப்பும் இல்லை, ஏமாற்றமும் இல்லை. இது ஒரு மாதிரி நான் எதிர்பார்த்ததுதான்.
எதிர்பார்த்தாயா! அது எப்படி ?
என்னை போன்ற ஏழை அநாதைக்கு யார்தான் பெண் கொடுப்பார்கள் ?
நண்பா... ஏன் இப்படி கூறுகிறாய்...?
ஊரும் வீடும் இல்லாதவனை எந்த பெண் மணந்து கொள்ள விரும்புவாள்?


நண்பா போதும் தயவு செய்து நிறுத்து. நீ சொல்வது ஒன்றும் காரணமில்லை.. வேறு முக்கிய காரணம் இருக்கிறது.
கந்தமாறா, இது என்ன! இன்றைக்கு ஒரே மர்மமாகவே பேசுகிறாய்?
அதற்காக என்னை மன்னித்துவிடு நண்பா. உன்னிடம் கூட நான் மனம் விட்டு பேச முடியாத சூழ்நிலையில் இருக்கிறேன்.
........ம்
எது எப்படி போனாலும் நம்முடைய நட்புக்கு எந்தவிதமான பங்கமும் வராது, என்னை நம்பு.
உனது இந்த வாக்குறுதிக்கு எனது வந்தனம்...


இருவரும் கொள்ளிடக்கரை வந்து சேருகிறார்கள்.
கொள்ளிடக்கரையை கண்ட வந்தியத்தேவன் பெரும் வியப்புக்குள்ளாகிறான். இவ்வளவு அகண்ட ஆற்றை அவன் வாழ்நாளில் முதல் முறை காண்கிறான். அப்போது அவன் மனதில் ஒரு கேள்வி எழுகிறது. எப்படி தன் குதிரையை அக்கரைக்கு அழைத்து செல்வது என்று?
நண்பா, நீ முதலில் அந்த படகில் ஏறிச்செல் உன் குதிரையை கொஞ்ச நாழிகைக்குள் தகுந்த ஏற்பாடு செய்து அனுப்பி வைக்கிறேன்.


கரைக்கு பக்கத்தில் வந்தவுடன் தன் நண்பன் தனக்காக செய்திருக்கும் ஏற்பாட்டை கண்டு மனதிற்குள் மகிழ்ச்சி அடைகிறான். அங்கு இரு படகுகள் ஒன்றுடன் ஒன்று இணைத்து குதிரையை ஏற்றிச் செல்ல வசதியாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.
வணக்கஞ்சாமி...
இவர் என் நண்பர். பத்திரமாக அக்கரைக்கு கொண்டு சேர்த்துவிட வேண்டும்.


ஆகட்டுஞ்சாமி...
நண்பா, கோபம் ஏதும் இல்லையே... வராதவன் வந்தாய், உன்னை நன்றாக கூட கவனிக்க முடியவில்லை.
அதெல்லாம் ஒன்றுமில்லை. பெரிய, பெரிய விருந்தாளிகள் எல்லாம் வந்திருக்கும் பொழுது நீ தான் என்ன செய்வாய்... சரி நான் சென்று வருகிறேன்.
வந்தியத்தேவா, நான் கூறியதை மறந்துவிடாதே திரும்பி வரும்பொழுது அவசியம் என் வீட்டில் சில நாட்கள் தங்கிச் செல்ல வேண்டும்.
ஆஹா! கந்தமாறனை போல் நண்பன் கிடைத்தது உண்மையிலேயே நான் செய்த பாக்கியம்.
படகில்
சிவனடியாரை கண்டதும் வந்தியத்தேவனுக்கு ஆழ்வார்க்கடியான் ஞாபகம் வருகிறது. ஒரு வேளை அந்த வைஷ்ணவனும் இங்கு வந்தாலும் வரலாம் என்று எண்ணுகிறான்.


படகோட்டி கோல் போட ஆரம்பிக்கிறார்.
நிறுத்துங்கள்....
தொலைவிலிருந்து நிறுத்துங்கள் என்று குரல் வருகிறது.
இந்த பாஷாண்டி ஏன் இங்க வரான் !
நிறுத்துங்கள்....
இது அந்த வைஷ்ணவரின் குரல் போல் அல்லவா இருக்கிறது.
ஆழ்வார்க்கடியானின் குரல் கேட்டு படகோட்டி கோல் போடுவதை நிறுத்துகிறான்.
நீ புறப்படு.
ஆழ்வார்க்கடியான் உடன் வருவது பிடிக்காமல், படகோட்டியிடம்...


படகை விடு, பாஷாண்டி உடன் நான் படகில் வரமாட்டேன். அவன் வேறு படகில் வரட்டும்.
திரும்பிப்பார்த்த வந்தியத்தேவன்,
நாம் நினைத்தது போலவே அவன் இங்கும் வந்துவிட்டானே. உண்மையில் அவன் யார்? அவன் ஏன் நம்மை பின் தொடர்கிறான்? வரட்டும் பார்த்துக் கொள்ளலாம்.
நிறுத்துங்கள்....


கொஞ்சம் பொறுங்கள்... அவரும் வரட்டும். படகில் நிறைய இடம் இருக்கிறதே அவரையும் ஏற்றிக்கொண்டு போகலாம்.
என்ன அவசரம் இந்த வைஷ்ணவருக்கு? இப்படி பூமியே அதிரும்படியாக ஓடி வருகிறாரே!
வரட்டும், வரட்டும். அன்று ஏதோ பழுவேட்டரையர் புண்ணியத்தில் தப்பித்துக் கொண்டான். இன்று ஒரு கை பார்த்துவிட வேண்டியதுதான்.
இதோ வந்துட்டேன்....

வாசகர்களே, சிவனடியார் ஏன் இவ்வாறு எண்ணுகிறார்? அன்று விண்ணகரக் கோயிலின் விவாதத்தின் போது பெரும் கலவரம் ஏற்பட்டதல்லவா. அவ்வேளையில் பழுவேட்டரையரின் பரிவாரங்கள் அவ்வழியாக வந்ததால் அனைவரின் கவனமும் பழுவேட்டரையரின் பக்கம் திரும்பியது என்பது நினைவிருக்கும்.







தம்பி உனக்காக போனால் போகிறது என்று இந்த வைஷ்ணவனை ஏற விட்டேன். ஆனால் ஓடத்தில் இருக்கும் வரையில் அவன் அந்த எட்டெழுத்து பெயரை சொல்லவே கூடாது.


இதை கேட்ட வந்தியத்தேவன் ஆழ்வார்க்கடியானை பார்த்து...


நம்பி அடிகளே! தாங்களுடைய காதில் விழுந்ததா?
இவர் ஐந்தெழுத்து பெயரை சொல்லாதிருந்தால் நானும் எட்டெழுத்து திருநாமத்தை சொல்லமாட்டேன்.
என்று பதிலடி கொடுக்கிறான்.
சாக்ஷாத் சிவபெருமானுடைய பஞ்சாட்ரத் திருநாமத்தைச் சொல்லக் கூடாது என்று தடைசெய்வதற்கு இவன் யார்?
"கற்றுணைப்பூட்டி கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமசிவாயவே!"


என்று கர்ஜித்துவிட்டு ஆழ்வார்க்கடியானை பார்க்கிறார்.
இதை கேட்டு சும்மா இருப்பானா நம்ம ஆழ்வார்க்கடியான்!
நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன் நாரயணா எனும் நாமம்.
சிவ.. சிவ...
தம்பி, நீயே அந்த வீர சைவரை கொஞ்சம் கேள்... இவர் ஏன் திருமாலின் பெயரை கேட்பதற்கு கூட இவ்வளவு கஷ்டப்படுகிறார்?


தம்பி உனக்கு ஒன்று தெரியுமா...! ஸ்ரீரங்கத்தில் பள்ளி கொண்டிருக்கும் பெருமாளின் பாத கமலங்களை அலம்பிவிட்ட பிறகுதான் இந்த கொள்ளிட நதியே கீழே வருகிறது.
பெருமாளின் பாதம்பட்ட தீர்த்தம், புண்ணிய தீர்த்தம் என்று, சிவ பெருமான் திருவானைக்காவலில் அந்த தண்ணீரிலேயே மூழ்கித் தவம் செய்கிறார் !
என்னடா சொன்னாய்?
ஆழ்வார்க்கடியான் கூறியதைக் கேட்ட சிவனடியார் கோபங்கொண்டு வெகுண்டெழுகிறார்.


இறுதியில் இருவருக்கும் கைகலப்பு ஏற்படுகிறது... அதில் படகு கவிழ்ந்து விடும்படி ஆடுகிறது.
...ஆஆ
ஆஆ...
நேற்று சுழலில் மாட்டிக்கொண்டது போல் கனவு கண்டதிலிருந்து மீளாத வந்தியத் தேவனுக்கு இவர்களின் செயல் மேலும் அச்சத்தை கூட்டியது. உடனே வந்தியத்தேவன்...
பக்த சிரோன்மணிகளே, நீங்கள் இருவரும் கொள்ளிட வெள்ளத்திலே வீழ்ந்து, நேரே மோட்சத்திற்குப் போக ஆசைப்படுகிறீர்களா?







படகோட்டி காட்டிய இடத்தில், இரண்டு முதலைகள் வாயை பிளந்து கொண்டு காத்திருக்கின்றன, இவர்களை கபளீகரம் செய்ய...




கொள்ளிடக்கரை.
அங்க கொழு கொழுனு ஒருத்தன் இருக்கானே, அவன் தண்ணில விழுந்தா நல்ல இருக்கும்ல!
எவனாவது ஒருத்தன் விழுந்தா கூட போதும்! சும்மா பேசிக்கிட்டே இருக்கானுங்க...


ஆழ்வார்க்கடியான் பயத்தை வெளிக்காட்டாமல்,
எனக்கு முதலையை குறித்து சிறிதும் அச்சமில்லை. கஜேந்திரனை ரட்சித்த ஆதிமூலமான நாராயணமூர்த்தி எங்கே போய்விட்டார்?
சிவனடியார் ஆழ்வார்க்கடியானை பார்த்து நய்யாண்டியாக..
எங்கே போய்விட்டாரா? பிருந்தா வனத்து கோபிகா ஸ்திரீகளின் சேலை தலைப்பில் ஒருவேளை ஒளிந்து கொண்டிருப்பார்...
அதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக,
அப்படியில்லை... பத்மாசூரனுக்கு வரம் கொடுத்துவிட்டு, அலறியடித்துக் கொண்டு ஓடியது போல் சிவனுக்கு இன்னொரு சங்கடம் ஏற்பட்டிருக்கலாம்.


தம்பி திரிபுர சம்ஹாரத்தின் போது திருமால் அடைந்த கர்வ பங்கம் இந்த வைஷ்ணவனுக்கு ஞாபகம் இல்லை போலிருக்கிறது...
என்று கூறிவிட்டு சிரிக்கிறார்...
சுவாமிகளே நீங்கள் இருவரும் எதற்காக இப்படி சண்டை போடுகிறீர்கள்? யாருக்கு எந்த தெய்வத்தின் பேரில் பக்தியோ அந்த தெய்வத்தை வழிபட்டுக் கொள்வதுதானே.
இவ்வாறு வாதப்போர் ஆங்காங்கு நடைபெறுவது அக்கால வழக்கம்.
அதற்குள் படகு கரையை அடைகிறது. அனைவரும் இறங்கி கரையேறுகிறார்கள்.




பழந்தமிழ்நாட்டில் ஏறக்குறைய அறுநூறு ஆண்டு காலம் பௌத்த மதமும், சமண மதமும் செல்வாக்கு பெற்றிருந்தன. அக்கால கட்டத்தில் தமிழகம் பல நலன்களை எய்தியது. சிற்பம், சித்திரம், கவிதை முதலிய கலைகள் தழைத்தோங்கின. பின்னர் ஆழ்வார்களும், நாயன்மார்களும் தோன்றி அமுதொழுகும் தெய்வ பக்தி பாசுரங்களை பொழிந்தனர். வைஷ்ணவத்தையும், சைவத்தையும் தழைத்தோங்க செய்தார்கள். இவர்களுடைய பிரச்சார முறை மிக சக்தி வாய்ந்ததாக இருந்தது.


அது போகட்டும் தம்பி, என்னையும் நீ கடம்பூர் அழைத்து சென்றிருக்கலாம் அல்லவா...
நான் போவதே பெரிய கஷ்டமாகி விட்டது நம்பிகளே.
அப்படியா! அப்படின்னா நீ கடம்பூர் அரண்மனைக்குள் போகவில்லையா?
அதெப்படி, நான் ஒன்றை எண்ணிவிட்டால் பின் வாங்குவேனா?
அதானே பார்த்தேன்... நீ தான் வீரனாயிற்றே?
நம்பிகளே, இதில் உள்குத்து எதுவும் இல்லையே!
தம்பி அதெல்லாம் ஒன்றுமில்லை... நீ எப்படி கடம்பூர் வாயிற் காவலர்களை தாண்டி உள்ளே சென்றாய்? அதை கூறு. (என்று ஆர்வமாக கேட்டான்,)


கடம்பூர் வீரர்கள் ஒன்று கூடி என்னை எதிர்த்தார்கள், எதிர்த்த அனைவரும் மண்ணை கவ்வினார்கள். புற்றிலிருந்து ஈசல் புறப்பட்டு வருவதை போல் வந்து கொண்டே இருந்தார்கள்.
அதற்காக நான் சிறிதும் அஞ்சவில்லை, அதற்குள் என் உயிருக்கு உயிரான நண்பன் வந்து, அவர்களை துரத்து என்னை சகல மரியாதையுடன் அழைத்துச் சென்றான்.
அப்படியா... ?
நண்பன் என்றால் சும்மாவா! பிறகு மேலே சொல்லு தம்பி.


ஆமாம், அங்கு யார், யார் வந்திருந்தார்கள் ?
எத்தனையோ பிரமுகர்கள் அங்கு வந்திருந்தார்கள். அவர்களுடைய பெயரெல்லாம் எனக்கு தெரியாது. (என்று பக்குவமாக நழுவிக் கொண்டான்.)
என்ன தம்பி ! இப்படி சொல்ற.
பழுவேட்டரையர் வந்திருந்தார், அவருடைய இளம் மனையாளும் வந்திருந்தாள். அப்பப்பா என்ன அழகு!
பல்லக்கில் வந்தது மதுராந்தகன் என்பதை மறைத்து இவ்வாறு கூறினான்.
அவன் மறைத்து கூறுவதை அறிந்த ஆழ்வார்க்கடியான்.
உண்மையாகவா சொல்கிறாய்?
என்று ஒன்றும் தெரியாதவன் போல் கேட்கிறான்.


ஏன் நம்பிகளே, அவள் அழகை பற்றி உமக்கு தெரியாதா என்ன? உம்மை கண்டு அல்லவா அவள் திரை சீலையை மூடிக் கொண்டாள்!
நீ இளம்பிராயத்தவன், உன்னை பல பெண்கள் பார்ப்பார்கள். என் கதையை விடு தம்பி, அங்கு என்னென்ன களியாட்டங்கள் நடந்தன?
வந்தியத்தேவனை புகழ்வது போல் புகழ்ந்து மேலும் பல விவரங்களை அறிய முயற்சிக்கிறான் ஆழ்வார்க்கடியான்.
ஆனால் அதிக விவரங்களை கூற விரும்பாத வந்தியத்தேவன், சட்டென்று பேச்சின் போக்கை மாற்றி,
ஒய்... ஆழ்வார்க்கடியான் நம்பிகளே, எனக்கு ஒரு சந்தேகம்... அதை கேட்கட்டுமா?
தாராளமாய் கேள் தம்பி
தடியை சுழற்றி கொண்டு அடிக்க வரமாட்டீரே?


உன்னையா...! உன்னை அடிக்க என்னால் முடியுமா?
உம்முடைய வைஷ்ணவம், பக்தி, ஊர்த்துவ புண்டரம், பாசுரப்பாடல் எல்லாம் வெறும் வேஷம்.
என்று அதிரடியாக கூறினான்.
அதைக் கேட்டு அதிர்ந்த ஆழ்வார்க்கடியான்,
அபச்சாரம்! அபச்சாரம்!! இது என்ன பேச்சு?


அபச்சாரமும் இல்லை, உபச்சாரமும் இல்லை. அப்படியானால் பல்லக்கில் வந்த அந்த பெண்ணிடம் ஓலை கொடுக்கும்படி என்னை ஏன் கேட்டீர்?
அதிலும் அடுத்தவனின் மனைவியிடம் மனம் செலுத்தலாமா? நீர் கடம்பூர் மாளிகைக்கு வர வேண்டும் என்று சொன்னது அவளை பார்ப்பதற்குத்தானே? (என்று அடுத்தடுத்து வந்தியத்தேவன் கேட்ட கேள்விக் கணைகளால் அதிர்ந்து போனான் ஆழ்வார்க்கடியான்,)
இவனை நாம் வேவு பார்க்க போய், இவன் நம்மையே வேவு பார்க்கிறானே! இவனிடம் சற்று ஜாக்கிரதையாகத்தான் இருக்க வேண்டும்.
இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், அதற்கு நீ கூறிய காரணம்தான் தவறு. நான் கூறுவதை கவனமாக கேள்.
என்று தன் இளம் வயது கதையை கூற ஆரம்பிக்கிறான்.


நான் பாண்டிய நாட்டில் வைகை நதிக்கரையில் ஒரு கிராமத்தில் பிறந்தவன்.
நாங்கள் பரம விஷ்ணு பக்தர்கள்.
ஒரு நாள் என்னுடைய தந்தை, பெருமாளுக்கு கைங்கர்யம் செய்ய மலர்கள் பறித்து வர நதிக் கரையிலுள்ள நந்தவனத்துக்கு சென்றார்.


மலர்களை பறித்துக் கொண்டிருக்கும் பொழுது ஒரு குழந்தையின் அழுகுரல் கேட்டது.
குரல் வந்த திசையில் சென்று பார்த்தால், அங்கு அழகிய பெண் குழந்தை ஒன்று அநாதையாக கிடந்தது.
அந்த பச்சிளம் குழந்தை என் தந்தையை கண்டதும் சிரித்தது.


என் தந்தைக்கு அக்குழந்தையை பிடித்துப்போய், எங்கள் ஆத்துக்கு குழந்தையை கொண்டு வந்தார்.
என் தாய் அக்குழந்தையை சீராட்டி, பாலூட்டி வளர்த்தாள்.
குழந்தை அழகாக இருந்தது, அதற்கு நந்தினி என்று பெயரிட்டு வளர்த்தோம்.
நந்தினி....
நந்தினி....
நந்தினி....
நானும் அவளை என் தங்கையாகவே பாவித்து பாராட்டி வளர்த்தேன்.


நந்தினிக்கு பிராயம் வளர்ந்தது போல் அவளுக்கு பெருமாளிடம் பக்தியும் வளர்ந்தது.
அவள் பாசுரங்கள் பாட என் தந்தையிடமிருந்து கற்றிருந்தாள். அவளுடன் சேர்ந்து நானும் பாடுவேன்.
அழகாக பாடுவதை கேட்ட மக்கள், அவள் மற்றொரு ஆண்டாளாகி பக்தர்களையெல்லாம் ஆட்கொள்ளப் போகிறாள் என்று நம்பினார்கள்.
எனக்கும் அந்த நம்பிக்கை இருந்தது.


நாங்கள் இருவரும் ஊர் ஊராக சென்று ஆழ்வார்களின் பாசுரங்களைப் பாடினோம்.
நந்தினி துளசி மாலை அணிந்து பக்தி பரவசத்துடன் பாசுரம் பாடியதைக் கேட்டவர்கள் மதி மயங்கிப் போனார்கள்.


ஆஹா....
ஓஹோ.....
ஆஹா.....
ஒரு சமயம் நான் திருவேங்கடத்துக்கு யாத்திரை சென்றேன். திரும்பி வர காலதாமதம் ஆகிவிட்டது. அதற்குள் என்னவெல்லாமோ நடந்துவிட்டது.
என்ன நடந்தது!


அந்நேரத்தில்தான் பாண்டியர்களுக்கும், சோழர்களுக்கும் இறுதிப்போர் மதுரைக்கு அருகில் மூண்டது.


சோழர்களும், பாண்டியர்களும் ஒருவரை ஒருவர் முற்றிலும் அழித்துவிட வேண்டுமென்று எண்ணி அகோரப்போர் புரிந்தனர்.






அப்போரில் பாண்டியர்களின் சேனை சர்வநாசம் அடைந்தது.


மன்னன் வீரபாண்டியன் உடம்பெல்லாம் காயங்களுடன் போர்க்களத்தில் வீழ்ந்திருந்தான்.


அவனுடைய மெய்க்காவலர்கள் அவனை மீட்டு, வைகை கரையை ஒட்டி இருந்த எனது வீட்டில் நந்தினியிடம் ஒப்படைத்தனர்.
வீரபாண்டியனை கண்டு மனமிறங்கி, நந்தினி அவனுக்கு பணிவிடை செய்தாள்.
அவனின் துரதிஷ்டம், சோழ படையினர் என் வீட்டில் தங்கியிருந்த வீரபாண்டியனை கண்டுபிடித்துவிட்டனர்.


வீரபாண்டியன் இருக்கும் இடத்தை அறிந்த ஆதித்த கரிகாலர், அங்கு ஆவேசத்துடன் வந்தார்.


நந்தினி எவ்வளவு தடுத்தும் கேளாமல், ஆவேசத்துடன் இருந்த கரிகாலர் வீரபாண்டியனின் தலையை வெட்டினார்.


அதன் பின் அங்கு வந்த பெரிய
பழுவேட்டரையர் நந்தினியின்
அழகில் மயங்கி அவளை சிறைப்
பிடித்துக்கொண்டு சென்றுவிட்டார்.


இது நடந்து மூன்று வருடங்கள் ஆகிறது. அன்றிலிருந்து நான் நந்தினியை பார்க்கவே முடியவில்லை. ஒரு தடவையாவது அவளை பார்த்து பேச வேண்டும். அவள் விரும்பினால், அவளை எப்படியாவது காப்பாற்றிக் கொண்டு வரவேண்டும் என்று எண்ணுகிறேன். அதற்கான நேரம் கை கூடவில்லை.
இதைக் கேட்டு வந்தியத்தேவன் மனம் இளகியது.
இவன் கூறுவது எல்லாம் உண்மைதானா? அல்லது இவனது கற்பனையா! ம்...
அப்போது குதிரையை படகில் ஏற்றிக்கொண்டு வருகிறான் இடும்பன்காரி, இவன் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளுள் ஒருவன்.
வந்தியத்தேவன், குதிரையை கண்டதும் எழுந்திருக்கிறான்.
தம்பி, என்ன அவசரம் குதிரையை காவலன் அழைத்து வருவான்.


நீ... வா... வந்து உட்காரு.
தம்பி, எனக்கு நீ ஒரு உதவி செய்வாயா?
நான் என்ன உதவி செய்ய முடியும்?
பெரிய பழுவேட்டரையர் இந்த சோழ பேரரசையே ஆட்டுவிக்கும் ஆற்றல் உடையவர்! என்னால் என்ன செய்ய முடியும்? (என்று மிக கவனமாக பேசினான்.)
நம்பிகளே... சுந்தரசோழ மகாராஜாவுக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால், அடுத்து பட்டத்துக்கு உரியவர் யார்? உமக்கு தெரிந்திருக்குமே...
நடுநிசிக் கூட்டத்திற்கு பிறகு, "அடுத்து பட்டத்திற்கு வரப்போவது யார்?" என்ற கேள்வி நம் அனைவருடைய மனதிலும் எழுவது இயல்புதானே, அதே கேள்வி நமது நாயகன் வந்தியத்தேவன் மனதிலும் எழுகிறது.


எனக்கு என்ன தெரியும் தம்பி? ஒருவேளை குடந்தை சோதிடரைக் கேட்டால் சொன்னாலும் சொல்லுவார்.
இவ்வாறு கூறி, சோதிடரிடம் வந்தியத்தேவனை அனுப்ப முயல்கிறான் ஆழ்வார்க்கடியான்.
ஓஹோ, குடந்தை சோதிடர் உண்மையிலே அவ்வளவு கெட்டிக்காரர்தானா!
அசாத்திய கெட்டிக்காரர்! சோதிடமும் பார்த்து சொல்லுவார், மனதையும் அறிந்து சொல்லுவார்.
தஞ்சைக்கு போகும் வழியில் தான் குடந்தை இருக்கிறது. அவரை எப்படியும் சந்தித்துவிட வேண்டியதுதான்.
ஆழ்வார்க்கடியானுக்கும், குடந்தை சோதிடருக்கும் இடையில் இரகசிய உடன்படிக்கை இருக்குமோ!



அதற்குள் குதிரையை இடும்பன்காரி அழைத்து வருகிறான். அங்கு ஆழ்வார்க்கடியான் இருப்பதை காண்கிறான்.
ஒரு நண்பனை கண்டால் எவ்வாறு மகிழ்ச்சி அடைவோமோ அவ்வாறு மகிழ்ச்சி அடைகிறான் வந்தியத்தேவன்.
எங்கே உன்னை பிரிந்து விடுவேனோ என்று எண்ணினேன்.
இந்த வைஷ்ணவன் நமக்காகத்தான் இங்கு காத்திருக்கிறானோ?
நம்பிகளே, நான் சென்று வருகிறேன்.
குதிரையில் ஏறிய வந்தியத்தேவன் மின்னல் வேகத்தில் செல்கிறான்....
தப்பிச்சேன்பா சாமி, ஒரே கேள்வி மேல கேள்வியா கேட்கிறானே அந்த வைஷ்ணவன். நல்லவேளை அவனிடம் ஒன்றும் சொல்லவில்லை.


இந்த வாலிபன் பொல்லாதவனாய் இருக்கிறானே! நான் ஆலத்தின் கீழ் நுழைந்தால் இவன் கோலத்தின் கீழ் அல்லவா நுழைகிறான்! ம்...
ஆழ்வார்க்கடியான் பேசிக் கொண்டிருப்பதை கண்ட இரும்பன்காரி.
என்ன சுவாமி, அரசமரத்தோடு பேசுறீங்களா? உங்களுக்கு நீங்களே பேசிக்கிறீங்களா?
அப்பனே, நான் எனக்கு நானே பேசிக்கெள்ளவும் இல்லை, அரசமரத்தோடு பேசவும் இல்லை. இந்த மரத்தின் மேல் வேதாளம் இருக்கிறது, அதனோடு சிறிது சல்லாபம் செய்தேன்.
அந்த வேதாளம் சைவமா? அல்லது வைணவமா?


அதைத்தான் நானும் கேட்டுக் கொண்டிருந்தேன். அதற்குள் நீ வந்து குறுக்கிட்டாய், வேதாளம் மறைந்துவிட்டது. போனால் போகட்டும் உன் பெயர் என்ன?
என் பெயர் இரும்பன்காரி.
ஓ...! இரும்பன்காரியா!
இரும்பன்காரி அப்போது மீன் முத்திரையை செய்து கொண்டே ஆழ்வார்க்கடியானை உற்றுப்பார்க்கிறான், அவனை தனது கூட்டாளிகளில் ஒருவன் என கருதி!
அப்பனே இது என்ன சமிக்ஞை? எனக்கு விளங்கவில்லையே?
சட்டென்று சுதாரித்துக் கொண்ட இரும்பன்காரி
நானா? நான் சமிக்ஞை ஒன்றும் செய்யவில்லையே! என் புறங்கையை தானே சொறிந்தேன்.
செய்தாய், செய்தாய், நான் பார்த்தேன். பரதத்தில் திருமாலின் முதல் அவதாரத்துக்கு ஒரு முத்திரை பிடிப்பதுண்டு. அது மாதிரி செய்தாயே!


திருமாலின் முதல் அவதாரம் என்றால்! அது என்ன?
திருமாலின் முதல் அவதாரம் தெரியாதா...? மச்சாவதாரம்!
மீனை சொல்றீங்களா?
ஆமாம் அப்பனே, ஆமாம்.
சாமி, உங்கள் கண்ணே விசித்திர மான கண்ணாயிருக்கிறதே! மரத் தின் மேலே வேதாளம் தெரிகிறது என்கிறீர்கள், என் கையிலே மச்ச அவதாரம் தெரிகிறது என்கிறீர்கள்!
ஒரு வேளை மீன் பேரிலே சாமிக்கு கொஞ்சம் ஆசை அதிகமோ!
சேச்சே! அந்த மாதிரியெல்லாம் பேசப்படாது. சரி, அது போகட்டும் நீ எந்த பக்கமா போற?
நான் மீண்டும் கடம்பூருக்கு போறேன்.
நாம எந்த பக்கமா போன இவனுக்கு என்ன?
ஒரு வேளை நீ இந்த பக்கமா போக போறாயோ என்று பார்த்தேன். சரி, சரி நீ புறப்படு, அதோ படகு புறப்படுகிறது.


சரி சாமி, நான் வருகிறேன்.
என்று கூறிவிட்டு, அங்கிருந்து செல்கிறான் இரும்பன்காரி.
இதற்குள் ஆழ்வார்க்கடியான், விசித்திரமான ஒரு செயலை செய்தான்.
சட்டென்று தாவி பக்கத்திலிருந்த அரசமரத்தின் மீது ஏறிவிட்டான்.
இரும்பன்காரி திடீர் என்று திரும்பி பார்க்கிறான். அங்கு ஆழ்வார்க்கடியானை காணவில்லை.
இந்த வைஷ்ணவன் எங்கு போனான்!


இவ்வாறு யோசித்துக்கொண்டே படகு கரைக்கு வந்தான், இரும்பன்காரி.
ஏன்னப்பா, அக்கரைக்கு வருகிறாயா?
இல்லை, இல்லை. அடுத்த படகில் வரப் போகிறேன், நீ போ.
அடடே! நீ வருகிற வேகத்தை பார்த்து அல்லவா நான் படகை நிறுத்தினேன்.
ஆழ்வார்க்கடியான் அரசமரத்தின் உச்சி வரையில் ஏறி, நன்றாக மறைந்து உட்கார்ந்து கொண்டு...
ஓஹோ! நான் நினைத்தது சரியாக போயிற்று, இவன் படகில் ஏறவில்லை. திரும்பி தான் வரப்போகிறான்.


சரியான தவறு செய்துவிட்டேனே! அன்று இரவு கோட்டை மதில்மேல் பார்த்தபோதே அவனை கடம்பூர் அரசரிடம் பிடித்து கொடுத்திருக்க வேண்டும். நம்ம கூட்டாளி என்றல்லவா எண்ணி விட்டுவிட்டேன்! ம்... இனி கவனமாக இருக்க வேண்டும்.
சுற்றும் முற்றும் பார்த்து, அங்கு யாரும் இல்லை என்பதை உறுதிபடுத்திக் கொண்டு மரத்தின் அடியில் உட்கார்ந்து கொண்டான்.
அவன் இன்னும் வரவில்லையே... இருட்டிய பின் அங்கு செல்வது கடினமாயிற்றே!
அப்போது தூரத்தில் ஒருவன் நடந்து வருகிறான், அவன் பெயர் சோமன் சாம்பவன்.


உனக்காக எத்தனை நேரம் காத்திருப்பது?
யார் கண்ணிலும் அகப்படாமல் வர வேண்டுமல்லவா. அதான் கொஞ்சம் நேரமாகிவிட்டது.
வா போகலாம். இருட்டியபின் அந்த காட்டிற்குள் வழித்தேடி செல்வது மிகவும் கடினம்.
இம்முறை தலைவர் நம்மை எங்கு வரச் சொல்லியிருக்கிறார்.
பகைவனின் பள்ளிப்படைக்கு.
பகைவனின் பள்ளிப் படைக்கா?


ஆழ்வார்க்கடியான் ஓசையின்றி
மரத்தைவிட்டு இறங்குகிறான்.
அவர்களை பின்தொடரும் நோக்கத்தோடு.
பள்ளிப்படைக்கு என்றார்களே! யாருடைய பள்ளிப்படைக்கு செல்கிறார்கள் இவர்கள்...?


பழந்தமிழ் நாட்டில் போர்க்களத்தில் உயிர் துறந்த மாவீரர்களின் ஞாபகமாக வீரக்கல் நட்டு கோயில் எடுப்பது மரபு. வெறுங்கல் மட்டும் ஞாபகார்த்தமாக நட்டிருந்தால் நடுகற் கோயில் என்றும், அத்துடன் ஏதேனும் ஒரு தெய்வத்தின் சிலையையும் ஸ்தாபித்து ஆலயமாக எழுப்பியிருந்தால் அது பள்ளிப்படை என்றும் வழங்கப்படும்.
பள்ளிப்படை... பகைவன்! ம்...
நம்ம ஆழ்வார்க்கடியான் யூகித்துவிட்டான், அவர்கள் எங்கு செல்கிறார்கள் என்று.

அரிசிலாறு :

அரிசிலாற்றை பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமானால், முதலில் காவேரியை பற்றி தெரிந்து கொள்வோம். கர்நாடக மாநிலத்திலுள்ள மேற்கு தொடர்ச்சி மலையில் குடகு என்னும் இடத்தில் தலைக்காவேரி பிறக்கிறது. அது கர்நாடகத்தின் பல ஊர்களைக் கடந்து தமிழ்நாட்டை வந்தடைகிறது. கங்கை புனிதமானது, கங்கையை விட புனிதமானது காவேரி என்பார்கள். காவேரி நதியை நம்மவர்கள் பொன்னித் தாய் என்று அழைத்து வணங்கி வருகிறார்கள். பொன்னி நதியின் கிளை நதியான அரிசிலாற்றில் நமது நாயகி குந்தவையும் (சுந்தரசோழ சக்ரவர்த்தியின் செல்வ புதல்வி), உடன் கொடும்பாளூர் இளவரசி வானதி மற்றும் பல தோழிப்பெண்களுடன், சிலப்பதிகார பாடல்களை பாடிக்கொண்டே வருகிறார்கள். வாருங்கள் நாமும் அவர்களுடன் சேர்ந்து அரிசிலாற்றில் பயணிப்போம்.




கருங்கயற்கண் விழித்து ஒல்கி *
நடந்த எல்லாம் நின் கணவன்
* கவிதை


திருந்து செங்கோல் வளையாமை*
அறிந்தேன் வாழி! காவேரி!
* கவிதை


பூவர் சோலை மயிலாடப் *
புரிந்து குயில்கள் இசைபாடக்
காமர் மாலை அருகசைய
நடந்தாய் வாழி! காவேரி!
* கவிதை


காமர் மாலை அருகசைய *
நடந்த வெல்லாம், நின் கணவன்
* கவிதை


நாம வேலின் திறங்கண்டே *
அறிந்தேன் வாழி! காவேரி!
* கவிதை


குடந்தையை அடைந்ததும், அனைத்து அரசிளங்குமரிகளும் படகைவிட்டு இறங்குகிறார்கள். அவர்களிடம் குந்தவை...
நீங்கள் அனைவரும் இங்கேயே இருங்கள். நானும் வானதியும் சற்று நேரத்தில் திரும்பி வந்து விடுகிறோம்.

என்று கூறிவிட்டு குந்தவை தங்களுள் ஒருத்தியை மட்டும் அழைத்துக் கொண்டு செல்வதை கண்ட தோழிப்பெண்களின் கண்களில் ஏமாற்றமும், பொறாமையும் தோன்றின. அந்த தோழிப்பெண்கள் அனைவரும் தமிழ்நாட்டில் பற்பல சிற்றரசர்களின் அரண்மனையில் பிறந்த அரசகுமாரிகள், குந்தவை தேவிக்கு தோழியாக இருப்பதை பெரும் பாக்கியமாக கருதி பழையாறை அரண்மனைக்கு வந்தவர்கள்.



குந்தவை அருகில் இருப்பது இளவரசி வானதி, கொடும்பாளூர் சிறிய வேளாரின் மகள். சிறிய வேளார் இலங்கை யுத்தத்திற்கு தலைமை ஏற்றுச் சென்ற போது அப்போரில் வீரமரணம் அடைகிறார். அதன்பின் வானதியை தனது அரவணைப்பில் வைத்து பாதுகாத்து வருகிறாள் குந்தவை பிராட்டி.




என்று கூறிவிட்டு குந்தவை சட்டென்று திரும்பி வானதிக்கு தெரியாமல் தோழிப் பெண்ணிடம் ஜாடை செய்கிறாள்.




ரதம் புறப்படுகிறது. அதில் வானதி, இளவரசி குந்தவை.
அக்கா நாம் இப்போது எங்கே போகிறோம்? எனக்கு சொல்லலாமா?
சொல்லாமல் என்ன? குடந்தை ஜோதிடர் வீட்டுக்கு போகிறோம்.
ஜோதிடர் வீட்டுக்கு எதற்காக போகிறோம் அக்கா?
வேறு எதற்கு? எனக்கு கல்யாணம் ஆகுமா? அல்லது கடைசி வரையில் கன்னிப்பெண்ணாகவே இருந்து காலங்கழிப்பேனா என்று கேட்கப் போகிறேன்.
இதற்கு ஜோதிடரிடம் போய் கேட்பானேன். தங்களுடைய மனதை அல்லவா கேட்க வேண்டும். தாங்கள் தலை அசைக்க வேண்டியதுதான். இமயம் முதல் குமரிமுனை வரையில் உள்ள ஐம்பத்தாறு தேசத்து இராஜாக்களும் போட்டி போட்டுக் கொண்டு வரமாட்டார்களா?
நீ சொல்லுவதெல்லாம் உண்மை என்று வைத்துக் கொண்டாலும், அதற்கு ஒரு தடை இருக்கிறது.


அது என்ன அக்கா?
ஏந்த தேசத்து அரசகுமாரனை நான் மணந்து கொண்டாலும், அவனுடைய நாட்டுக்கு நான் போக வேண்டிவருமல்லவா?
எனக்கு இந்த பொன்னி நதி பாயும் சோழ நாட்டிலிருந்து வேறு ஏந்த நாட்டுக்கும் போக பிடிக்கவில்லையடி, வேறு நாட்டுக்கு போவதில்லை என்று சபதம் எடுத்துக் கொண்டிருக்கிறேன்.
அது ஒரு தடையே ஆகாது அக்கா.
என்னடி கூறுகிறாய்?
தங்களை மணம் புரிந்து கொள்ளும் ஏந்த இராஜகுமாரனும், தங்கள் காலில் விழுந்து கிடக்கும் அடிமையாகவே இருப்பான். இங்கேயே இருக்க வேண்டும் என்றால் இருந்துவிட்டுப் போகிறான்.


நல்லாயிருக்கிறது நீ சொல்வது...! எலியை பிடித்து மடியில் வைத்து கட்டிக்கொள்வது போல் அல்லவா இருக்கிறது. அதனால் என்னென்ன தொல்லைகள் எல்லாம் விளையும் தெரியுமா?
எப்படியும் பெண்ணாய் பிறந்தவர்கள் ஒரு நாள் கல்யாணம் செய்து கொண்டுதானே தீர வேண்டும்?
அப்படி எந்த ஒரு சாஸ்திரத்திலும் சொல்லியிருக்கவில்லையடி. சரி, அப்படி கல்யாணம் செய்து கொள்வது என்றால், நான் சோழநாட்டு ஏழை வீரன் ஒருவனையே மணந்து கொள்வேன். அத்தகையவனுக்கு இராஜ்யம் இராது. என்னை அழைத்துக்கொண்டு வேறு தேசத்துக்கு போகவேண்டும் என்று சொல்லவும் மாட்டான்.
அக்கா, அப்படியானால் இந்த சோழநாட்டை விட்டு போக மாட்டீர்களே?
ஒரு நாளும் போகமாட்டேன். சொர்க்க லோகத்துக்கே என்னை அரசியாக்குவதாகச் சொன்னாலும் போகமாட்டேன்.
இன்றைக்குத்தான் என் மனம் நிம்மதி அடைந்தது!


அது என்னடி?
நீங்கள் வேறு நாட்டுக்கு போனால் நானும் உங்களோடு வந்தே தீர வேண்டும். தங்களை விட்டு பிரிந்திருக்க என்னால் முடியாது. அதே போல் இந்த சோழநாட்டை பிரிந்து போகவும் எனக்கு மனமில்லை.
கல்யாணம் ஆனால் நீ பிரிந்து போய்தானே தீர வேண்டும்?
நான் கல்யாணமே செய்து கொள்ளப் போவதில்லை அக்கா...
அடியே! எனக்கு செய்த உபதேசமெல்லாம் எங்கே போயிற்று?
தங்களைப் போலவா நான்?







தும்பகோணம் இன்றும் ஜோதிடத்துக்கு பிரசித்திபெற்று விளங்குகிறது. இன்றைய தும்பகோணம் அந்நாளில் குடந்தை என்றும், குடமூக்கு என்றும் அழைக்கப்பட்டது. குடந்தைக்கு சற்று தூரத்தில் சோழர்களின் இடைக்கால தலைநகரமான பழையாறை இருந்தது. அங்குதான் இளவரசி குந்தவையும், சோழநாட்டின் முக்கிய பெண்ணரசியான செம்பியன் மாதேவியும் இருக்கின்றனர். குந்தவையும் தனது முக்கிய தோழியுமான வானதி உடன் ஜோதிடரை காண செல்கிறார்கள். இவர்கள் ரதத்தில் சென்று கொண்டிருக்கட்டும், இவர்களுடன் வந்த தோழிப்பெண்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்று பார்த்துவிட்டு வருவோம், வாருங்கள்....


அரிசிலாற்றங்கரையில் குந்தவை பிராட்டி இட்ட வேலையை செய்து கொண்டே...
அடியே தாரகை, இந்த கொடும்பாளூர்காரிக்கு வந்த யோகத்தை பாரடி!
என்னடி அது?
அவள் பேரில் நம் இளைய பிராட்டிக்கு என்னடி இவ்வளவு ஆசை!
ஆசையெல்லாம் ஒன்றும் இல்லையடி வாரிணி, நாலு மாதமாக அந்தப் பெண் ஒரு மாதிரி கிறுக்குப் பிடித்தவள் போல் இருக்கிறாள். அடிக்கடி மயக்கம் போட்டு வேறு விழுந்து தொலைக்கிறாள்.


அதுக்குதான் ஜோசியர்கிட்ட கூட்டிட்டு போயிருக்கிறாரா நம்ம இளவரசி?
அது ஒன்றும் இல்லையடி. தாய், தகப்பன் இல்லாத பெண் என்பதால் அவளுக்கு ஏதாவது நேர்ந்துவிடப் போகிறது என்ற கவலை..
ஏதாவது பேய், பிசாசுகளின் வேலையா இருக்குமோ?
ம்... பேயாவது, பிசாசாவது. எந்த பிசாசு வந்து இவளை பிடிக்கப்போகிறது?


அவள் மயக்கம் போட்டு விழுவது கூட பாசாங்கு தாண்டி.
இளவரசர் இலங்கை யுத்தத்துக்கு போகும் போது, தீப தட்டை கீழே போட்டாளே அது கூட அவருடைய கவனத்தை ஈர்ப்பதுக்குதான்.
இப்படியெல்லாம் செய்தால் மெதுவாக இளவரசரை தன் வலையில் போட்டுக் கொண்டுவிடலாம் என்ற எண்ணம்.
அவள் செய்த ஜாலத்தை காட்டிலும், அந்த ஜாலத்தில் இளவரசியும், இளவரசரும் ஏமாந்து போனார்களே அதுதான் மிக பெரிய வேடிக்கை.
இவர்கள் புரளி பேசுவதற்கு காரணமான சம்பவத்தை நீங்களும் அறிந்து கொள்ள வேண்டும் அல்லவா! வாருங்கள், வாசகர்களே!

நான்கு மாதங்களுக்கு முன்பு தஞ்சையில்,

சுந்தரசோழர் உடல்நிலை மிகவும் நலிவுற்றிருக்கும் பொழுது இலங்கையில் யுத்தம் தீவிரம் அடைகிறது. சிங்கள மன்னன் மகிந்தனுக்கு ஒரு நல்ல பாடம் கற்பிக்க வேண்டுமென்ற விருப்பம் சுந்தரசோழ சக்கரவர்த்திக்கு மட்டுமல்ல சோழநாட்டுத் தளபதிகள், சாமந்தர்கள், சேனா வீரர்கள், பொதுமக்கள் என எல்லோருடைய மனதிலும் குடிகொண்டிருந்தது. படையெடுத்துச் செல்ல ஒரு பெரிய படையும் தயாராயிற்று, அதற்கு தலைமை வகித்து செல்வது யார் என்னும் கேள்வி எழுந்தது. சுந்தரசோழரின் மூத்த புதல்வர் பட்டத்து இளவரசராகிய ஆதித்த கரிகாலர் அச்சமயம் வடதிசைக்கு படையெடுத்து சென்றிருக்கிறார். அருள்மொழிவர்மருக்கோ இப்போது வயது பத்தொன்பதுதான். இந்நிலைமையில், ஈழமண்டலப் படைக்கு தலைமை வகித்துச் செல்ல சோழநாட்டின் மற்ற தளபதிகளுக்குள்ளே பெரும் போட்டி ஏற்படுகிறது.

ஆனால் இளவரசி குந்தவைக்கோ தனது இளைய சகோதரன் அருள்மொழிவர்மனை தென்திசை மாதண்ட நாயகராக்க விரும்புகிறார். குந்தவை தேவி மனம் வைத்துவிட்டால் சோழ சாம்ராஜ்யத்தில் நடவாத காரியம் ஒன்று உண்டா?

தளபதிகளுக்குள்ளே நிலவும் போட்டியை அடியோடு நீக்க, அருள்மொழிவர்மரை சோழ படையின் தென்திசை மாதண்ட நாயகராக நியமிக்கிறார் சுந்தரசோழ மகாராஜா. அருள்மொழிவர்மர், சுந்தரசோழரின் கடைக்குட்டி செல்லப் புதல்வர். பழையாறை அரண்மனைகளில் வாழ்கின்ற இராணிமார்களுக்கெல்லாம் இவர் செல்லக் குழந்தை, ஏன் சோழநாட்டுக்கே அவர் தான் செல்லப்பிள்ளை இப்படிப்பட்ட சூழலில், தன் தாய் தந்தையிடம் ஆசிபெற்று களம் புக வருகிறார் நமது அருள்மொழிவர்மர். இவரே பிற்கால வரலாற்றில் இராஜராஜன் என்று போற்றப்படுகிறார்.

வாருங்கள், சென்று அந்த கண்கொள்ளா காட்சியை காண்போம்.



# பொன்னியின் செல்வன்






பொன்னியின் செல்வரா! யார் இவர்? அருள்மொழிவர்மரை சோழநாட்டு மக்கள் பொன்னியின் செல்வன் என்றே அழைக்கின்றனர். அதன் காரணத்தை பின்வரும் சந்தர்ப்பத்தில் தெரிந்துகொள்வோம்.


சுந்தரசோழர் அரண்மனையில் முக்கிய பிரமுகர்கள் பலர் வீற்றிருக்க, அங்கு அருள்மொழிவர்மர் ஆசிர்வாதம் பெற வருகிறார்.
வெற்றி உனதே. உன் பாட்டன் பராந்தகன் கனவை நிறைவேற்று என் மகனே!
அரசகுலப் பெண்கள் தீப தட்டுடன் ஆரத்தி எடுக்க காத்திருக்கின்றனர். அதில் ஒருத்தியாக வானதியும் உடன் இருக்கிறாள்.


வானதி, திடீர் என்று தீப தட்டை போட்டுவிட்டு மயங்கி விழுகிறாள்.
அனைவரும் அதிர்ச்சி அடைகின்றனர். அபசகுனம் நடந்துவிட்டது என்று பதறுகின்றனர்.
ஆனால், தீப தட்டு தவறி விழுந்தாலும் தீபம் மட்டும் அணையாமல் எரிகிறது.
தன் தந்தை மரணம் அடைந்த அதே யுத்த பூமிக்கு அருள்மொழி செல்வதை நினைத்து கவலையுற்ற வானதி, மயங்கி விழுந்தாள்.


இளவரசி குந்தவை மயக்கம் அடைந்த வானதியை தூக்கி தன் மடியில் போட்டுக் கொள்கிறாள்.
எல்லோரும் சற்று விலகி நில்லுங்கள், காற்று வரட்டும்.


அக்கா, அந்த பெண்ணிற்கு என்னவாயிற்று?
செல்வா, இவள் யார் என்று தெரிகிறதா? நம் சிறிய வேளாரின் மகள் வானதி.


குந்தவை அவளுக்கு மயக்கம் தெளிய வழிசெய்கிறாள்.
வானதி.. வானதி....
வானதி, அருள்மொழிக்கு ஒன்றும் ஆகாது, எழுந்திரு என் கண்ணே.
அக்கா, அந்த பெண்ணை நன்கு கவனித்துக் கொள்ளுங்கள். நான் வருகிறேன்.
என்று கூறிவிட்டு இலங்கை யுத்தத்துக்கு புறப்படுகிறார் அருள்மொழி.


அதன் காரணமாகவே மற்ற அரசிளங்குமரிகளுக்கு பொறாமை ஏற்படுகிறது. அன்று முதல் வானதி மீது பொறாமை கொண்டு புறம் பேசுகிறார்கள். எங்கே இளவரசர் பொன்னியின் செல்வர் வானதி மீது காதல் கொண்டு விடுவாரோ, என்ற அச்சத்தில் இவ்வாறு புறம் பேசுகிறார்கள்.
நம் இளவரசர் இலங்கையிலிருந்து திரும்பி வந்தால் மறுபடியும் இவள் மாயப்பொடி போட பார்ப்பாள். அதற்கு நாம் இடம் கொடுத்துவிடக் கூடாது. ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.
பொய்யும், புனை சுருட்டும், ஜாலமும் செய்கிறவர்களுக்குத்தான் இது காலம்.
ஏய் வாரிணி, அது இல்லடி...
வாசகர்களே இப்போதைக்கு இவர்களின் கதை முடியாது. வாருங்கள் குடந்தை ஜோதிடரின் வீட்டிற்கு செல்வோம்.


வீட்டு வாசலில் ஜோதிடரும், அவருடைய சீடனும் இளவரசிகளுக்காக காத்திருக்கின்றனர்.


பெருமாட்டி கலைமகளும், திருமகளும் ஒரு உருவாய் வந்த தாயே வரவேணும், வரவேணும். இந்த ஏழையின் குடிசை செய்த பாக்கியம் மறுமுறையும் தாங்கள் இக்குடிசையைத் தேடி வந்திருக்கிறீர்கள்...
இளவரசி குந்தவையும், கொடும்பாளூர் இளவரசி வானதியும் மரியாதை நிமித்தமாக பதில் வணக்கம் செய்கிறார்கள்.


அம்மணி வந்த காரியம் இன்னதென்பதை தயவுசெய்து கூறி அருள வேண்டும்.
ஜோதிடரே, அதையும் தாங்கள் ஜோதிடத்திலேயே பார்த்து தெரிந்து கொள்ள கூடாதா?
ஆகட்டும் தாயே.
என்று கூறிவிட்டு ஜோதிடர் தன் கண்களை மூடி, யோசித்துவிட்டு கண்ணை திறக்கிறார்.
கூறட்டுமா தாயே, இந்த கன்னிப் பெண்ணின் ஜாதகம் பற்றி கேட்பதற்காகவே இன்று முக்கியமாக வந்திருக்கிறீர்கள்.
ஆஹா...! பிரமாதம்...! உங்களுடைய சக்தியை என்னவென்று சொல்வது...


ஐயா, ஒரு வருஷத்துக்கு முன்பு இவள் பழையாறை அரண்மனைக்கு வந்தாள். வந்து சிலகாலம் சிரிப்பும், விளையாட்டும், கலகலப்புமாக இருந்து வந்தாள். நாலு மாதமாக சித்தபிரமை பிடித்தவள் போல் இருக்கிறாள். சிரிப்பையே மறந்துவிட்டாள். என்னவென்று கேட்டால் உடம்புக்கு ஒன்றுமில்லை என்கிறாள். (குந்தவை)
தாயே, கொடும்பாளூர் இளைய வேளாரின் செல்வ புதல்வி வானதிதானே இவள்.
ஆமாம்.
இந்த அரசிளங்குமரியின் ஜாதகம் என்னிடம் இருக்கிறது. தாங்கள் சற்றுப் பொறுங்கள்.
ஜோதிடர் பக்கத்திலிருக்கும் பெட்டியை திறந்து, ஒரு ஓலைச் சுவடியை தேடி எடுக்கிறார்.


ஜோதிடர் தன்னிடம் உள்ள ஓலைச் சுவடியையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்.
என்ன ஜோதிடரே? ஏதாவது சொல்லப்போகிறீரா இல்லையா?


தாயே, என்னத்தை சொல்வது? எப்படி சொல்வது? தாங்கள் ஏதும் வித்தியாசமாக நினைத்துக் கொள்ளமாட்டீர்கள் என்றால் சொல்கிறேன்.
(என்று பீடிகை போடுகிறார்)


தயங்காமல் கூறுங்கள் ஜோதிடரே.
தாயே, இம்மாதிரி அதிர்ஷ்ட ஜாதகத்தை நான் இதுவரை பார்த்ததே இல்லை! தங்களுடைய ஜாதகத்தை காட்டிலும் இந்த பெண்ணின் ஜாதகம் ஒருபடி மேலானது.
அப்படியா!
அக்கா, இந்த துரதிஷ்டக்காரியை போய் இவர் உலகத்திலேயே இல்லாத அதிர்ஷ்டக்காரி என்கிறாரே... இப்படிதான் இருக்கும் இவர் கூறும் ஜோதிடமும்.
என்று பொய் கோபம் கொள்கிறாள்.


அம்மா, என்ன சொன்னீர்கள்! நான் சொல்வது தவறானால் நான் என்னுடைய தொழிலையே விட்டுவிடுகிறேன்.
(என்று கோபப்படுகிறார்)


வேண்டாம்... வேண்டாம்... அப்படியெல்லாம் ஏதும் செய்துவிடாதீர். ஏதோ நாலு பேருக்கு நல்ல வார்த்தையாவது சொல்லிக் கொண்டிரும். ஆனால்..... பொதுப்படையாக சொல்கிறீரே தவிர குறிப்பாக ஒன்றும் சொல்லவில்லையே.


குறிப்பாக சொல்ல வேண்டுமா? இதோ சொல்லுகிறேன்.
சுவடியை உற்றுப்பார்க்கிறார்.
நாலு மாதத்திற்கு முன்னால் அபசகுணம் மாதிரி தோன்றக் கூடிய ஒரு காரியம் நடந்ததா? ஆனால், அது உண்மையில் அபசகுணமில்லை.
என்று கூறியவுடன் வானதி குந்தவையை பார்க்கிறாள்.
நான் அப்போதே சொன்னேனே... பார்த்தாயா?
முன்னமே இவருக்கு நீங்கள் சொல்லி வைத்திருக்கிறீர்கள் போலிருக்கிறது!


பார்த்தீரா ஜோதிடரே! இந்த பெண்ணின் பேச்சை.
பேசட்டும் தாயே பேசட்டும்! இப்போது எது வேண்டுமானா லும் பேசட்டும். நாளைக்கு மன்னர் மன்னனை மணந்து கொண்டு... (என்று இழுக்க)
(அதற்குள் குந்தவை குறுக்கிட்டு.) அப்படி சொல்லுங்கள்... இவளுக்கு கணவன் எங்கிருந்து வருவான்? எப்போது வருவான்? அவனுக்கு என்ன அடையாளம்? என்று ஜோதிடம் பார்த்து சொல்ல முடியும் தானே....?


ஆஹா சொல்ல முடியாமல் என்ன? நன்றாய் சொல்ல முடியும் (என்று கூறிவிட்டு ஜாதக கட்டத்தை நன்றாக கூர்ந்து கவனிக்கிறார்)
தாயே இப்பெண்ணுக்கு கணவன் வெகுதூரத்திலிருந்து வர வேண்டியதில்லை. சமீபத்தில் உள்ளவன்தான். ஆயினும், அந்த வீரன் இப்போது இந்நாட்டில் இல்லை. கடல் கடந்து சென்றிருக்கிறான்.
இவர் குறிப்பிடுவது அருள்மொழியை தானே...!
(தன் எண்ணத்தை உறுதி செய்து கொள்ள) அவன் யார்? என்ன குலம்? ஏதாவது அடையாளம் உண்டா?


உண்டு தாயே, இந்தப் பெண்ணை மணந்து கொள்ளும் பாக்கியசாலியின் திருக்கரங்களில் சங்குசக்கர ரேகை இருக்கும்.
அப்படியானால், இவளுடைய கைகளிலும் ஏதேனும் அடையாள ரேகை இருக்கும் அல்லவா?
தாயே, இப்பெண்ணின் பாதங்களை எப்போதாவது தாங்கள் பார்த்ததுண்டா? இந்த பெண்ணின் உள்ளங்காலை சிறிது காட்டச் சொல்லுங்கள். அதில் தாமரை இதழ்களின் ரேகை கட்டாயம் இருக்கும்.
அக்கா...
போதும் ஜோதிடரே, போதும்! இவளைப் பற்றி இன்னும் ஏதாவது சொன்னால் என் கையை பிடித்து இழுத்துக்கொண்டு புறப்பட்டுவிடுவாள். கொஞ்சம் இவளுக்கு வாய்க்கப்போகும் கணவனைப் பற்றி சொல்லுங்கள்.


ஆஹா! சொல்கிறேன் தாயே, இவளை கை பிடிக்கும் பாக்கியவான் வீராதி வீரனாயிருப்பான்! நூறு நூறு போர்க்களங்களில் முன்னணியில் நின்று வாகை சூடுவான்! ஆயிரமாயிரம் அரசர்கள் போற்ற சக்ரவர்த்தியின் சிம்மாசனத்தில் பன்னெடுங்காலம் வீற்றிருப்பான்!
("மூத்த சகோதரன் கரிகாலன் இருக்க அருள் மொழி எப்படி சக்ரவர்த்தி ஆக முடியும்." என்று மனதில் நினைத்துக் கொண்டு). நீர் கூறுவதை என்னால் நம்ப முடியவில்லை, அது எப்படி நடக்க முடியும்?


அக்கா, இவர் எதையோ நினைத்துக் கொண்டு பேசுகிறார். இப்படி சொன்னால் தங்களுக்கு சந்தோஷமாயிருக்கும் என்று கூறுகிறார்.


இன்று நீங்கள் நம்பாவிட்டாலும். ஒரு காலத்தில் நம்புவீர்கள். அப்போது இந்த ஏழை ஜோதிடனை மறந்துவிடாதீர்கள்.
அக்கா போகலாமா? (என்று நச்சரிக்கிறாள்)
ஜோதிடர் குறுக்கிட்டு
இன்னும் ஒரே ஒரு விஷயம் சொல்லிவிடுகிறேன். அதைக் கேட்டுவிட்டு புறப்படுங்கள்.


இந்த இளவரசியை மணந்து கொள்ளப்போகும் வீரனுக்கு பற்பல அபாயங்களும், கண்டங்களும் ஏற்படும்.
ஐயோ!
என்று கூறியவாறே வானதி மயக்கமடைகிறாள்.
தாயே! தாயே! (என்று பதறுகிறார்)
(வானதியை தனது மடியில் கிடத்திக் கொண்டு,) பயப்பட ஒன்றுமில்லை. இது வழக்கமாக ஏற்படுவதுதான். நீங்கள் மேற்கொண்டு கூறுங்கள்.
இளவரசி, தாங்கள் நான் கூறியதை தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம். நான் வயதானவன், ஆகையால் உள்ளதை ஒளிக்காமல் சொல்லிவிட்டேன்.


இந்த பெண்ணின் வயிற்றை பாருங்கள். ஆலிலையின் ரேகைகள் இல்லாவிட்டால், நான் இந்த ஜோதிட தொழிலையே விட்டுவிடுகிறேன். தாயே, தாங்கள் ஒன்றும் கவலை கொள்ள தேவையில்லை எவ்வளவு அபாயங்களும், கண்டங்களும் வந்தாலும், முடிவில் அனைத்தும் பறந்து போகும். பகைவர்கள் படுநாசம் அடைவார்கள்.
ஆமாம்! ஆலிலை ரேகையில் என்ன விசேஷம்?
ஆலிலையின் மேல் பள்ளிகொண்ட பெருமாள் யார் என்பது தெரியாதா? அந்த திருமாலின் அம்சத்துடன் இவள் வயிற்றில் ஒரு பிள்ளை பிறப்பான். இவளுடைய நாயகனுக்காவது பல இடைஞ்சல்கள், தடங்கல்கள், கண்டங்கள் உண்டு. ஆனால், இந்த பெண்ணின் வயிற்றில் பிறக்கப்போகும் குமாரனுக்கு தடங்கல் என்பதே கிடையாது. அவன் நினைத்ததெல்லாம் நிறைவேறும். அவன் கால் வைத்த இடமெல்லாம் புலிக்கொடி பறக்கும் தாயே. (இவ்வாறு ஜோதிடர் குறிப்பிடுவது இராஜேந்திர சோழனை)


சற்று மெல்லிய குரலில்,
ஜோதிடரே! முக்கியமாக ஒன்று கேட்கவே வந்தேன். நாடு நகரமெல்லாம் மக்கள் ஏதோ பேசிக்கொள்கிறார்களாமே? அதற்கெல்லாம் ஏதேனும் பொருள் உண்டா? இராஜ்யத்திற்கு ஏதாவது ஆபத்து உண்டா? (வால் நட்சத்திரத்தை மனதில் நினைத்து இவ்வாறு கேட்கிறாள்.)
ஜோதிடர் பதறியவாறு,
அதை மட்டும் என்னை கேட்காதீர்கள் தாயே? இராஜ்யங்கள், இராஜாங்க நிகழ்ச்சிகள் இவற்றுக்கெல்லாம் ஜாதகமும் கிடையாது, ஜோசியமும் சொல்ல முடியாது. ஞானிகளும், ரிஷிகளும், மகான்களும் ஒரு வேளை ஞான திருஷ்டியில் பார்த்து சொல்லலாம். இந்த ஏழைக்கு அந்த சக்தி கிடையாது.
ஜோதிடரே! தாங்கள் மிக சாமர்த்தியமாக பேசுகிறீர்கள். இராஜாங்கத்திற்கு தாங்கள் ஜோதிடம் பார்க்க வேண்டாம், ஆனால் என் தந்தைக்கும், என் சகோதரர்களுக்கும் ஜோதிடம் பார்த்து சொல்லலாம் அல்லவா?


சாவகாசமாக இன்னொரு நாள் பார்த்து சொல்கிறேன் தாயே. பொதுவாக இது குழப்பங்களும், அபாயங்களும் நிறைந்த காலம்! எல்லோருமே சிறிது ஜாக்கிரதையாக இருக்க வேண்டியதுதான்.
என் தந்தை பழையாறையை விட்டு தஞ்சாவூருக்குப் போனதிலிருந்தே என் மனம் ஏனோ ஒரே கவலையாக இருக்கிறது.
முன்னமே சொன்னேனே தாயே! மகாராஜாவுக்கு பெரிய கண்டங்கள் இருக்கிறது.


இவர்கள் பேசிக்கொண்டு இருக்கையில், வானதி மயக்கத்திலிருந்து தெளிந்து,
அக்கா, நாம் எங்கே இருக்கிறோம்?
கண்மணி நாம் இன்னும் இந்த பூலோகத்தில்தான் இருக்கிறோம். சொர்கலோகம் செல்வதற்கு புஷ்பக விமானம் வந்து கொண்டிருக்கிறது எழுந்திரு.
நான் மயக்கம் போட்டு விழுந்துவிட்டேனா?
மயக்கம் போடவில்லையடி, அக்காவின் மடியில் படுத்து கொஞ்சம் தூங்கிவிட்டாய்! (என்று கேலியாக கூறினாள்)


அக்கா, நான்தான் ஜோதிடரிடம் வரவில்லை என்று அப்போதே சொன்னேனே. (என்று கொஞ்சலாக கோபப்படுகிறாள்)
அது என் குற்றம்தான். வா போகலாம்.
தாயே, சற்றுப் பொறுங்கள். தேவியின் பிரசாதம் தருகிறேன்.
அதற்குள் வானதி,
ஜோசியரே எனக்கு என்ன வெல்லமோ சொன்னீர்கள். அக்காவிற்கு ஒன்றுமே சொல்லவில்லையே?


அம்மா, இளைய பிராட்டிக்கு எல்லாம் சொல்லி இருக்கிறேன். புதியதாக என்ன சொல்ல வேண்டும்?
(குந்தவை சலித்துக் கொண்டே) ஆமா... எனக்கு வரப்போகிறவன் வீராதிவீரன்! அசகாயசூரன்!
சந்தேகம் என்ன தாயே? முப்பத்திரண்டு சாமுத்ரிகா லட்சணமும் பொருந்தியவன். புத்தியில் பிரகஸ்பதி, வித்தையில் சரஸ்வதி, அழகிலே மன்மதன், ஆற்றலில் அர்ஜுனன்.
ஜோதிடரே அவர் எப்போது வருவார்?


வருவார் தாயே வருவார்! கட்டாயம் வரப்போகிறார்.
எப்படி வருவார்? யானை மேல் வருவாரா? குதிரை மேல் வருவாரா? அல்லது நேரே ஆகாசத்திலிருந்து கூரையை பொத்துக் கொண்டு குதிப்பாரா?
அப்போது தூரத்தில் குதிரை வரும் சப்தம் கேட்ட வானதி.
டகடக்...
டகடக் டகடக்...
அக்கா, குதிரையின் காலடிச் சத்தம் கேட்பது போல் இல்லை?


குடந்தை ஜோதிடர் வீட்டில் வானதி கூறியது சரிதான். யாரோ ஒருவன் குதிரையில் வந்து கொண்டிருக்கிறான்.
இதுதான் அந்த காளி கோயிலா!
ஜோதிடரின் வீட்டின் முன் வந்து நிற்கிறான் வந்தியத்தேவன்.
ம்... இதுதான் குடந்தை ஜோதிடர் வீடாக இருக்க வேண்டும். சென்று பார்த்து விட்டால் போகிறது.
ஜோதிடம் பார்க்கும் ஆர்வத்தில், குதிரை மேலிருந்து தாவி குதித்து செல்கிறான் வந்தியத்தேவன்.


இது ஜோதிடர் வீடுதானே?
காவலுக்கு நின்று கொண்டிருந்த ஜோதிடரின் சீடன்,
ஆமாம். நீ யார்?
நான் ஜோதிடரை பார்க்க வேண்டும்.
இப்போது அவரை பார்க்க முடியாது.
அவன் கூறியதை பொருட்படுத்தாமல் வந்தியத்தேவன் உள்ளே செல்ல முயற்சிக்கிறான்.
நில்லு! சொல்றது உன் காதுல விழலையா?


மரியாதையா வழிய விடு. நான் ஜோதிடரை பார்த்தே ஆக வேண்டும்.
ஒழுங்கா சொன்னா கேட்க மாட்டியா?
என்று சீடன் ஆக்ரோஷமாக வந்தியத்தேவனுடன் மோதுகிறான். வந்தியத்தேவனும் அவனிடம் மோதுவது போல் ஜாடை காட்டி, சட்டென்று நகர்ந்து விட...
ஆ ஆ ஆ...


...ஆ ஆ ஆ
அட சண்டாளா...
நா சொல்றத கேளு...
உள்ள போகாத...
(என்று எச்சரித்தான்)


சீடனின் வார்த்தையை துளி அளவும் பொருட்படுத்தாமல், வந்தியத்தேவன் கதவை திறந்து கொண்டு...
ஐயா! ஜோதிடரே...
கதவு திறக்கும் சப்தம் கேட்டு அங்கிருந்த மூவரும், "யார் இந்த அதிகப்பிரசங்கி?" என்பது போல் பார்க்கிறார்கள்.
அவர்கள் பார்த்த பார்வையின் அர்த்தத்தை உணர்ந்த வந்தியத்தேவனுக்கு தர்ம சங்கடம் ஆயிற்று. உடனே சீடனிடம்,
ஏனப்பா முன்பே சொல்லக்கூடாதா உள்ளே பெண்பிள்ளைகள் இருக்கிறார்கள் என்று? சொல்லியிருந்தால் நான் இப்படி நடந்திருப்பேனா?
நீ எங்கு என்னை சொல்லவிட்ட?


அடே அப்பா புயல் அடித்து ஓய்ந்தது போல் அல்லவா இருக்கிறது!
இன்னமும் அவர்கள் வாக்குவாதம் செய்து கொண்டிருப்பதை கண்ட ஜோதிடர்...
அங்கே பாருங்கள்! இன்னும் ஓய்ந்தபாடில்லை.
குந்தவை எதையோ நினைத்து,
ஹாஹா... ஹாஹா...
ஏன் அக்கா சிரிக்கிறீர்கள்?


ஏன் என்று பிறகு சொல்கிறேன். வா போகலாம்.
சரி புறப்படுவோம் அக்கா.
அவர்கள் புறப்படுவதை கண்ட ஜோதிடர்...
தாயே, இதை பெற்றுக் கொள்ளுங்கள்.
இருவரும் குங்குமத்தை எடுத்து நெற்றியில் இட்டுக் கொள்கின்றனர்.


வந்தியத்தேவனும், ஜோதிடரின் சீடனும் இளவரசிகள் வருவதை கண்டு வழிவிட்டு நிற்கிறார்கள்.
மன்னிக்க வேண்டும்... உள்ளே பெண்கள் இருக்கிறார்கள் என்று இந்த புத்திசாலி சொல்லவில்லை.
இளவரசிகள் எந்தவித பதிலையும் கூறாமல் சென்றதால், வந்தியத்தேவன் அப்பெண்களின் காதில் விழும்படி...
குடந்தை நகரத்துப் பெண்களுக்கு மரியாதை தெரியாது போலிருக்கிறது.
என்று கேலி செய்தான்.


வந்தியத்தேவனை பொருட்படுத்தாமல், இளவரசிகள் ரதத்தை நோக்கி வருகிறார்கள்.


இளவரசிகள் ரதத்தில் ஏறி அமர, ரதம் புறப்படுகிறது.
சற்று தூரம் ரதம் நகர்ந்ததும்.
தாங்கள் எதற்காக அங்கு சிரித்தீர்கள் அக்கா? (வானதி)
எதற்காகவா வானதி, எனக்கு வரப்போகும் மணவாளன் குதிரையில் வருவானா, யானையில் வருவானா, அல்லது கூரையை பிரித்துக் கொண்டு குதிக்க போகிறானா என்று கேட்டாயே...
அதையும், அந்த முரட்டு வாலிபன் வந்த விதத்தையும் நினைத்து சிரித்தேன்.


நாம் இவ்வளவு தூரம் இறங்கி சென்று மன்னிப்பு கேட்ட பின்பும், ஒரு வார்த்தை கூட பேசாமல் செல்கிறார்களே! இவர்கள் யாராக இருக்கும்?
ஹா ஹா... ஹா ஹா...
ம்... இவர்களை மீண்டும் சந்திக்க வாய்ப்பு கிடைத்தால், நாம் யார் என்பதை காட்ட வேண்டும்.
வந்தியத்தேவன், ரதம் சென்று மறையும் வரையில் பார்த்துக்கொண்டிருக்கிறான்.


ஆமாம்.. இப்போது வந்துவிட்டு போனார்களே அவர்கள் யார்?
ஓ.. அவர்களா? அவர்கள் பெண்கள்.


ஐயா ஜோதிடரே, நான் ஒன்றும் குருடன் இல்லை.
தம்பி இதை கேள், ஜோதிடன் வீட்டுக்கு பலரும் வந்து போவார் கள். ஒருவரை பற்றி இன்னொ ருவரிடம் சொல்லக் கூடாது. இப்போது போனவர்களை பற்றி உன்னிடம் சொல்லமாட்டேன்.


உன்னை பற்றி மற்றவர்கள் கேட்டாலும் ஒரு வார்த்தை சொல்லமாட்டேன். புரிந்ததா?
ஆகா நன்றாக புரிந்தது. தங்களை பற்றி ஆழ்வார்க்கடியான் நம்பி சொன்னது முற்றும் உண்மை.
ஆழ்வார்க்கடியாரா? அவர் யார்?
ரொம்பவும் தங்களை தெரிந்தவர் போல் பேசினாரே? தங்களுக்கு தெரியாதா என்ன?
ஒருவேளை அவரை தெரிந்திருக்கும், பெயர் ஞாபகம் இராது. கொஞ்சம் அடையாளம் சொல்லு பார்க்கலாம்...


கட்டையாகவும், குட்டையாகவும் இருப்பார். தலையில் முன்குடுமி வைத்திருப்பார். சைவர்களை கண்டால் சண்டைக்கு போவார்.
தம்பி, நீ சொல்வதை எல்லாம் பார்த்தால், திருமலையை பற்றி சொல்லுகிறாய் போலிருக்கிறது.
ஓஹோ! அவருக்கு அப்படி ஒரு பெயர் உண்டா?


ஊருக்கு ஒரு பெயர் வைத்து கொள்வார் அந்த வீர வைஷ்ணவர்.
ஆளுக்கு தகுந்த வேஷம் போடுவாராக்கும், ரொம்ப பொல்லாத மனிதர் என்று சொல்லுறாங்கள்.
அப்படியும் சொல்லிவிட முடியாது. நல்லவர்க்கு நல்லவர், பொல்லாதவருக்கு பொல்லாதவர் !
அப்படியென்றால் அவருடைய பேச்சை நம்பி ஒன்றும் செய்ய முடியாது? என்று கூறுங்கள்.
நம்புவதும் நம்பாததும், அந்தந்த பேச்சை பொறுத்திருக்கிறது.


தாங்களிடம் வந்து ஜோதிடம் கேட்டால், நன்றாக சொல்வீர்கள் என்று அவர் கூறியது?
அதுதான் சொன்னேனே, பாதி உண்மையும் இருக்கும் என்று.
அப்படியென்றால் எனக்கு ஏதாவது ஆருடம் சொல்லுங்கள் பார்க்கலாம். நேரமாகிவிட்டது நான் போக வேண்டும் ஜோதிடரே.
அப்படி அவசரமா எங்கே போக வேண்டும் அப்பனே?
அதையும் தாங்கள் ஜோதிடத்திலே பார்த்து சொல்லக் கூடாதா? எங்கே போக கூடாது? எங்கே போனால் காரியம் சித்தியாகும் என்பதை பற்றி கேட்கத்தான் தாங்களை நாடி வந்தேன்.


ஜோதிடம் பார்க்க வேண்டும் என்றால் ஏதாவது ஆதாரம் வேண்டும்.
ஆதாரமா?
ஆமாம், ஜாதகம் வேண்டும் அல்லது பிறந்த நட்சத்திரமாவது தெரிய வேண்டும். அதுவும் தெரியாவிடில் ஊரும் பேருமாவது சொல்ல வேண்டும்.
என் பெயர் வந்தியத்தேவன்.
ஆகா! வாணர் குலத்தவனா?
ஆமாம்.
வல்லவரையன் வந்தியத்தேவனா?
அவனேதான்!
அப்படி சொல்லு தம்பி. இதை முன்னமே சொல்லி இருக்க கூடாதா? உன் ஜாதகம் கூட என்னிடம் இருக்கிறதே.
அப்படியா? அது எப்படி?


என்னை போன்ற ஜோதிடர்களுக்கு வேறு என்ன வேலை? பெரிய வம்சத்தில் பிறந்த பிள்ளைகளின் ஜாதகங்களையெல்லாம் தேடி சேர்த்து வைத்துக்கொள்வோம்.
நான் அப்படியொன்றும் பெரிய வம்சத்தில் பிறந்தவன் அல்லவே.
நன்றாக சொன்னாய், உன்னுடைய குலம் எப்பேர்பட்ட குலம் தெரியுமா?


*வாணன் புகழுரைய வாயுண்ட மாகதர்கோன் வாணன் பெயரெழுதா மார்புண்டோ - வாணன் கொடி தாங்கி நில்லாத கொம்புண்டோ உண்டோ அடிதாங்கி நில்லா அரசு!
என்று வந்தியத்தேவனிடம், அவன் குலப்பெருமையையும், வீரத்தையும், அவர்களின் கொடைதன்மையையும் கூறுகிறார் ஜோதிடர்.
*கவிதை

கடம்பூரில் நடந்த சம்பவங்கள், வந்தியத்தேவன் மனதில் அடுத்தடுத்து பல கேள்விகளை எழுப்புகிறது. அதன் காரணமாக ஜோதிடரிடத்தில் சுந்தரசோழ சக்ரவர்த்திக்கு பின் அடுத்து பட்டத்துக்கு யார் வருவார்கள்? சோழநாட்டின் எதிர்காலம் எப்படி இருக்கும்? தன்னுடைய எதிர்காலம் எப்படி இருக்கும்? என்று ஆர்வத்துடன் கேட்கிறான்.

ஆனால் ஜோதிடர், தற்போது வந்தியத்தேவனின் அதிர்ஷ்டகிரகம் உச்சத்துக்கு வந்திருப்பதாகவும், அவன் தன் சொந்த விசயமாக போகும் காரியங்களில் வெற்றி பெறுவாய் என்றும் மிக சாதுர்யமாக கூறுகிறார்.




என்று கூறிவிட்டு, அருள்மொழிவர்மரின் ஜாதகம் சிறப்புமிக்கது என்றும், அவர் ஒரு துருவநட்சத்திரம், அவரை நீ பின்பற்றி சென்றால் வாழ்வில் உன்னத நிலையை அடைவாய் என்றும் அவனை வழியனுப்பினார்.


ஜோதிடரே, என் முக்கிய கேள்விகளுக்கு ஏதும் பதில் கூறாமலேயே வழியனுப்புகிறீர்.
அதெல்லாம் ஒன்றுமில்லை தம்பி. உனக்கு தேவையான அனைத்தையும்தான் நான் கூறிவிட்டேனே. (என்று சமாளிக்கிறார்.)
ஐயா, என்னால் இயன்றதை தங்களுக்கு காணிக்கையாக தருகிறேன்.
வாணர் குலத்தின் கொடைதன்மை இன்னமும் போகவில்லை!
எல்லாம் உங்களை போன்ற பெரியோர்களின் ஆசிர்வாதந்தான்.
மங்களம் உண்டாகட்டும்.
ஜோதிடரிடம் விடை பெற்றுக்கொண்டு, தன் பயணத்தை தொடர்ந்தான் வந்தியத்தேவன்.


அக்காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற குடந்தை (கும்பகோணம்) கிராமத்தின் வழியாக வருகிறான் வந்தியத்தேவன்.
சோழர்கள் உலோக ஆய்வுகளை மேற்கொண்டு மிக நுட்பமான வாள், ஈட்டி மற்றும் பல போர்க்கருவிகளை தயாரிப்பதில் வல்லவர்களாக இருந்தனர்.
அங்கு தயாரிக்கப்படும் ஆயுதங்களை கண்டு ரசித்துக் கொண்டு வருகிறான் வந்தியத் தேவன், அப்போது வழியில் ஆட்டுக்கறியின் குழம்பு வாசம் வருகிறது.


நம் வந்தியத்தேவனின் நாவிலும் எச்சில் ஊறுகிறது.
அக்காலத்தில் வீரர்கள் பெரும்பாலோர் புலால் உண்ணுபவர்களாக இருந்தார்கள்.
அந்த வாசனையை முகர்ந்து கொண்டே அந்த இடத்தை கடந்து செல்ல மனமில்லாமல், குடந்தை நகரை கடந்து வயல் வெளிக்கு வருகிறான். அங்கு மஞ்சள் வாழை, தென்னை முதலிய தோப்புகளை பார்த்துக் கொண்டே வருகிறான்.
ஒரு பக்கத்தில் உரம் அடித்து நன்கு உழுது கழனி முழுவதும் நீர் நிரப்பி வைத்திருக்கிறார்கள். அப்பகுதி பார்க்க கண்ணங்கரேல் என்று காட்சி தருகிறது. அதைக் கண்ட வந்தியத்தேவனுக்கு,


ஜோதிடர், இவனின் முன்னோர்களின் வீரத்தை புகழ்ந்து கூறிய பாடல் ஒன்று இவனுக்கு நினைவுக்கு வருகிறது.
சேனை தழையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி ஆனை மிதித்த அருஞ்சேற்றில் - மானபரன் பாவேந்தர் தம்வேந்தன் வாணன் பறித்து நட்டான் முவேந்தர் தங்கள் முடி!*
*கவிதை
நம் முன்னோர்கள் எத்தகைய கோரமான யுத்தங்களை செய்திருக்கிறார்கள், இதை போய் வீரமென சொல்கிறார்களே! ம்... என்ன செய்வது யுத்தங்களை ரசிக்கும் உலகில் தான் நாமும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.
இவ்வாறு நினைத்து கொண்டே அரிசிலாற்றின் கரையோரமாக வந்தியத்தேவன் சென்று கொண்டிருக்க...
அதே நேரத்தில் அழகிய பெண்கள் சிலர் அரிசில் ஆற்றில் பந்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.


இந்த பெண்களை நாம் முன்னமே பார்த்திருக்கிறோமே,
அவர்களில் ஒருத்திதான் இவளும்.
ஆனால், இவள் இங்கு என்ன ஜாலம் செய்கிறாள்? அதையும்தான் பார்ப்போம்.
ஜோதிடர் வீட்டில் பார்த்த அந்த பெண்ணின் முகத்தில்தான் எத்தனை அழகு, என்ன கம்பீரம்! அந்த பெண்ணை மீண்டும் ஒரு முறை சந்திக்கும் வாய்ப்பு மட்டும் கிடைத்தால்...
முதல...
முதல...
பெண்களின் பயந்த குரல்கள் போல் அல்லவா கேட்கிறது!


உடனே, தான் என்ன செய்ய வேண்டும் என்று முடிவு செய்துவிட்டான் வந்தியத்தேவன்.
குதிரையின் கடிவாளத்தை பிடித்து இழுத்து பெண்களின் பயந்த குரல் கேட்ட திசைக்கு குதிரையை திருப்புகிறான்.


குதிரை சீறிப் பாய்கிறது.
கடவுளே.. ஜோதிடர் வீட்டில் பார்த்த அந்த பெண்களாக இருக்க வேண்டும்.
பெண்கள் குரல் கேட்ட இடத்தின் அருகில் வந்துவிட்டான் நமது வந்தியத்தேவன். அப்போது ஒரு பயங்கரமான காட்சி அவன் முன்னால், அழகிய பெண்கள் பலருக்கு நடுவில் ஒரு முதலை பயங்கரமாக வாயை பிளந்திருக்கிறது!
வானதியின் காலை கடிக்க முதலை தயாராக இருக்கிறது. ஆனால் எதற்கும் வானதி அஞ்சுவதாக இல்லை.


சற்று தாமதித்தாலும் பயங்கரமான விளைவு ஏற்படும் என்பதை உணர்ந்த நம் வீரன் உடனே தனது ஈட்டியை எடுத்து, குறி பார்த்து முதலை மீது எறிந்தான்.


நம் நாயகன் எறிந்த ஈட்டி சரியாக முதலையின் உச்சந்தலையில் பாய்ந்தது.


எங்கிருந்தோ பாய்ந்த ஈட்டியை கண்டு அங்கிருந்த பெண்கள் அனைவரும் திடுக்கிட்டனர்.
அப்போது இளவரசி குந்தவை ஈட்டி வந்த திசையை பார்க்கிறாள்.
ஈட்டி சரியாகத்தான் பாய்ந்திருக்கிறது.
இந்த துடுக்கான இளைஞன் இங்கும் வந்துவிட்டானா?


முதலைக்கு கொஞ்சநஞ்சம் உயிர் மிச்சமிருந்தாலும் அதைத் தீர்த்துவிட வேண்டியதுதான்.
என்று, தனது வாளை உருவிக் கொண்டு முதலையை நோக்கி வருகிறான் வந்தியத்தேவன்.
பெண்கள் அனைவரும் வந்தியத் தேவனையே பார்க்கிறார்கள், அவன் என்ன செய்ய போகிறான் என்று.
இவன் எதற்காக வாளை உருவிக் கொண்டு இவ்வளவு ஆவேசமாக வருகிறான்?
அப்போது முதலையின் தலையில் பாய்ந்திருந்த ஈட்டி ஆடி, ஒரு பக்கமாக சாய்ந்து விழுகிறது.


அப்போது அங்கிருந்த அனைவரும் கலகலவென சிரிக்கிறார்கள்.
இவர்கள் எதற்காக இப்படி சிரிக்கிறார்கள்?
முதலையின் அடி பகுதியில் அடைத்து வைக்கப்பட்டிருந்த நார்கள் மெதுவாக வெளியே வருகின்றன. ஆம், அது பொம்மை முதலை.
அதைக் கண்ட வந்தியத்தேவன்.
ஆஹா... இவர்களின் விளையாட்டில், நாம் வந்து அகப்பட்டுக்கொண்டோமே. இனி சோழநாட்டு பெண்களிடம் நாம் ஜாக்கிரதையாகத்தான் இருக்க வேண்டும்.



வாழ்க்கையில் இதெல்லாம் சகஜமப்பா....
என்பது போல் பாவனை செய்துவிட்டு,
விட்டால் போதும் என்று, தனக்கு ஏற்பட்ட அவமானத்தை வெளிகாட்டிக் கொள்ளாமல் அங்கிருந்து விரைந்து தஞ்சையை நோக்கி செல்கிறான் நம் நாயகன் வந்தியத்தேவன்.


திருவையாறு
காவேரி பாயும் இடமெல்லாம் தனி சிறப்பை பெறுகின்றன. அதில் தஞ்சை நெற்களஞ்சியமாகவும், திருவையாறு இசை களஞ்சியமாகவும் திகழ்கிறது. இங்குதான் இசைமேதை தியாகராஜர் பிறந்து கர்நாடக இசையை வளர்த்தார். இன்றும் வருடா வருடம் திருவையாறு இசை திருவிழாவை நடத்தி, கர்நாடக இசையை பேணி, காத்து வருகிறார்கள். இன்றைக்கும் திருவையாறில் இசை மணம் கமழ்கிறது என்றால், அக்காலத்தைப் பற்றி நான் சொல்ல வேண்டுமா என்ன? வாருங்கள், நமது நாயகன் வந்தியத்தேவன் திருவையாறுக்கு வருகிறான். நாமும் அவனுடன் சேர்ந்து பயணிப்போம்.


திருவையாறில் மக்கள் நீராடிக் கொண்டிருக்கிறார்கள்.
அதில் சிலர் கழுத்துவரை நீரில் மூழ்கி இசை சாதகம் செய்கிறார்கள்.
அருகே இருந்த ஒரு அரசமரத்தடியில், ஆசிரியர் மாணவர்களுக்கு இசையின் அடிப்படை பாடங்களை கற்றுத் தருகிறார்.
ச..ரி..க..,
மா...
ப..த..நி..சா...
என்று பாடி முடிக்கிறார்.


ஆசிரியர் பாடுவதற்கு இடையில் மாடு "மா..." என்று கத்தியதையும், அதை ஆசிரியர் இணைத்து பாடியதையும்கேட்ட மாணவர்கள் சிரிக்கின்றனர்.
அதைக் கண்ட வந்தியத்தேவன், அருகில் வந்த வழிப்போக்கனிடம்,
ஐயா, இது எந்த ஊர்?
தம்பி, இது கூடவா உனக்கு தெரியவில்லை, இது திருவையாறு!
ஓஹோ, இதுதான் திருவையாறா! அதான் தமிழிசை மணம் கமழ்கிறது.



ச...
ரி...
க...
ம...
ப...
த...
நி...
ச...
என்று பாடியபடி நீரில் விளையாடுகிறார்கள்
இசையை இவர்கள் விளையாட்டாகவே பழகுகிறார்களே!
திருவையாறில் மக்கள் இசை பயிற்சி செய்வதையும், நீராடி மகிழ்வதையும், திருவையாறின் இயற்கை வளங்களை ரசித்துக் கொண்டும் வருகிறான் வந்தியத்தேவன்.


சங்கீத வித்வான்கள், தங்களின் வீட்டின் திண்ணையில் அமர்ந்தபடி அவரவர்களின் இசை வாத்தியங்களை மீட்டுகிறார்கள்.


திருவையாறு இன்றைக்கே இப்படி இருக்கிறதென்றால் வருங்காலத்தில் சொல்லவா வேண்டும்?


இவ்வாறு எண்ணிக்கொண்டு இருக்கையில், குதிரை ஒரு மேடான பகுதியை வந்தடைகிறது. அங்கிருந்து தூரத்தில் தஞ்சை கோட்டை தெரிகிறது. அதைக் கண்ட வந்தியத்தேவன்...
எப்படியோ இவ்வளவு தூரம் வந்து விட்டோம். ஆனால் தஞ்சை கோட்டைக் குள் செல்லாமல் நாம் வந்த வேலை பூர்த்தி அடையாது!


சின்ன பழுவேட்டரையரின் கட்டுக் காவலை மீறி தஞ்சை கோட்டைக்குள் செல்வது என்பது, எமனிடம் சென்று மீண்டு வருவது தந்து சமம் என்பார்களே! அப்படி இருக்கையில் தஞ்சை கோட்டைக்குள் நாம் எப்படி செல்வது? ம்....
அப்போது தூரத்தில் ஒரு பல்லக்கு செல்வதை கவனிக்கிறான்.
ஆஹா, நேற்று மதுராந்தகர் வந்த பல்லக்கு அல்லவா இது!


எப்படியோ நம் அதிர்ஷ்டம் நம்மை கை விடவில்லை. மதுராந்தகரை சந்தித்தால் கோட்டைக்குள் செல்ல ஏதாவது உதவி கிடைத்தாலும் கிடைக்கலாம்.
முதிய வயதில் திருமணம் செய்து கொண்டது பழுவேட்டரையருக்கு எவ்வளவு வசதியாக போய்விட்டது. அதை பற்றி நமக்கு என்ன வந்தது.
என்று நினைத்த வந்தியத்தேவன், பல்லக்கை நோக்கி குதிரையை விரட்டுகிறான்.
குதிரை சீறிப் பாய்கிறது.


பல்லக்கை தூக்கிக் கொண்டு காவலர்கள் செல்கிறார்கள்.


அவர்களை நெருங்கி வந்துவிட்டான் வந்தியத்தேவன்.


வந்தியத்தேவன் பின் தொடர்வதை கண்ட காவலன்.
யார் நீ? எங்களை ஏன் பின் தொடர்ந்து வருகிறாய்?
காவலன் கூறியதை சற்றும் பொருட்படுத்தாத வந்தியத்தேவன்.


பல்லக்கை முந்திச் சென்று..,
நானா உங்களை பின் தொடர்கிறேன்? நீங்கள்தான் என்னை பின் தொடர்ந்து வருகிறீர்கள். (என்று வாதம் செய்கிறான்)
தம்பி, இது ராஜபாட்டை இதில் அரசகுலத்தவர் மட்டுமே செல்ல வேண்டும்.


நானும் அரசகுலத்தை சேர்ந்தவன்தான்.
தம்பி.. உன்னுடன் விவாதம் பண்ண முடியாது. நீ ஒன்று செய், சற்று தாமதித்து பின்னே வா.
அல்லது எங்களுக்கு முன்னே செல்.
வந்தியத்தேவன் காவலன் கூறியதை கேட்காதது போல் கூடவே வருகிறான்.
இவன் இப்படியெல்லாம் சொன்னால் கேட்க மாட்டான்.







என்ன இது, மதுராந்தகர் இருந்த பல்லக்கில் இப்போது மாயமோகினி அல்லவா இருக்கிறாள்! இவள் பழுவூர் இளையராணி நந்தினி ஆயிற்றே. இவள் எப்படி இதில் வந்தாள்!!!


பல்லக்கினுள் இருப்பது யார் என்றே அறியாத வந்தியத்தேவன், மதுராந்தகரை சந்தித்து ஏதாவது உதவி பெறலாம் என்ற எண்ணத்தோடு அந்த பல்லக்கை தொடர்ந்து வருகிறான்.
அதற்குள் தஞ்சை கோட்டையும் நெருங்கிவிட்டது.
இளவரசரை சந்தித்தே ஆகவேண்டும். கிடைத்த இந்த வாய்ப்பை நழுவ விடக்கூடாது.
அப்போது ஒரு காவலன்..,
தம்பி, எத்தனை முறை உன்னிடம் சொல்வது? ஒன்று முன்னாடி போ அல்லது பின்னாடி வா.
அதை கேட்ட வந்தியத்தேவனுக்கு, சட்டென்று ஓர் யோசனை உதயமானது!


சரி, நீங்கள் கூறியபடியே நான் முன்னே செல்கிறேன்.
என்று கூறி குதிரையின் அடி வயிற்றில் உதைக்கிறான்,
அவன் எண்ணத்தை புரிந்து கொண்ட குதிரை முன்னங்கால்களை தூக்கி பின்னோக்கி வந்து பல்லக்கை இடிக்கிறது. ஆனால் வந்தியத்தேவனோ,


இளவரசே! இளவரசே!
பல்லக்கு தூக்கும் ஆட்கள் எனது குதிரையின் மேல் வேண்டும் என்றே வந்து மோதுகிறார்கள்.
என்று பொய்யாக கூறிக் கொண்டு, அவனே தன் குதிரையை பல்லக்கின் மீது மோதுகிறான்.
இளவரசே! இளவரசே!
என்று குரல் கொடுத்த வந்தியத்தேவனை, காவலர்கள் ஈட்டி முனையில் மடக்குகிறார்கள்.
பிடியுங்கள் அவனை.


அட! இவனுக்கு எப்படி இளவரசர் மதுராந்தகர் பல்லக்கில் பயணம் செய்தது தெரிந்தது!
என்று குழப்பமடைந்த நந்தினி,
அவன் யார் என்பதை தெரிந்து கொள்ள, பல்லக்கின் திரையை விலக்குகிறாள்.
நிறுத்துங்கள்!


அட! என்ன இது பெண்ணின் குரல் கேட்கிறதே!
குரல் கேட்ட திசையை நோக்கி திரும்பிய வந்தியத்தேவன்,
தா.. தா.. தாங்கள் பழுவூர் இளையராணி தானே! (என்று நந்தினியை கண்டு தடுமாறுகிறான்)
ஆமாம், நான் பழுவூர் இளையராணி நந்தினி தான்!
ஆஹா! கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்த மாதிரி அல்லவா இருக்கிறது! தங்களை பார்ப்பதற் காகவே இத்தனை தூரம் வந்தேன்.
(மனதிற்குள்) ஆஹா... இத்தகைய பெண்ணழகு இவ்வுலகில் இருக்க கூடுமோ! இவள் குரலை கேட்டு நமது தலை ஏன் இப்படி கிறுகிறுக்கிறது!


சற்றுமுன் நீ என்ன சொன்னாய்? பல்லக்கு தூக்கும் ஆட்களை பற்றி ஏதோ முறையிட்டாயே? அவர்கள் பல்லக்கை கொண்டு வந்து உனது குதிரையின் மீது மோதினார்களா? ம்...
அவள் குரல் கேட்டு மயங்கி...
ஆஹா...! காஞ்சிப்பட்டின் மென்மையும், கள்ளின் போதையும், காட்டுத்தேனின் இனிப்பும், கார்காலத்து மின்னலின் ஜொலிப்பும் ஒரு பெண் குரலில் கலந்திருக்க முடியுமா? இதோ அவ்விதமே கலந்து இருக்கின்றனவே!
நந்தினி தன் குரலை உயர்த்தி,
என்ன? நான் கேட்பது உனது காதிலே விழவில்லையா?


நந்தினியின் உரத்த குரல் கேட்டு சுதாரித்துக் கொண்ட வந்தியத்தேவன்,
ஆம் மகாராணி! இவர்கள் அப்படித் தான் செய்தார்கள்! என் குதிரை பாவம் மிரண்டு போய்விட்டது.
நீயும் மிரண்டுதான் போய் இருக்கிறாய்? துர்க்கை அம்மன் கோயில் பூசாரி யிடம் சென்று வேப்பிலை அடிக்கச் சொல்லு! பயம் தெளியட்டும். (என்று நய்யாண்டி செய்கிறாள்)
நந்தினியின் கேலி பேச்சை கேட்டு சிரிக்கிறான் வந்தியத்தேவன்.
சட்டென்று கோபம் கொண்ட நந்தினி,
வேடிக்கை பேச்செல்லாம் என்னிடம் வேண்டாம். உண்மையை சொல்! யார் நீ?


நான் வாணர் குலத்தை சேர்ந்தவன்! எனது பெயர் வல்லவரையன் வந்தியத் தேவன். காஞ்சியிலிருந்து வந்திருக்கிறேன்.
காஞ்சியில் இருந்து வந்திருக்கிறான் என்றால் நிச்சயம் கரிகாலன் ஆளாகத் தான் இருப்பான்.
நீ எதற்காக பல்லக்கின் மேல் உன் குதிரையை கொண்டு மோதினாய்?
(சற்று மெல்லிய குரலில்) ஆழ்வார்க்கடியான் தங்களிடம் தெரிவிக்கும் படி ஒரு செய்தியை கூறி அனுப்பினார். அதற்காகவே இந்த சூழ்ச்சியை செய்தேன்.
இவன் மிகப் பெரிய ஜாலக்காரனாய் இருக்கிறானே, இவனை நம் அந்தபுரத் திற்கு வரவழைத்து விசாரிப்பதுதான் சரியாக இருக்கும்.


சரி, நடு சாலையில் நின்று பேசுவது உசித
மல்ல, நாளை என் அரண்மனைக்கு வா!
எல்லா விஷயமும் அங்கே விவரமாக
பேசிக்கொள்ளலாம்.
கோட்டைக்குள் நான்
எப்படி வருவது?
நந்தினி உடனே தனது முத்திரை
மோதிரத்தை கழட்டி,
இதை காட்டினால் கோட்டைக்குள்ளும்
விடுவார்கள், என் அரண்மனைக்குள்ளும்
விடுவார்கள்.
என்று கூறிவிட்டு, பனைமரச் சின்னம்
பொறித்த முத்திரை மோதிரம் ஒன்றை
அவனிடம் கொடுக்கிறாள்.



இனியும் என்னை பின் தொடர்ந்து வரவேண்டாம். ஜாக்கிரதை!
என்று கூறிவிட்டு திரையை மூடிக்கொள்கிறாள் நந்தினி. பல்லக்கு அங்கிருந்து புறப் படுகிறது.
ஆஹா! பூரண சந்திரனை இராகு விழுங்கும் பொழுது சிறிது சிறிதாகத்தான் விழுங்கும், ஆனால்...
இந்த பல்லக்கின் திரைகள் அந்த பேசும் மதிமுகத்தை ஒரு நொடியில் கபளீகரம் செய்துவிட்டனவே. ஒரு சில வினாடிகள் சந்தித்த நம் நிலைமையே இப்படியென்றால்...


... இந்த மோகினியின் காலடியில் அந்த கிழவர் அடிமை பூண்டு கிடப்பதாக நாடு நகரங்களில் பேசுவதெல்லாம் உண்மையாகவே இருக்கலாம். எது எப்படியோ நாம் எப்படி கோட்டைக்குள் செல்வது என்று எண்ணியிருந்தோம், நம் அதிர்ஷ்டம் இப்போதும் நம்மை கைவிடவில்லை. இருட்டுவதற்குள் தஞ்சை கோட்டையை சென்று அடைந்திட வேண்டும்.


சோழநாட்டின் தலைநகரம் தஞ்சை கோட்டை
கோட்டையின் வெளிப்புறத்தில் மக்கள் பெருந்திரளாக கூடி இருக்கிறார்கள். அக்கூட்டத்தில் மக்களோடு மக்களாக வந்தியத்தேவன் குதிரையின் மேல் அமர்ந்தபடி காத்திருக்கிறான்.
பூட்டிய கோட்டைக்கு முன்னால் இவர்கள் எல்லாம் எதற்காக நிற்கிறார்கள்!
அப்போது அவன் அருகில் சேந்தன் அமுதன் கையில் பூக்கூடையுடன் நிற்கிறான்.
ஆஹா! மலர்களின் வாசம் அற்புதமாக இருக்கின்றதே!


அருகில் இருக்கும் சேந்தன் அமுதனை பார்த்து,
ஐயா! எல்லோரும் எதற்காக வீதி ஓரம் ஒதுங்கி நிற்கிறார்கள்? ஏதாவது ஊர்வலம் கீர்வலம் வரப் போகிறதா?
தாங்கள் இந்த பகுதிக்கு புதியவரா? நீங்கள் எந்த ஊர்?
நான் தொண்டை நாட்டை சேர்ந்தவன்.
ஓஹோ அப்படியா!
தாங்கள் குதிரை மேலிருந்து கீழே இறங்கி நிற்பது நல்லது. (என்று எச்சரிக்கை செய்கிறான்.)


ஆமாம், எதற்காக என்னை இறங்க சொல்கிறாய்?
இப்போது வேளக்காரப் படை கோட்டைக்குள்ளிருந்து வெளி வரப்போகிறது..,
அந்நேரத்தில் நீங்கள் குதிரை மேல் இருந்தால் உங்களையும், உங்கள் குதிரையையும் கொண்டு சென்றுவிடுவார்கள்.
இதை கேட்ட வந்தியத்தேவன் ஆச்சர்யத்துடன்,
குதிரையையும் ஆளையும் கொண்டு போனால் சும்மா விடுவார்களா?


தங்களின் நன்மை கருதியே நான் இதை கூறுகிறேன்.
என்ன?
அப்பொழுது பறை, கொம்பு, எக்காளம் முதலிய வாத்தியங்களின் ஓசை பேரொலியாக கேட்கிறது.
என்ன இது இடி முழக்கம் போன்ற சத்தம் கேட்கிறது.
டும்..
டும்..
ஓசையை கேட்ட சேந்தன் அமுதன்,
சத்தம் கேட்குதா? வேளக்காரப் படை வெளியே வருகிறது! குதிரையை விட்டு உடனே இறங்கிவிடுங்கள்.
டும்..
டும்..
அதை கேட்ட வந்தியத்தேவன் குதிரையை விட்டு இறங்கி சேந்தன் அமுதனுடன் வந்து நிற்கிறான்.




பேரிடி முழக்கத்துடன் கோட்டையின் கதவுகள் திறக்கப்படுகின்றன. வேளக்காரப் படையின் கொடியை தாங்கி இரண்டு வீரர்கள் முன்னால் கம்பீரமாக வருகிறார்கள்.



தமிழ்நாட்டின் தெய்வமான முருகனுக்கு "வேளக்காரன்" என்ற பெயர் உண்டு! பக்தர்களை காப்பாற்றுவதற்காக சபதம் பூண்ட தெய்வம் என்பதால் முருகனுக்கு அப்பெயர் வந்தது.

அவ்வாறு வேளக்காரப் படையினரும் அவ்வப்போது, அரசு புரிந்த சோழ மன்னர்களுக்கு மெய்காப்பாளர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். தங்கள் உயிரை கொடுத்தாவது அரசரின் உயிரை காப்போம் என்று சபதம் செய்தவர்கள். தங்களை மீறி அரசர் உயிருக்கு ஆபத்து நேர்ந்துவிட்டால், துர்க்கையின் சந்நதியில் தங்களுடைய தலையை தங்கள் கையினாலேயே வெட்டிக் கொண்டு பலியாவதாக சபதம் எடுத்துக் கொண்டவர்கள். ஆகையினால் வேளக்காரப்படையினர் சோழநாட்டில் மிக மிக முக்கிய அந்தஸ்தை பெற்றிருந்தனர்.




வேளக்காரப் படையின் கொடியை தாங்கி வருபவர்களுக்கு பின்னால் ஒருவன் காளையின் மீது அமர்ந்தபடி தண்டோரா அடித்துக் கொண்டு வருகிறான்.




டும்..
டுடும்.
பூம்ம்ம்
பூம்ம்ம்...
அவர்களை தொடர்ந்து பலர் எக்காளத்தை ஊதிக்கொண்டும்,
தாரை தப்பட்டை அடித்துக் கொண்டும் வருகிறார்கள்.
டண்டட டக்கட, டக்கட,
டக்கட...


மேலும் ஆயிரம் வீரர்கள் தங்கள் ஈட்டிகளை மேலே தூக்கி கோஷமிட்டுக் கொண்டே கோட்டையை விட்டு வெளியே வருகின்றனர்.
தஞ்சையர் கோன்
வாழ்க!
வாழ்க!
வாழ்க!
சுந்தர சோழ மன்னர்
வாழ்க!




மதுரையும் ஈழமும் கொண்ட
மன்னன் இராஜகேசரி வாழ்க!
வாழ்க!
வாழ்க!
வாழ்க!
வாழ்க!


வீரபாண்டியனை சுரம் இறக்கிய பெருமான் வாழ்க!
வாழ்க! வாழ்க!


இவ்வாறு வேளக்காரப்படை கோஷமிட்டுக்கொண்டே வீறுநடை போட்டு புழுதி பறக்க கோட்டையை விட்டு வெளியே செல்கின்றனர்.


சோழநாட்டு மக்கள் வேளக்காரப் படையினர் மீது பெரும் மதிப்பு கொண்டிருந்தனர்.
சுந்தரசோழ மகாராஜாவுக்கு இந்த வேளக்காரப்படைதான் மிகப்பெரிய பாதுகாப்பு!
அவர்கள் மட்டும் இல்லன்னா....


ஏனப்பா, நம்ம சின்ன பழுவேட்டரையரை மீறி எமன் கூட மகாராஜாவை நெருங்க முடியாது! தெரியும்ல?
இவ்வாறு மக்கள் தங்களுக்குள் பேசிக்கொள்கிறார்கள்.







வேளக்காரப்படை தினமும் காலை கோட்டைக்குள் சென்று அரசரை தரிசித்துவிட்டு மாலை பொழுது கோட்டையை விட்டு வெளியேறுவது வழக்கம். அதன் பிறகு கோட்டை கதவுகள் மூடப்படும், முக்கியஸ்தர்களை தவிர வேறு எவருக்கும் உள்ளே செல்ல அனுமதி இல்லை. அப்படியென்றால் வந்தியத்தேவன் எப்படி கோட்டைக்குள் செல்வான்?

கோட்டை கதவுகள் மூடப்பட்டதால் சேந்தன் அமுதன் நட்பை பெற்று, இரவு தங்குவதற்கு ஏதேனும் இடம் கிடைக்குமா என்று விசாரிக்கிறான் வந்தியத்தேவன். சேந்தன் அமுதனோ, தன் வீட்டிலேயே தங்கும்படி அவனை அழைத்துச் செல்கிறான்.







இல்லை, இல்லை, சிறிய கோவில்தான். தஞ்சையில் துர்க்கை அம்மன் கோவிலுக்குதான் அதிக மகிமை, அது பழுவேட்டரையரின் குல தெய்வம் என்பதால் அங்கேதான் பூஜை, புனஸ்காரம் என எல்லாம் நடைபெறுகிறது. இங்கு தரிசனம் செய்ய ஜனங்கள் அவ்வளவாக வருவதில்லை. (என்று வருத்தப்படுகிறான்)
இவ்வாறு பேசிக்கொண்டே இருவரும் சேந்தன் அமுதனின் வீட்டிற்கு செல்கிறார்கள்.


சேந்தன் அமுதனின் இல்லம்.
நண்பரே தயங்காமல் உள்ளே வாருங்கள்.
தன் தாயிடம் வந்தியத்தேவனை அறிமுகம் செய்து வைக்கிறான்.
இருவருக்கும் ஆப்பம், பணியாரம், தேங்காய்பால் ஆகியவற்றை அன்புடன் பரிமாறுகிறார் சேந்தன் அமுதனின் தாய். வந்தியத்தேவன் அனைத்தையும் ஒரு பிடி பிடிக்கிறான்.


நண்பா, என்ன யோசிக்கிறீர்?
என் தாயின் நினைவு வந்துவிட்டது.
அமுதா, உன் அன்னையின் கை பக்குவம் பிரமாதம்.
என் தாய்க்கு பேசவும், கேட்கவும்தான் முடியாதே ஒழிய, மற்றபடி மிகவும் ஞானம் பெற்றவள்.
அந்நேரத்தில் குதிரை, தன்னுடைய பசியை எஜமானுக்கு உணர்த்த கனைக்கிறது.
அதற்கு கொள்ளும் புல்லும் உணவாக தருகிறார்கள்.


அழுதா, உன் குடும்பத்தில் நீயும் உன் அன்னையும் மட்டும்தானா, அல்லது வேறு யாரேனும் சொந்த பந்தங்கள் இருக்கிறார்களா?
இருக்கிறார்கள் நண்பா, எனக்கு ஒரு பெரிய அன்னையும், மாமாவும் உள்ளார்கள். மாமா கோடிக்கரையில் உள்ளார். அவருக்கு பூங்குழலி என்று ஒரு அழகிய மகளும் இருக்கிறாள்.
மாமன் மகளை உனக்கு ரொம்ப பிடிக்குமோ?
ஆமாம் ரொம்ப பிடிக்கும்! இறைவனே என் முன்னால் தோன்றி நீ சுந்தரமூர்த்தியை போல் இந்த உடம்போடு கைலாயத்துக்கு வருகிறாயா? அல்லது பூலோகத்தில் பூங்குழலியுடன் வாழ்கிறாயா? என்று கேட்டால், பூங்குழலியுடன்தான் வாழ்வேன் என்று சொல்லுவேன். ம்... ஆனால், நான்தான் அவளுக்கு சற்றும் தகுதி அற்றவன்.


இவ்வாறு தங்களது காதல் கதைகளை பேசிக் கொண்டே இருவரும் உறங்கி விடுகிறார்கள்.
நமது நாயகன் மீண்டும் கனவுலகத்தில் சஞ்சரிக்கத் தொடங்கிவிட்டான்...
அவனுடைய கனவில் பழுவூர் இளைய ராணி நந்தினிதேவி வருகிறாள்.
ஆஹா... என்ன அழகு!
அவளின் காந்தப் பார்வை அவனை செயலிழக்கச் செய்கிறது.
அந்த பார்வை அவனை சிறு வயதில் நடந்த சம்பவத்திற்கு அழைத்துச் செல்கிறது.
அங்கே அவன் காட்டு வழியாக சென்று கொண்டிருக்கிறான்.
அப்போது திடீர் என்று ஒரு பாம்பு அவன் எதிரில் தோன்றி படமெடுத்து ஆடுகிறது.


அதை மெய்மறந்து கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டே இருக்கிறான்.
பாம்பின் காந்தப் பார்வை அவனை செயல் இழக்கச் செய்கிறது.
அதன் ஆட்டத்திற்கு ஏற்றாற் போல் அவனது உடம்பும் ஆடுகிறது.
திடீர் என்று எங்கிருந்தோ வந்த ஒரு கீரிப்பிள்ளை, பாம்பின் மீது பாய்ந்து அதனுடன் துவந்த யுத்தம் புரிகிறது.
அப்போது தன் நிலையறிந்த வந்தியத் தேவன், அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஒரே ஓட்டமாக ஓடிவிடுகிறான்.
சீச்சீ, என்ன உதாரணம்!
இந்த புவன மோகினியான சுந்தராங்கியை படமெடுக்கும் பாம்போடு ஒப்பிடுவதா...? இவளுடைய பால் வடியும் முகத்தை ஒரு தடவை பார்த்தாலும் பசி தீர்ந்துவிடுமே!



அவளுடைய குரலிலேதான் என்ன மதுரம். அவள் ஒரு அபூர்வமான அழகிதான்.
ஆஹா, இவள் அல்லவோ பெண்! இந்த பெண்ணின் முகத்திலேதான் எத்தனை அழகு!
இந்த இரண்டு முகங்களும் அழகிய முகங்களாயினும், அதற்குள்தான் எத்தனை வேற்றுமை.
இதில் மோகனமும் கவர்ச்சியும் உள்ளது.
இதில் கம்பீரமும் பெருந்தன்மையும் உள்ளது.
வாசகர்களே, இப்படியே இவன் கனவில் இரண்டு பெண்களின் அழகையும் ஒப்பிட்டு கொண்டிருக்கட்டும், நாம் சென்று ஆழ்வார்க்கடியான் என்ன ஆனான் என்று பார்ப்போம்.


ஆ! இது எந்த இடம்? பார்க்கவே படுபயங்கரமாக தோற்றமளிக்கிறதே! கடும்போர் நடைபெற்ற இடம் போல் தெரிகிறதே! சரி, வந்தது வந்துவிட்டோம் பயப்படாமல் என்னுடன் வாருங்கள் உள்ளே சென்று எந்த இடம் என்று பார்ப்போம்.


திருப்புறம்பியம் பள்ளிப்படை
ஊ...... ஊளா.... ஊளா......
ஐய்யோ இது திருப்புறம்பியம் பள்ளிப்படை ஆயிற்றே! பள்ளிப்படை என்றாலே மனம் பதறுகிறது. பள்ளிப்படையை பற்றி தெரிந்து கொண்டால், தாங்களும் இவ்வாறுதான் பதறுவீர்கள்.


உலக சரித்திரம் அறிந்தவர்கள் வாட்டர்லூ போர், பானிபட் போர், பிளாசிப் போர் போன்ற சில போர்களின் மூலம் உலக சரித்திரத்தின் போக்கே மாறியது என்பதை அறிவார்கள். தமிழகத்தை பொறுத்தமட்டில் திருப்புறம்பியம் போர் அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது. "கரிகால் வளவன்" பெருநற்கிள்ளி, இளஞ்சேட் சென்னி, தொடித்தோட் செம்பியன் முதலிய பழைய சோழகுல மன்னர்கள் தமிழ்நாட்டை மிக சீரும் சிறப்புமாக ஆட்சி செய்து வந்தார்கள். அதன் பின் ஐநூறு, அறுநூறு ஆண்டுகளாக சோழகுல புகழ் குறைந்து கொண்டே வந்தது. வடக்கே பல்லவர்களும், தெற்கே பாண்டியர்களும் பலம் பெற்றிருந்தார்கள். அது சோழர்கள் சிற்றரசர்களாக இருந்த காலம். அப்போது பாண்டியர்களுக்கும், பல்லவர்களுக்கும் நடக்கும் போரில் மாறி, மாறி பங்கெடுத்து, சோழர்கள் தங்களின் போர் குணத்தை குறையாமல் பார்த்துக் கொண்டனர். இறுதியாக திருப்புறம்பியம் போரில் பல்லவர்களுடன் இணைந்து பாண்டியர்களை எதிர்த்தனர். போரில் தோல்வியுறும் தருவாயில், அப்போரின் போக்கை மாற்றியமைத்தார் விஜயாலய சோழன். இவர் பல போர்களில் பங்கெடுத்து தன் மேனியில் தொண்ணூற்றாறு விழுப்புண்களை பெற்றவர்.
*"எண்கொண்ட தொண்ணூற்றின்
மேலுமிரு மூன்று
புண்கொண்ட வெற்றிப் புரவலன்..."
இவ்வாறு புலவர்களால் பாடப்பெற்ற வீராதிவீரர், இவருக்கு இணையான வேறொரு வீரனை வரலாற்றில் எங்குமே காணமுடியாது. அப்படி என்னதான் வீரச்செயல் புரிந்தார் என எண்ணுகிறீர்களா? அப்படி என்றால் அவரை களத்தில் சென்று பார்ப்போம் வாருங்கள்!
* கவிதை
நமது கதை நடந்த காலத்துக்கு சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னால்,


அப்பா, பாண்டிய மன்னன் வரகுணவர்மனிடமிருந்தும், பல்லவ மன்னன் அபராஜிதவர்மனிடமிருந்தும் அழைப்பு வந்திருக்கிறது. தாங்கள்தான் கூற வேண்டும், நாம் யாருடன் இணைந்து யாரை எதிர்ப்பது என்று.


மகனே ஆதித்தா, பாண்டியன் அருகிலேயே இருப்பவன். அவன் பலம் பெறுவது நமக்கு நல்லதல்ல. ஆகையால், இம்முறை பல்லவனுடன் இணைந்து பாண்டியனை எதிர்க்க வேண்டும். அதுதான் நமக்கு நல்லது.
ஆகட்டும் தந்தையே.

திருப்புறம்பியம் எனுமிடத்தில் பாண்டிய நாட்டு பெருஞ்சேனையும், பல்லவ நாட்டு பெருஞ்சேனையும் அனைத்து விதமான படைகளுடன் இறுதி யுத்தத்துக்கு ஆயத்தமாக உள்ளனர்.

பாண்டியர்களை எதிர்க்க சோழர்படை பல்லவர்களோடு இணைந்து, ரத, கஜ, துரக, பதாதிகளுடன் யுத்தத்துக்கு ஆயத்தமாக உள்ளது.




பாண்டிய நாட்டு படை


பல்லவ நாட்டு படை


சிறிய அளவிலான சோழநாட்டு படை


போர் முழக்கம் எழுப்புகின்றனர்
யுத்தம் துவங்கிவிட்டது.
பமபம
பமபம
பமபம


யானை படை, குதிரை படை, காலாட் படையென அனைத்து படைகளும் ஒன்றுடன் ஒன்று மோதின.


யுத்த களத்தில் இருதரப்பினரும் மாறி மாறி அம்பு மழை பொழிந்தார்கள்.


மூன்று நாட்கள் இடைவிடாது
யுத்தம் நடைபெறுகிறது.

மூன்றாம் நாள் போர் உச்சகட்டத்தை அடைந்தது. இருதரப்பினரிடையே யார் வெற்றி கொள்வார் என்பதை கணிக்க முடியாதபடி போர் கடுமையாக நடந்தது. திரும்பிய திசையெல்லாம் இரத்த ஆறு ஓடியது.




ஆனால், நான்காம் நாள் யுத்தத்தின் போக்கே மாறுகிறது. பல்லவ படை களைப்படைய, மறவர் குல பாண்டியர்களோ களைப்பு என்றால் என்னவென்றே அறியாதவர்களாக இருக்கிறார்கள்! பாண்டியர்களின் கை ஓங்குகிறது! பல்லவ படை தோற்று பின் வாங்குகிறது.
தொடரும்...

# அருஞ்சொற்பொருள்

காஞ்சி - இன்றைய காஞ்சிபுரம்

வடபெண்ணை - ஆந்திர மாநிலத்தில் ஓடும் ஆறு

பாசறை - போர் நடைபெறும் இடத்தில் வீரர்கள் தங்கும் இடம்

அந்தப்புரம் - அரண்மனைக்குள் மகாராணி, இளவரசி மற்றும் அரசிளங்குமரிகள் வசிக்கும் பகுதி

பளிங்கு மாளிகை - பளிங்கு கற்களால் ஆன மாளிகை

பண்டக சாலை - உணவுப்பொருட்கள் சேமித்து வைக்கும் இடம்

லாயம் - குதிரைகளை பராமரிக்கும் இடம்

தாதிப்பெண் - பணிப்பெண்

சூரசம்ஹாரம் - முருகன் சூரனை வதம் செய்யும் புராண நிகழ்வு

சந்நதம் - சாமி வந்து ஆடுதல்

உடுக்கை - தோலினால் ஆன இசை கருவி

தேவராட்டி - அருள்வாக்கு சொல்பவள்

தேவராளன் - அருள்வாக்கு சொல்பவன்

இறை விதிப்பது - வரி விதிப்பது

ஈழ நாடு - இன்றைய இலங்கை

தசரதர், ராமர் - இராமாயண கதை

வைதும்பராயர், முத்தரையர், பல்லவர் - தமிழகத்தை ஆண்ட அரசகுலங்கள்

வெள்ளூர், திருப்புறம்பியம் - போர் நடந்த பகுதிகள்

இரட்டை மண்டலம், வேங்கி, இரட்டைபாடி - சோழ சாம்ராஜ்யத்தின் எதிரி நாடுகள்

# அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| ராஷ்ட்டிரகூடர் | - | சோழ சாம்ராஜ்யத்தின் எதிரி நாடு |
| தத்தம் | - | அர்ப்பணிப்பு / தாரை வார்த்தல் |
| சம்புவரையர், மழவரையர் பழுவேட்டரையர் | - | சோழ நாட்டின் குறுநில மன்னர்கள் |
| ஜாமம் | - | நள்ளிரவு |
| பிற்காலம் | - | 9 - 13 ஆம் நூற்றாண்டு வரை சோழர்கள் ஆண்ட காலம் பிற்காலம் என அழைக்கப்படுகிறது. |
| தக்கோலம் | - | போர் நடைபெற்ற ஊர் |
| பூதுகன் | - | கங்க நாட்டு மன்னன் |
| சீர் | - | நல்ல நிலையில் இருப்பது |
| நித்திரா தேவி | - | உறக்கத்தின் மற்றொரு பெயர் |
| ஜாடை மாடை | - | மறைமுகமாக பேசுவது |
| ஊர்த்துவ புண்டரம் | - | திருநாமம் / வைணவர் நெற்றியில் கீழிருந்து மேற்செல்லத் தரிக்கும் குறி |
| பிராயம் | - | வயது |
| குடந்தை | - | தற்போதைய கும்பகோணம் |
| தஞ்சை | - | தற்போதைய தஞ்சாவூர் |
| சமிக்ஞை | - | மறைமுக அடையாளம் / சைகை |
| கைங்கர்யம் | - | தொண்டு அல்லது சேவை |
| திரிபுர சம்ஹாரம் | - | திரிபுரர்கள் என்ற அசுரர்களை வதம் செய்த நிகழ்வு |

# அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| கர்வ பங்கம் | - | தன்னைப் பற்றி உயர்வாக எண்ணும் எண்ணத்திற்கு ஏற்படும் கேடு. |
| அகோரப்போர் | - | அதிபயங்கரமான போர் |
| உடன்படிக்கை | - | இருநாடுகள் அல்லது அமைப்புகள் ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காக செய்து கொள்ளும் ஒப்பந்தம். |
| ஈழ மண்டலம் | - | தற்போதைய இலங்கை |
| பாசாங்கு | - | பொய்யான நடிப்பு / வஞ்சகம் |
| புறம் பேசுவது | - | ஒருவர் இல்லாத போது அவரைப் பற்றி குற்றம் குறை சொல்லுதல் |
| அபாயம் | - | ஆபத்து |
| சாமர்த்தியம் | - | திறமை |
| அபிமானம் | - | நன் மதிப்பு / உயர்வான எண்ணம் |
| பிரகஸ்பதி | - | தேவர்களின் குரு |
| அரிசிலாறு | - | தற்போதைய அரசலாறு. இது கும்பகோணம் பகுதி சாக்கோட்டையில் ஓடுகிறது |
| ரதம் | - | தேர் |
| சாஸ்திரம் | - | வேதாந்தம் / சோதிடம் |
| பீடிகை | - | அறிமுக உரை |
| புலால் | - | அசைவ உணவு |
| மங்களம் | - | வாழ்த்துகள் |
| ஜாலம் | - | தந்திரம் மிகுந்த நடிப்பு / அற்புதம் |

# அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| அதிகப்பிரசங்கி | - | தேவையில்லாமல் ஒன்றைப் பேசும் அல்லது செய்யும் நபர் |
| ஜோதிடர் | - | வருங்காலத்தை கணித்து சொல்பவர். |
| ராஜபாட்டை | - | அரசர்களும், அமைச்சர்களும் பயன்படுத்தும் சிறப்புச்சாலை. |
| நய்யாண்டி | - | கேலியும் கிண்டலும் கலந்த பேச்சு. |
| ஜாலக்காரன் | - | தந்திரம் மிகுந்த நடிப்பு திறன் கொண்டவன் |
| கபளீகரம் | - | அழித்தல் / அபகரித்தல். |
| பறை, கொம்பு, எக்காளம் | - | தமிழர்களின் பாரம்பரிய இசைக் கருவிகள். |
| எக்காளம் | - | "பொம்" என்ற ஒலியை எழுப்பும் பித்தளையால் ஆன நீண்ட ஊது கருவி. |
| கைங்கரியம் | - | தொண்டு அல்லது சேவை. |
| ரத, கஜ, துரக, பதாதிகள் | - | நான்கு வகை படைகள். |
| துவந்த யுத்தம் | - | இரண்டு நபர்கள் மட்டும் செய்துக் கொள்ளும் யுத்தம். |
| பள்ளிப்படை | - | போர்க்களத்தில் உயிர் துறந்த மாவீரர்களின் நினைவாக வீரக்கல் நட்டு அத்துடன் ஒரு தெய்வத்தின் சிலையையும் வைத்து வழிபடுவதே பள்ளிப்படை. |